
தீண்டிச் சென்ற
தென்றல்
உமா பாலகுமார்

## உள்ளே...

தீண்டிச் சென்ற தென்றல் 5

நேசம் தந்தவள் நீதானே! 103

★

# தீண்டிச் சென்ற தென்றல்

## 1

விடியல் தன் முகவரியை பூமியில் பதித்துக் கொண்டிருந்தது. புள்ளினங்கள், பனி படர்ந்த கிளைகளில் தன் பாதம் பதித்து, பூபாளம் இசைத்துக் கொண்டு இருந்தன.

புலர்ந்தும் புலராத அந்தப் பொழுது, வண்டுகள் புணர்ந்ததற்காய் பனியில் குளித்துக் கொண்டிருந்த மலர்களுடன் விடிந்து கொண்டிருந்தது. புகை படர்ந்த பனி, மலர்களை வருடி தூய்மையாக்கிக் கொண்டிருந்தது.

விடிகாலைக் குளிருக்கு இதமாய்ப் போர்த்திக் கொண்டு, ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த ம்ருணநயனியை டெலிபோன் மணியின் அழைப்பு உசுப்பி எழுப்பியது.

சோம்பலுடன் தூக்கக் கலக்கமும் சேர்ந்து கொள்ள, இந்த நேரத்தில் அழைப்பது யார் என்ற கேள்வி மனதைத் தீண்டியது. மெதுவாக கை உயர்த்தி படுக்கையின் அருகிலிருந்த போனை எடுத்தாள் அவள்.

''ஹலோ'' என்ற அவளுடைய மெலிந்த குரலுக்குப் பதிலாக, ''ஹலோ! நான் நந்தா பேசுறேன்'' என்று ஆழ்ந்த குரல்

கணீரென்று கேட்டதும் கைகள் சிசீவரை நழுவ விட்டன. ஒரு கனம் என்ன பேசுவதென்று தெரியாமல் மவுனம் காத்தாள் நயனி.

ஐந்து வருடங்கள் கடந்த பிறகும் அவனுடைய ஆழ்ந்த குரல் தன்னுள் இவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துவதை அவள் வேதனையுடன் உணர்ந்தாள்.

இத்தனை வருடங்கள் கழித்து, அவளுடன் முதல் முறையாகப் போனில் பேசுகிறான், மனுஷ் நந்தன். அவளை ஐந்து வருடங்களுக்கு முன் மணந்து கொண்ட அவளுடைய கணவன்.

நினைவுகளிலிருந்து கலைந்து நிமிர்ந்தவள். ''ஹலோ! அப்பாவுக்கு ஏதாவது? ஒன்னும் ப்ராப்ளம் இல்லையே?'' பதட்டத்துடன் அவள் முடிக்கும் முன்பே, அவனுடைய குரல் இடைமறித்தது.

''அங்கிளுக்கு, நேத்து நைட் சிவியரா நெஞ்சுவலி வந்து ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ணியிருக்கோம். உன்னை உடனே பார்க்கணும்கிறார். அதுக்காகத்தான் பண்ணினேன். நீ எப்ப கிளம்பி வரேன்னு சொன்னா, காரை ஸ்டேஷனுக்கு அனுப்ப வசதியாக இருக்கும்'' என்றான் நந்தா, குரலில் ஒருவித விலகல் தன்மையோடு.

''நான்... ஆபீசில சொல்லிட்டு, கார்லேயே கிளம்பி ர்றேன். நைட் அங்கே வந்துடுவேன். அப்புறம் அப்பாவுக்கு யப்படற மாதிரி எதுவும் இல்லையே...?'' கேள்வியை தரியமாக உதடுகள் வெளியிட்டாலும், பயத்தில் உள்ளம் மையாய் அழுதது.



''ம்... இல்லை. ஆனா கொஞ்சம் கிரிட்டிகல்தான். நீ கிளம்பி உடனே வா!'' என்று கூறிவிட்டு வைத்தான் நந்தா. அவன் கண்களில் வழிந்த கண்ணீர், சாரலாய் நெஞ்சை நனைத்தது. தன்னை வெகுவாக பாதித்தது. அப்பாவைப் பற்றிய செய்தியா.... இல்லை மனுவுடைய குரலின் விளைவா என்று அவளால் இனம் கண்டு கொள்ள முடியவில்லை.

திரும்பி, மணி என்னவென்று பார்த்தால் ஐந்தே முக்கால் ஆகியிருந்தது. கண்களை விட்டுப் பிரிந்து சென்ற உறக்கம், திரும்பி வரும் என்று தோன்றவில்லை. மனம் ஏனோ, கடந்த நாட்களை நினைவு கூறச் சென்றது.

நந்தாவை முதன் முதலாகப் பார்த்ததுபோது, நயனிக்கு பதினேழு வயது இருக்கும். நயனியின் தந்தை, ஏலகிரியில் பெரிய எஸ்டேட் ஓனர். சிறு வயதிலேயே அவளுடைய அம்மா இறந்து விட்டதால் பாசத்துடன் அவளை வளர்த்தவர். அவளுக்காகவென்றே அவர் இரண்டாவது திருமணமும் செய்து கொள்ளவில்லை.

அவருடைய எஸ்டேட்தான், மருதாசலத்துடைய உலகமே. நயனி, பள்ளிப்படிப்பு முடித்தவுடன் மேற்படிப்பு படிக்க சென்னைக்கு செல்வதாக கூறியபோது கூட அவர் அனுமதிக்கவில்லை. நயனிக்கு பேஷன் டிசைனிங் படித்து, நகரத்தில் பெரிய ஆடை வடிவமைப்பு நிறுவனம் நடத்த வேண்டும் என்பது அன்றைய ஆசையாக இருந்தது. ஆனால் அவள் தந்தை அதற்கு உடன்படவில்லை.

இந்த நிலையில் அவளுடைய பதினேழாவது பிறந்தநா வந்தது. தன் நண்பரும், பக்கத்து எஸ்டேட்டின் அதிபருமா விஷ்வலிங்கத்தையும் அவர் குடும்பத்தினரையும் விருந்துக் அழைத்திருந்தார் மருதாசலம்.

விஷ்வலிங்கத்தின் மகன் நந்தனை நயனி அதிகம் பார்த்ததில்லை. அவன் சென்னையிலேயே ஹாஸ்டலில் தங்கிப் படித்ததால், சிறுவயதில் அவனைப் பார்த்ததுதான். நந்தா, பி.இ. முடித்துவிட்டு வந்து தந்தையுடன் எஸ்டேட் சம்பந்தமான வேலைகளில் பொறுப்பேற்றிருந்த நேரம் அது.

அவளுடைய பிறந்தநாள் அன்று மாலை, தந்தை வாங்கித் தந்திருந்த அழகிய ஷாரரா உடையில் அவள் படிகளில் இறங்கி வந்த போதுதான், அவள் முதன் முறையாக நந்தாவைப் பார்த்தாள். ஹாலில் தன் தந்தையுடன் அமர்ந்து பேசிக் கொண்டு இருந்த அந்த மூவரில், அவன் மேல் நயனியின் பார்வை படிந்தது.

அவள் தன் தந்தையின் அருகில் சென்றபோது, அவளின் வருகை உணர்ந்து திரும்பியவர், உற்சாகமாக எழுந்து வந்தார். அவளைத் தோளணைத்து அன்புடன் அழைத்துச் சென்றவர், மூவருக்கும் அவளைப் பெருமையுடன் அறிமுகப்படுத்தினார்.

முதலில் விஷ்வலிங்கம் தான் கண்களில் பாசத்துடன் முன்வந்து அவளுக்கு வாழ்த்து தெரிவித்தார். அவருடைய மனைவியும் ஒரு பரிசை அளித்துவிட்டு வாழ்த்தினார். பிறகு நந்தாவுக்கு அவளை அறிமுகப்படுத்தியபோது, ஒரு பூங்கொத்தை அவளுக்குப் பரிசாக அளித்து நிமிர்ந்தவனின் கண்கள், நயனியின் விழிகளைத் தீண்டியது.

ஏனோ, அந்த நிமிடமே நயனியின் மனது தன்னை அறியாமலே அவன் வசம் சொல்லாமலேயே இடம் பெயர்ந்தது. தன் எதிரே கம்பீரமாய், ஆறடி உயரத்துக்கும் மேல், கருமை கலந்த மாநிறத்தில், கண்களில் ஒருவித



கூர்மையுடன், வசீகரமான முகத்துடன் ஒருவித இறுக்கமான தனித்தன்மையுடன் அவன் தன் விழிகளை ஊடுருவி தன்னை அளவு எடுத்ததும், நயனியின் தேகம் எங்கும் புதிதாய் மின்சாரம் பாய்ந்தது போன்ற உணர்வு ஏற்பட்டது.

அவனுக்குள்ளும் ஒரு வேக மின்னல்! அழகிய லேவண்டர்
நிற உடையில் தேவதையாய், சின்னஞ்சிறு பூப்போல்
குழந்தைத்தனம் விலகாத வெகுளியான அழகு முகத்துடன்
துறுதுறுவென்று கண்கள் வண்ணத்துப் பூச்சியாய் சிறகடிக்க
அவனை நோக்கிய அவளின் பார்வை அவனுக்குள்ளு
சாமரம் வீசுவதாய்... ஒரு பனிக்காலத் தென்றல் வந்து இதமா
தன்னைத் தீண்டியது போல் இருந்தது அவனுக்கு!

அவனைக் கண்டதும், மனம் தன்னைத் தந்ததும், தன்
அவன் வசம் இழுத்தது எது என்றும் புரியாமலே, இன்
அந்த நினைவுகள் புதிராய் மனதில் நிறைந்து நின்ற
நினைவுகள் தற்காலிக விடை பெறுதலோடு நீங்கிச் செ
அவசரமாக எழுந்து குளித்து, நயனி தயாரானாள்.

தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள இந்த ஐ
வருடங்களில் பழகி இருந்தாலும், காரில் அலுவலகத்து
கிளம்பிச் சென்றவளுக்கு, மீண்டும் மீண்டும் ப
நினைவுகளே மனதில் வந்து வட்டமிட்டது.

அவன் நினைவுகளை மீண்டும் மனம் அசை
ஆரம்பித்தது. அந்தப் பிறந்தநாளன்றுதான், தான் புதி
பிறந்தது போல ஒரு உற்சாகம் மனதில் எழுந்தது அவ
கேக் வெட்டி முடித்து விருந்து சாப்பிடும்போது, ஏனோ
கையகப்பட மறுத்தது. எங்கு மனதை திருப்பினா
நந்தனிடமே வந்து முடிவடைந்தது.

அனைவரும் சாப்பிட்டுவிட்டு சென்று கொண்டிருக்கும் போது, இயல்பாக அவன் திரும்பியபோது, அவன் பார்வையும் ஒரு நொடி தன் மீது படிந்து விலகியது உணர்ந்து மனம் படபடத்தது. தனக்குள் வந்த மாற்றமும் தவிப்பும் அவனுக்குள்ளும் இருக்குமோ என்று அறிய, மனம் விடை தேடி அலைந்தது.

அன்றைய விருந்து தடபுடலாகவும், நேர்த்தியாகவும் நயனியின் மவுனத்துடனும் முடிந்தது. சாப்பிட்டு முடிந்தவுடன் அவள் தந்தை அவளிடம், ''என்னடா! இன்னிக்கு எதுவுமே பேசமாட்டேங்கறே? அமைதியாக இருக்கே'' என்றார் கண்களில் கேள்வியுடன்.

படபடவென்று பேசும் தன் குணம், தன்னை விட்டு எங்கு சென்றது என்ற ஆச்சர்யம் மனதில் எழ, ''ஒண்ணுமில்லேப்பா! நீங்க எல்லாரும் பேசிட்டு இருந்தீங்க. அதான், சைலண்டா அப்சர்வ் பண்ணிட்டு இருந்தேன்'' என்றாள் மனதை வெளிக்காட்டாமல்.

விருந்து முடிந்து மூவரும் விடைபெற்று செல்லும் முன், உயர்ந்த நந்தனின் பார்வை அவள் மீது கூர்மையுடன் படிந்து விலகிச் சென்றது.

சொல்லாமலே தன் இதயத்தை சுமந்து சென்றவனை, பார்வை பின் தொடர்ந்து மனதில் இம்சை செய்தது நயனிக்கு. அன்று, தன்னை விட்டுத் தொலைந்து போன இதயம், இன்று வரை தன்னை வந்து சேரவில்லை என்று இன்றுதான் நயனிக்குப் புரிந்தது.

''மேடம்! ஆபீஸ் வந்துடுச்சி'' என்ற டிரைவரின் குரலால் தடைப்பட்டு போன நினைவுகளோடு நிமிர்ந்து தன்



அலுவலகத்தைப் பார்த்தாள். பேஷன் டிசைனிங் டெக்னாலஜி யும், அட்வர்டைசிங் துறையில் பயிற்சியும் முடித்து விட்டு, நயனியும், அவளுடைய நண்பன் மாதவனும் சேர்ந்து ஆரம்பித்த அந்த விளம்பர நிறுவனமும், ஆடை வடிவமைப்பு நிறுவனமும் அந்த மூன்றடுக்கு கட்டிடத்தில் செயல்பட்டுக் கொண்டிருந்தது.

மாதவன் அவளுடன் படித்தவன். இன்று அவளுடைய பார்ட்னராகவும் இருப்பவன். தன் அலுவலகத்துக்குள் நுழைந்தவள், தன் உதவியாளரிடம், ''ஷ்யாமா! நான் ஒரு முக்கியமான விஷயமா, அவசரமா வெளியூர் போகவேண்டி இருக்கு. ஒருவாரம் நான் இல்லாம எல்லா வேலையும் பார்த்துக்க முடியுமா உன்னால?'' என்றாள்.

''என்ன மேடம்? ஏதாவது ப்ராப்ளமா... நாங்க எல்லோரும் பார்த்துக்கறோம். நீங்க போயிட்டு வாங்க. கவலைப்படாதீங்க. நீங்களும் எங்கேயுமே போறதில்லை... உங்க ஊருக்கா மேடம்?'' என்று கேட்டாள் ஒருவித அக்கறையோடு.

''ஆமாம் ஷ்யாமா. அஞ்சு வருஷம் ஆச்சு ஊருக்குப் போய் வந்து... அப்பாவுக்கு ரொம்ப முடியலியாம். ஹார்ட் அட்டாக் வந்து அட்மிட் பண்ணியிருக்காங்களாம். காலையிலதான் போன் வந்தது. நான் உடனே போயாகணும்!'' என்றாள் கவலையாக.

ஷ்யாமா உடனே பதட்டத்துடன், ''சாரி மேடம். நீங்க உடனே கிளம்புங்க. அப்பாவுக்கு எல்லாம் சரியாப் போயிடும். கவலைப்படாதீங்க. ஒரு மாசமானாலும், நாங்க பார்த்துக்கறோம். நீங்க கிளம்புங்க... மாதவன் சாருக்கு சொல்லிட்டீங்களா?'' என்றாள் கேள்வியாக.

''இல்லை. இனிமேதான் சொல்லணும். புதுசா ஏதும் ஆர்டர் வந்தா, உன்னால மேனேஜ் பண்ண முடியுமா ஷ்யாமா?'' என்று கேட்டாள் நயனி. இதுவரை, அலுவலகத்தை விட்டு எங்குமே சென்றதில்லை. ஆதலால் நயனிக்கு தயக்கமாக இருந்தது. அந்த நிறுவனத்தை ஆரம்பித்த காலத்திலிருந்து நயனியின் உதவியாளராக இருப்பவள் அவள்.

தான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வதாக ஷ்யாமா வாக்கு அளித்தபிறகே, நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் நயனி.

மாடியில் இரண்டாவது தளத்துக்கு மாதவனைப் பார்ப்பதற்காக சென்றாள், அவள். மாதவன் தன் அறையில் பைல்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தான். அவளைக் கண்டதும் வியப்புடன், ''ஏய் நயனி! என்ன இன்னிக்கு காலையில தரிசனம் கொடுக்கிறே? தேங்க் காட்... என்ன என் மேல திடீர் பாசம்?'' என்றான் கிண்டலாக.

''மாதவன்! ப்ளீஸ்...'' என்று கூறி, கண்களை இறுக மூடித் திறந்த நயனி, ''பீ சீரியஸ் மாதவன்... அப்பாவுக்கு ஜெஸ்ட் பெயினாம். மனுபோன் பண்ணினார். நான் உடனே கிளம்பணும். உன்கிட்ட சொல்லிட்டுப் போகலாம்னு வந்தேன்''

''சாரி நயனி! நான் சும்மாகிண்டல் பண்ணினேன். இப்ப அப்பா எப்படி இருக்காராம்? ஹாஸ்பிட்டல்லதான் இருக்காரா?'' என்றான் அக்கறையோடு.

''தெரியலை மாதவன்! ஐசியுவிலே இருக்காராம். நான் ட்டுக்குப் போன் பண்ணலை. யாரும் இருக்க மாட்டாங்க. மையல்காரம்மாதான் இருப்பாங்க'' என்றாள் சோர்வுடன். டனே, தன் செல்லை உயிர்ப்பித்தவன், ''நம்பர் சொல்லு



நயனி!'' என்று கேட்டு, லைன்கிடைத்தவுடன் அவளிடம் கொடுத்தான்.

அவளுடைய சிறு வயதிலிருந்து அவர்கள் வீட்டில் சமையல் செய்யும் காயத்ரி அம்மாதான் போனை எடுத்தார். நயனியின் குரலைக் கேட்டதுமே அழ ஆரம்பித்தார்.

''நயனிம்மா! அப்பாவுக்கு ராத்திரி ரொம்ப முடியலை. நம்ப நந்தா தம்பிதான், ஆஸ்பத்திரியில சேர்த்தாங்க. இப்பவும், அப்பா அங்கதான் இருக்காங்க... நீ உடனே கிளம்பிவாம்மா'' என்றாள் சிறுவயதிலிருந்து அவளை பராமரித்து வளர்த்த உரிமையுடன்!

''கவலைப்படாதீங்க காயத்ரியம்மா! இன்னிக்கு நைட், நான் அங்கே வந்துடுவேன். என்னோட ரூமை மட்டும், ரெடி பண்ணிவைங்க. எனக்கு ஹாஸ்பிடல் போன் நம்பர் இருந்தா கொடுங்க'' என்றாள். அவர் உடனே ''என்கிட்ட நந்தா தம்பியோட செல் நம்பர்தாம்மா இருக்கு. எழுதிக்குங்க'' என்று அந்த எண்களைக் கொடுத்தார் அவர். தன் செல்லில் பதிவு செய்து கொண்ட நயனி, மாதவனிடமும் அந்த எண்ணைக் கொடுத்தாள். அவனிடம் தன் காரிலேயே டிரைவரை அழைத்துக் கொண்டு கிளம்புவதாக தெரிவித்தாள்.

மாதவன், எல்லாவற்றையும் தான் கவனித்துக் கொள்வதாக உறுதி கூறினான். மாதவனிடம் பேசிவிட்டு வீட்டுக்கு வரும் வழியில், வங்கிக்கு சென்று பணம் எடுத்துக் கொண்டாள் நயனி.

வீட்டிற்கு வந்து, தனக்கு ஒரு வாரத்துக்குத் தேவையான துணிகளை எடுத்து வைத்தாள். தன் வீட்டுடன் இருக்கும் மரகதம்மாவிடம் எல்லாவற்றையும் கூறி, வீட்டைப் பத்திரமாகப் பார்த்துக் கொள்ளும்படியும் கூறிவிட்டுக்

கிளம்பினாள். ஊருக்கு கிளம்பும் முன், அப்பாவிற்கு ஏதும் மருந்து வாங்க வேண்டுமா என்று அறிந்து கொள்வதற்காக மனுவுடைய செல்லுக்கு தொடர்பு கொண்டாள் அவள். உடனே எடுத்த மனுஷ்நந்தன், ''எஸ் நந்தா ஹியர்....'' என்றான் ஆழ்ந்த குரலில்.

''அப்பாவுக்கு இப்ப எப்படி இருக்கு? ஏதும் மருந்து தேவைன்னா, நான் இங்கேயிருந்து வாங்கிட்டு வரவா?'' என்றாள் நயனி.

''ம்... இப்ப அங்கிளுக்கு பெஸ்ட் மெடிசன் நீதான்னு டாக்டர் சொன்னார்... உடனே கிளம்பி வா!'' என்று கூறிவிட்டு, உடனே வைத்து விட்டான் மனுஷ்நந்தன்.

காரில் கிளம்பி, ஏலகிரிக்கு செல்லும்போதே மனம் கலங்கியது நயனிக்கு! அப்பாவின் உடல்நிலை எப்படி இருக்கிறதோ, என்ற மனதினுள் பயம் தவிப்பாய் படர்ந்தது. காரில் பின்புறம் சாய்ந்து ஆயாசத்துடன் கண்களை மூடிக் கொண்டாள் அவள். மனம் மீண்டும் பழைய நினைவுகளைத் தூர் வார ஆரம்பித்தது.

## 2

அன்று, தன் பிறந்தநாளன்று வந்து சென்ற மனுஷ்நந்தனை பிறகு அவர்களின் எஸ்டேட்டில் நடந்த ஒரு விழாவின் போது, அடுத்த மாதம்தான் சந்தித்தாள் நயனி.

மருதாசலத்துடன், ஒரு தேவதை போல் வந்திறங்கிய அவளை, வேகமாய் அவன் விழிகள் ஊடுருவின. அன்று நயனியின் பார்வையும் அவன் செல்லுமிடமெல்லாம் பின் தொடர்ந்தது.



அவள் வயதை விட சிறிதளவே மூத்தவளாக இருந்த, மனுவுடைய உறவுப்பெண் மாலினியுடன் பேசிக் கொண்டு இருந்தபோது, அவன் பார்வையும் மனுஷ்நந்தனையே தொடர்வதை நயனி கவனித்தாள். மனம் ஏனோ சோர்ந்து போய்ப் பொறாமையில் தவித்தது.

ஆனால் அடுத்த வாரமே, அவளைப் பெண் கேட்டு அவர்களின் வீட்டுக்கு விஷ்வலிங்கமும், அவர் மனைவி பரிமளாவும் வந்தபோது, நயனி மிகவும் மகிழ்ந்தாள்.

மருதாசலத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியாயிருந்தது. ரகசியமாய் தன்னுள் துளிர்விட்ட காதலை, தந்தை அறியாமல் மறைத்து, திருமணத்திற்கு சம்மதம் கூறினாள். அவள் மனதை அறிந்து கொண்ட மருதாசலமும், மகிழ்ச்சியுடன் திருமண வேலைகளை கவனிக்க ஆரம்பித்தார்.

இருவருமே அந்த ஊரில் முக்கியப் புள்ளிகளாக இருந்ததால் வெகு விமரிசையாக திருமணம் நடத்தப்பட்டது. திருமண நாளுக்காக காத்திருந்த அந்த ஒரு மாத காலமும், தினமும் அவன் போன் செய்து தன்னுடன் பேசுவான் என்ற எதிர்பார்ப்பிலேயே கழிந்தது நயனிக்கு! ஆனால் மனுஷ் நந்தன் ஏனோ அவளிடம் பேசவே இல்லை.

திருமண நாளன்று தான், அவனைப் பார்த்தாள் நயனி. அவன் உருவத்தை, மனதில் மகிழ்வுடன் நிரப்பிக் கொண்டு திரும்பிய போது தான், நயனி மாலினியின் குரோதம் பொங்கிய விழிகளை சந்தித்தாள். ஏனோ அவளின் மனதினுள் பயம் மெலிதாய் படர்ந்தது. அவசரமாகத் திரும்பிய போதுதான், மனுஷ்நந்தனும் தன்னையே கூர்மையுடன் அளவிடுவதைக் கண்டாள்.

பின்பு முதலிரவின் தனிமையில் அவனுடைய நெருக்கத்தையும், காதலையும் கொஞ்சம் மொழிகளையும் எதிர்பார்த்திருந்த நயனிக்கு, ஏமாற்றமே பரிசாய் கிடைத்தது.

அவள் உள்ளே சென்றவுடன் ஜன்னலருகே நின்றிருந்த மனு மெதுவாகத் திரும்பி அவளை நோக்கினான். இதழ்களில் சிறு புன்னகை மிளிர அவளருகில் வந்தவன், ''உனக்கு ரொம்ப டயர்டா இருக்கா நயன்? தூக்கம் வருதா?'' என்றான் மெதுவாக. இல்லை என்று கூறவும் முடியாதபடி இமைகளை உறக்கம் வந்து தழுவிக் கெஞ்சியது நயனிக்கு... என்ன சொல்வதென்று புரியாமல் மலங்க விழித்தவளின் முகத்தை இரு கைகளாலும் ஏந்தி, நெற்றியின் மத்தியில் மென்மையாக முத்தமிட்டான்.

பிறகு அவளிடம், ''சரி! நீ படுத்துக்கோ... தூக்கம் வந்தா தூங்கு. நாளைக்குப் பேசலாம். இன்னிக்கு நிறைய சடங்கு அது இதுன்னு ரொம்ப டயர்டர் இருப்பே. ரெஸ்ட் எடுத்துக்க நயன்.. சரியா?'' என்று கூறி விட்டு அவனைப் பார்வை யாலேயே கோதி விட்டுச் சென்றான், அவன். அப்படியே சரிந்து படுத்த நயனியும், களைப்பு மிகுதியால் உடனே உறங்கிப் போனாள்.

அருகிலிருந்த சோபாவில் படுத்து, அவள் றங்குவதையே சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்த ந்தனும், சிறு நேரம் கழித்து உறங்கினான். அவளைப் ர்த்தால், மலர்ந்தும் மலராத சிறு மொட்டாகவே ான்றியதால், தானாகவே அவள் தன் முகம் நோக்கி ர்ந்து விகசிக்கும் நாளுக்காகவே காத்திருக்கத் ரானான், மனுஷ்நந்தன்.



மறுநாள் காலையில் கண் விழித்தபோது, நயனிக்கு முதலில் ஒன்றுமே புரியவில்லை. மனுஷ்நந்தனைப் பார்த்தவுடன்தான் அவளுக்கு முந்தைய நாளின் நிகழ்வுகள் நிழற்படமாய் நினைவில் வந்தது.

மனுவுக்கு தன்னைப் பிடிக்கவில்லையோ என்ற யோசனை மனதினுள் நெருஞ்சி முள்ளாய்... தன் பெற்றோரின் வற்புறுத்தலால்தான் இந்தத் திருமணத்திற்கு அவன் சம்மதித்தானோ என்ற பயம் முதன் முதலாய் மனதினுள் எழுந்தது.

ஒரு வாரம் முழுவதும், விருந்தும் மறுவீடுமாகச் சென்றது. மனு அவளிடம் தேவை என்றால் மட்டுமே பேசினான். இதமாய், அவளை அவ்வப்போது வருடிச்சென்ற விழிகளின் ஸ்பரிசத்தை அப்போது நயனியும் உணரவில்லை. மாமியார் பரிமளமும் அவளிடம் விட்டேத்தியாக இருந்தார். அவருடைய அண்ணன் பெண் மாலினியுடன், அவர் பொழுது சென்றது.

அன்று மாலை மனுவும் நயனியும் கோவிலுக்குச் சென்று விட்டுத் திரும்பி வந்தனர். மாமியாரிடம் பிரசாதத்தைக் கொடுப்பதற்காக, அவர் அறைக்குச் சென்ற போதுதான் அவரும் மாலினியும் பேசிக் கொண்டு இருந்ததைக் கேட்க நேர்ந்தது நயனிக்கு... மாலினி அழுது கொண்டிருந்தாள். பரிமளம் அவளைச் சமாதானப்படுத்திக் கொண்டு இருந்தார்.

''அழாதே மாலினி! நான் எப்பவுமே உன்னைத்தான் என்னோட மருமகளா நினைச்சிட்டு இருந்தேன். நீதான் இந்த வீட்டுக்கு மருமகளா வரணும் அப்படின்னு மனசார நினைச்சேன். என்ன பண்றது? உன் மாமா எடுத்த ஒரு முடிவால உன்னோட வாழ்க்கையும், நந்தாவுடைய

வாழ்க்கையும் பலியாகிடுச்சி. கோவிலுக்குப் போனவங்க வந்துடப் போறாங்க... கண்ணைத் துடைச்சுக்க. எல்லாம் நான் பாத்துக்கறேன். நீ இன்னிக்கே ஊருக்கு கிளம்பு!'' என்று கூறிவிட்டுத் திரும்பியவர், நயனியைப் பார்த்தவுடன் திடுக்கிட்டார்.

நயனிக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. பதட்டத்தில் பிரசாதத்தை மாமியாரிடம் கொடுத்து விட்டு, வேகமாகத் திரும்பி தன் அறைக்குச் சென்று விட்டாள். அறைக்குள் வந்த நயனியை, முதன் முதலாக இதழ்களில் முத்தமிட்டான் நந்தா. மனதினுள் குழப்ப மேகங்கள் சூழ்ந்துவிட, ஏனோ மனம் கசந்து போனது நயனிக்கு.

அன்றிரவு மனுஷ்நந்தன் வெளியில் சென்றிருந்தான். நயனி தோட்டத்தில் காற்றாட நடந்து கொண்டிருந்தாள். காற்று, குளிரின் சீறலோடு வீசிக் கொண்டு இருந்தது.

தனக்கென யாருமே இல்லாதது போன்று ஒரு எண்ணம், திடீரென அவள் உள்ளத்தில் எழுந்தது. ஆனால் அன்று மாலை
கோவிலில் அமர்ந்து பேசிக்கொண்டு இருந்த போது நடந்த
கனவாய் கண் முன் விரிந்தது.

நயனி, அவனை எப்படி அழைப்பது என்று தயக்கத்தில்,
'வந்து... வீட்டுக்கு கிளம்பலாமா?'' என்ற மெதுவாகக்
கேட்டாள். மெல்ல விழிகளை உயர்த்திய மனு, ''ஒரு நிமிஷம்!
ங்கு வந்து என்னங்க, இதெல்லாம் வேண்டாமே....
ன்னைப் பேர் சொல்லியே கூப்பிடலாம். என் பிரெண்ட்ஸ்
ல்லாம் நந்தான்னுதான் கூப்பிடுவாங்க'' என்றான் அவள்
கத்திலிருந்து தன் பார்வையைச் சிறிதும் விலக்காமல்.

ஒன்றும் சொல்லத் தோன்றாமல் குனிந்த நயனி, உடனே
ர்ந்து ''எல்லாரும் உங்களை அப்படிக் கூப்பிடும்போது,



நானும் எப்படி? ம்... மனுன்னு கூப்பிடவா?'' என்றாள் ஆர்வத்துடன்.

''ஓகே! உன் இஷ்டம்... நீ எப்படிக் கூப்பிட்டாலும் எனக்குப் பிடிக்கும். ஆனா டேய்னு மட்டும் கூப்பிட வேண்டாம்'' என்றான், சிறு கேலியை கண்களில் தேக்கியபடி.

இன்று, உள்ளத்தில் ஒன்று விடாமல் அன்று நடந்தது எல்லாம் நினைவில் படர்ந்தது. அன்றுதான் அவளிடம் இயல்பாகப் பேசிச் சிரித்தான் மனு. அன்றே, அவளை வருத்தப்படும்படியும் செய்து விட்டானே என்று அவன் மேல் கோபமாக வந்தது. மீண்டும், அன்றைய இரவை நோக்கி நினைவுகள் படர்ந்தன.

அன்று உள்ளத்தில் பல எண்ணங்களுடன் மெல்ல நடந்த
கொண்டிருந்த நயனிக்கு, தனக்குப் பின்னால் யாரோ வரும்
சப்தம் கேட்டுத் திரும்பினாள். அங்கு மாலினி நின்றிருந்தாள்
திரும்பியவளைத் தடுத்து நிறுத்தியது அவள் குரல்.

''நீ நந்தா அத்தானோட சந்தோஷமா இரு. நானும் அவரு
உயிருக்கு உயிரா விரும்பினோம். சின்ன வயசுல இருந்
பேச்சு... ஆனா நீ ஒரே பொண்ணு! உங்க எஸ்டேட்டு
தங்களுதோட சேரணும்தான் மாமா இப்படி செஞ்சுட்டா
நந்தா அத்தானால, அப்பாவையும் எதுத்துப் பேச முடியலை
என்னையும் மறக்க முடியலை. அதனாலதான், நான் உன
அவரை விட்டுக் கொடுத்துட்டேன். ஆனா எப்பவுமே அ
மனசுல எனக்குத்தான் முதல் இடம் தெரிஞ்சுக்க...'' என்ற
பெருமையாக.

பூமி இரண்டாகப் பிளந்து தன்னை விழுங்கி விட
என்றிருந்தது அவளுக்கு. வேகமாகத் தன் அறைக்

சென்றவளுக்கு இப்போதுதான் புரிந்தது. மனு இதுவரை தன்னை ஏன் தொடவில்லை என்பதும், தன்னிடம் அன்பாக நடந்து கொள்ளாததின் காரணமும். அது புரிந்தபோது இதயம் வலித்தது. மாலினிதான் தன் கணவனின் பாராமுகத்துக்கு காரணம் என்றறிந்த போது, மனம் தீயாய் தகித்தது.

இத்தனை நாள், அதனால்தான் தன்னிடம் அவன் இயல்பான காதலுடன் நெருங்கிப் பழகவில்லையோ என்ற எண்ணமே தீ மூட்டுவதாய்...! முதல் முறையாக அவன் அனுமதி இன்றி அவனுடைய பீரோவைத் திறந்தாள் நயனி.

அவன் லாக்கரைத் திறந்து ஆராய்ந்தபோது, அங்கே ஒரு அழகிய தந்தத்தால் செய்த நகைப்பெட்டி இருப்பது தெரிந்தது. என்னவாக இருக்கும் என்ற யோசனையுடன் எடுத்துப் பார்த்தால் உள்ளே பல வண்ணக் காகிதங்கள் வாசனையுடன், காதல் வார்த்தைகளால் நிரப்பப்பட்டு ஒரு அழகிய பெண் தேவதையை வர்ணித்து ஏக்கம் மிகுந்த சொற்களுடன் அவன் மனதை வார்த்தைகளால் வளிப்படுத்தி இருந்தது.

மனபாரம் தாங்க முடியாமல், நயனியின் கண்கள் குளமாகி வளுள் மெல்ல மெல்ல ஒரு புயல் மனதினுள் வந்து மாய் மையம் கொண்டது. நேரே நந்தாவின் தாயாரிடம் ன்றாள் அவள். அவர் முன் சென்று, ''அத்தை! நான் கிட்ட ஒரு விஷயம் கேக்கணும். சின்ன வயசுல ருக்குத்தான் மாலினின்னு ஏதாவது பேச்சு இருந்ததா? கேட்டாள்.

கத்தில் கோபமும் வருத்தமும் ஒன்று சேர்ந்து பிரதி , அவர் ''ஆமாம். ஆனா, எல்லாம்தான் மாறிப்போச்சே! ம என்ன மாத்தவா முடியும்?'' என்றாள்.



''இல்லை. இப்பவும் மாத்தலாம். எதுவுமே மாறலை. நீங்க உங்களோட விருப்பப்படியே அவருக்கு மாலினியைக் கல்யாணம் செஞ்சுவைங்க. உங்க பையன் வீட்டுக்கு வந்தவுடனே, இந்த சந்தோஷமான செய்தியைச் சொல்லுங்க'' என்று கூறிவிட்டு, கோபமாகத் தன் அறைக்கு வந்தாள் நயனி.

தன் துணிகளை எடுத்து அடுக்கியவள், தன் தந்தைக்கு உடனே போன் செய்தாள். அவரிடம் ''அப்பா! எனக்கு உடனே உங்களைப் பார்க்கணும் போல இருக்கு! காரைக் கொஞ்சம் அனுப்பறீங்களாப்பா? அவர் இல்லை... வெளியே போயிருக்கார் அதான்'' என்றாள் மெலிந்த குரலில். உடனே, டிரைவருடன் காரை அனுப்பி வைத்தார் மருதாசலம். ஆனால் கலங்கிய விழிகளுடனும், சோர்ந்த முகத்துடனும் அவள் வருவாள் என்று சிறிதும் அவர் எதிர்பார்க்கவில்லை.

வீட்டினுள் வந்ததுமே தன் தோளில் சாய்ந்து அழுதவளைக் கண்டதும், மருதசாலத்துக்கு ஒன்றும் புரியவில்லை. அவளை சமாதானப்படுத்தி என்னவென்று விசாரித்தவருக்கு, அவளிடம் இருந்து பதில்தான் கிடைக்கவில்லை. அவளை ஆதரவுடன் அணைத்து உறங்கச் செய்துவிட்டு, அவர் வெளியே வந்த போதுதான் பதட்டத்துடன் நந்தா எதிரே வந்து கொண்டிருப்பதை அவர் கவனித்தார்.

''என்னாச்சு ஆங்கிள்? நயனிக்கு என்ன கோபம்? நான் வெளியே போயிருந்தேன். திடீர்னு எல்லா திங்சையும் பேக் பண்ணி எடுத்துக்கிட்டு இங்க வந்துட்டான்னு அம்மா சொன்னாங்க'' என்றான் குரலில் கோபத்துடன்.

''எனக்கும் ஒண்ணும் புரியலைப்பா... வந்தவுடனே அழுதா. எதுவுமே சொல்ல மாட்டேங்கறா. ஆனா, இனிமே உங்க வீட்டுக்குப் போக மாட்டேன்னு சொல்றா. சமாதானப்

படுத்தி நான் தூங்க வச்சிருக்கேன். நானே, நாளைக்கு அழைச்சிட்டு வந்து விடுறேன். நீ ஒண்ணும் தப்பா நினைக்கக் காதேப்பா நந்தா'' என்றார் அவன் கைகளைப் பிடித்துக் கொண்டு.

''நான் ஒண்ணும் நினைக்கலை அங்கிள்! நீங்க சொன்னதுனால அவ இன்னும் சின்னப் பொண்ணு தானேன்னு, அவளுக்கு நான் எந்தத் தொந்தரவும் கொடுக்கலை. ரொம்ப சாப்டா தான் நடந்துக்கிட்டேன். அவளுக்கு இன்னும் கொஞ்சம் மெச்சூரிட்டி வரட்டும்னுதான் பேசாம இருந்தேன். ஆனா, இப்ப என்ன ப்ராப்ளம்னே தெரியலையே?'' என்றான் நந்தா கவலையுடன்.

''நீ கவலைப்படாதேப்பா! நான் நாளைக்கு அவகிட்ட என்னன்னு விசாரிச்சு எல்லாத்தையும் சரி பண்றேன். நானே அங்க கொண்டு வந்து விடறேன். நீ நிம்மதியாப் போப்பா நந்தா... எல்லாம் நான் பாத்துக்கறேன். அவ சின்னப் பொண்ணாச்சே... அதான் பொறுமையா ஹேண்டில் பண்ண வேண்டியிருக்கு!'' என்றார் பரிவுடன்.

ஆனால் மறுநாள் அவர் எண்ணம்தான் பொய்த்துப் போனது. நயனி, நந்தாவுடன் வாழ முடியாதென்று மறுத்து விட்டாள். மீறி அவளை, அங்கு கொண்டு விட்டால் தன்னை உயிரோடு பார்க்க முடியாது என்று நயனி கூறிய பிறகுதான் நந்தாவிடம் விஷயத்தின் தீவிரத்தைப்பற்றி கூறினார் மருதாசலம். நந்தா உடனே கிளம்பி வந்தான்.

அவன் கோபத்துடன் வந்து, அவளிடம் பேச முயன்றபோது, நயனி அவனிடம் பேசவே மறுத்து விட்டாள். எவ்வளவுதான் அவன் முயன்றும், இறுதியில் அவள் பிடிவாதமே வென்றது. அன்றிலிருந்து இன்று வரை அவள்



பிடிவாதம் அப்படியே தான் இருக்கிறது. அவளுடைய நினைவுப் புறாக்கள் சிறகடித்து தரை இறங்கின. நயனி கண் விழித்துப் பார்த்தபோது கார் வேகமாகச் சென்று கொண்டிருந்தது.

கார் வேலூரைக் கடந்து சென்று கொண்டிருந்தது. அவளின் மனம் ஏனோ, நிலை கொள்ளாமல் தவித்தது. ஆயாசமாய் இருந்தது. மரங்கள் எதிர் திசையில் பின்னோக்கிப் பயணம் செய்து கொண்டு இருந்தன. அவளின் நினைவுகளும் பின்னோக்கி தன் பயணத்தைத் தொடர்ந்தது. ஒரு பெருமூச்சுடன் மீண்டும் இருக்கையின் பின்புறம் சாய்ந்து கண்களை மூடி நினைவுகளைத் தொடர்ந்தாள்.

அன்று தன்னுடன் பேசுவதற்கு என்று வந்த மனுவை பார்த்துப் பேசவே நயனி ஒத்துக் கொள்ளவில்லை. தன் அறைக்குள் இருந்து வெளியே வரவும் இல்லை. அனைவருக்குமே அன்றையப் பொழுது, ஒரு கனமான மவுனத்தில் கழிந்தது.

மறுநாளும் இது தொடரவே, அவளின் மறுப்புக்கும், முகம் திருப்புதலுக்கும் மதிப்பின்றி மனுஷ்நந்தன் கோபத்துடன் அவள் அறைக்குள் வந்து விட்டான்.

கோபத்துடன் நேரே சென்று, அவள் எதிரே நின்று, ''ஏன் இப்படி செஞ்சே நயனி? எனக்கு நீ இங்க வந்ததுக்கான காரணம் தெரிஞ்சாகணும். அப்படி என்ன தப்பு பண்ணினேன் நான்... நீ என்னைப் பார்த்தவுடன் வெறுப்பைக் கக்கற மாதிரி! எனக்கு இப்பவே தெரியணும்...'' என்றான் அழுத்தமான குரலில்.

''எனக்கு உங்களைப் பிடிக்கலை!'' சீறலாய் வந்தது பதில். அவன் உடனே சீற்றத்துடன் நிமிர்ந்து, ''ஓஹோ... அது தெரிய

இத்தனை நாளாச்சா? நேத்துதான் தெரிஞ்சதா... அன்னிக்கு கோவில்ல நீ பேசும்போது அதுமாதிரித் தெரியலையே? பிடிக்கலைன்னா, கல்யணத்துக்கு முன்னாடியே சொல்ல வேண்டியதுதானே. நீ வேணும்னா எடுத்துக்கறதுக்கும், வேணாம்னா தூக்கி எறியதுக்கும் நான் ஒண்ணும் உன்னோட விளையாட்டுப் பொம்மை இல்லை... தெரிஞ்சுக்க!'' என்றான்.

''எனக்குப் பிடிக்கலை... பிடிக்கலை... அவ்வளவுதான்... என்னை விட்டுடுங்களேன்...'' என்றாள் நயனி கண்ணீருடன்.

''எனக்கு உன்னோட விளக்கம் பத்தாது நயனி. எனக்கு உண்மை வேணும்'' என்றான் கடும் சினத்துடன் கண்கள் சிவக்க.

சிறிது நேரம் மவுனமாயிருந்த நயனியும் நிமிர்ந்து, ''உண்மை என்னான்னா, உங்களைப் பிடிக்காமதான் நான் உங்களைக் கல்யாணம் பண்ணிக்க ஒத்துக்கிட்டேன். எனக்குப் படிக்கணும். வேலை பாக்கணும். இதுமாதிரி நிறைய ஆசை இருக்கு. நீங்களும் எங்க அப்பாவும் சேர்ந்து, என் வாழ்க்கையையே பாழாக்கிட்டீங்க. எனக்கு இது எதுவுமே பிடிக்கலை'' என்றாள் எங்கோ பார்த்தபடி.

அவள் முகத்தைப் பிடித்து கோபமாகத் திருப்பியவன், 'என்கிட்ட உன் முகம் திருப்பற வேலை எல்லாம் வேண்டாம். ான் அவ்வளவா பொறுமை இல்லாதவன். உனக்கு எது டிக்கலை?'' என்றான் கண்கள் சிவந்து பளபளக்க.

''ம்.. எதுவுமே! நீங்க, உங்க வீடு, அதில இருக்கற லாரும்'' என்றாள் நயனி வெறுப்புடன்.

ஒரு பெருமூச்சுடன், தன்னை அடக்கி நிமிர்ந்தவன், ''நீ கலாம். நான் உன்னைத் தொந்தரவு பண்ணமாட்டேன்.



வேலைக்குப் போகலாம். ஆனா அதுக்கு நீ என்னைப் பிரிஞ்சு வரணும்னு அவசியமில்லை'' என்றான் வரவழைத்த பொறுமையுடன்.

''எனக்கு உங்களோட சேர்ந்து வாழ இஷ்டமில்லைன்னா, விட்டுடுங்களேன். முதல்ல புரிஞ்சுக்கங்க. நான் இன்னிக்கு வேணும்னாலும் உங்களுக்கு விவாகரத்து தரத் தயாரா இருக்கேன். நீங்க போகலாம்'' என்றாள் கண்ணீரை அடக்கியபடி.

தன் ஆறடி உயரத்திற்குமாக கோபமாக நிமிர்ந்த நந்தா, ''ஏய்...! என்னது? நீ எனக்கு விவாகரத்து தரியா? சின்னப் பொண்ணாச்சேன்னு பார்த்தா சே! நான் உன்னை ரொம்ப நல்லவ, இன்னசென்ட்னு நினைச்சேன். முதல் தடவையா, என் வாழ்க்கையில நான் தவறா கணிச்சிருக்கிறேன். வேண்டாம். இப்படி ஒரு குரூர புத்தியோட ஏமாத்தற பொண்ணு, எனக்கு வேணாம். இப்படி ஒரு வாழ்க்கை எனக்கும் தேவையில்லை. குட்பை!'' என்று சீற்றத்துடன் கூறிவிட்டு கண்களில் காயம் பட்ட வலியுடன் அன்று திரும்பிப் போனவன்தான்.

மருதாசலம் எவ்வளவு எடுத்துக் கூறியும் நயனி கேட்கவில்லை. தான் அறிந்த காரணத்தையும் கூறவில்லை. ''அவங்க வீட்டுக்குப் போய் வாழறதுக்குப் பதிலா என்னை சாக விட்டுடுங்கப்பா... அதையும் மீறி போகணும்னா, நான் போறேன். ஆனா அதுதான் நீங்க என்னைக் கடைசியாகப் பார்க்கற மாதிரி இருக்கும்'' என்றாள் உறுதியாக.

இறுதியில் அவளுடைய ஆசையே வென்றது. அதற்குப் பிறகு சென்னைக்கு சென்று படித்து, தொழில் ஆரம்பித்து, இன்று நல்ல முறையில் நடத்தி வருகிறாள். இடையில் மனுவைப் பிரிந்து சென்ற ஒரு மாதத்தில் அவனுடைய

அப்பாவும் அம்மாவும் விபத்தில் இறந்த செய்தி அறிந்து, யாரோ ஒருவர் போல் இறுதிச்சடங்கிற்கு வந்து போனவள்தான். பிறகு ஐந்து வருடம் கழித்து, இன்றுதான் திரும்பி வருகிறாள்.

இந்த ஐந்து வருடங்களில் மனுஷ்நந்தன் ஒரு முறை கூட அவளிடம் பேசியதில்லை. விவாகரத்துக்கு தான் தயார் என்று அவள் அனுப்பிய கடிதத்துக்கும் பதில் இல்லை. ஆனால், வாரம் இரு முறை மருதாசலத்துடன் போனில் பேசும் போதெல்லாம் பாதிப்பேச்சு நந்தாவைப் பற்றியதாகவே இருக்கும். அவர்கள் இருவருக்குமே துணை என யாரும் இல்லாததால், அவர்களுக்கிடையே ஒரு வித அன்யோன்யமும், பிணைப்பும் இழையோடுவது அவர் பேச்சிலேயே தெரியும்.

தான் பெறாத பிள்ளை போல் தன் எஸ்டேட்டையும் சேர்த்து நந்தா கவனித்துக் கொள்வதாக அவர் கூறும்போதெல்லாம், நயனிக்கு மனம் இறுகப் பிசையும். 'அவனுக்கு நீங்கள் பெற்ற பெண் வேண்டாம். உங்கள் எஸ்டேட் மட்டும் போதும்' என்ற பதில் நுனி நாக்கு வரை வந்து, மனதைக் கட்டிப்போடும். ஆனால் தன் வீட்டில், அவன் ஒரு அங்கமாகவே ஆகிவிட்டது ட்டும், அப்பாவின் சொற்களால் அவளுக்கு விளங்கி ருந்தது. அவளாகவே கேட்காவிட்டாலும், அவனைப் ற்றியே பாதி நேரம் பேசுவார் அவர்.

நந்தாவின் மீது அவர் கொண்டிருக்கும் ப்ரியம், அவர் ச்சிலேயே புரியும். நயனி, இதை எல்லாம் பெரிதாக த்துக் கொள்வதில்லை. அறியாத பருவத்தில், தன்னுள்ளே னைவிட்ட காதலை, தன் மனதிற்குள்ளேயே போட்டுப் த்தவள், ஐந்து வருடம் கழித்து, இன்றுதான் அவனை க்கு நேர் தைரியமாக எதிர்கொள்ளப் போகிறாள்.



இடைப்பட்ட காலத்தில், இன்று தனக்குப் பொறுப்புணர்ச்சியும் பொறுமையும் அதிகரித்திருப்பதும், தனக்குள்ளேயே ஒரு இறுகிய தன்மை தெரிவதும், அவள் அறிந்ததுதான். ஆனால் அவன் இப்போது எப்படி மாறி இருப்பானோ என்ற கற்பனையில் மனம் கேள்வியாய் மூழ்கியது.

நந்தா இன்னும் மறுமணம் செய்து கொள்ளவில்லை என்று தந்தை கூறி இருந்தார். அப்போதே அவன் மிகவும் அழுத்தமானவனாக, ஆதிக்கம் செலுத்துபவனாக அவனைப் பார்த்தால் நயனிக்குத் தோன்றும். இன்று எப்படியும் பார்க்கத்தானே போகிறாள். ஆனால் எல்லாவற்றையும் மீறி தந்தையின் நினைவுகள் மனதை ஆக்கிரமித்து, மீண்டும் அவளை சோகத்தில் ஆழ்த்தியது.

பழைய ஞாபகங்களில் இருந்து மீண்டு வெளியில் பார்த்தால், எதிரே ஏலகிரி மலை கம்பீரமான பெரிய கருயானை போல் தெரிந்தது. இங்குதான் என் உறவுகள் இருக்கின்றன என்ற உணர்வு இதமாய் மனதை நீவிவிட ஏனோ நயனிக்கு கண்கள் பனித்தன.

எவ்வளவுதான் உயர்ந்த நிலையில் இருந்தாலும், திரம்படத் தொழில் நடத்தினாலும், பாசம் மட்டும் மனிதனை பலவீனப் படுத்துவதாகவே... கண்ணீர்ப் பூக்களை கண்களுக்கு அறிமுகப் படுத்துவதாகவே! வெளியில் தெரிந்த கருமை இருட்டை வெறிக்க ஆரம்பித்தாள் நயனி.

ஏலகிரி மலை ஏறி, அவர்களுடைய எஸ்டேட்டினுள் கா நுழையும்போதே, தாய் நிலம் வந்த நிம்மதி மனதினுள் வந்தது இரவின் கருமையால், இயற்கை தன் அழகினைத் தற்காலி மாகத் தொலைத்திருந்தது. அவர்களுடைய பங்களாவி வாசலில் சென்று கார் நின்றபோது, தான் இத்தனை

வருடங்களாக இவையனைத்தையும் இழந்திருக்கிறோம் என்ற எண்ணம் அவளுக்குள் ஆழமாய் விழுந்து, உள்ளத்தில் ஏக்கம் மிகச் செய்தது.

அழகான வீடு, அற்புதமான சுற்றுச் சூழல், சுத்தமான காற்று, இதமான குளிர், இளவரசி போன்ற வாழ்க்கை, இவற்றை எல்லாம் தொலைத்து விட்டு, இந்த ஐந்து வருடங்களில் தான் எந்திரத்தனமாய் மாறிவிட்டது. அவள் மனதில் பெரும் ஏக்கத்தை விளைவித்தது.

சுற்றிலும் விரிந்து பரந்த பெரும் மலர் தோட்டத்தின் நடுவே கம்பீரமாய் நின்ற தன் பங்களாவை, இன்றுதான் பார்ப்பது போல், புதிய பார்வையுடன் பார்த்தாள் நயனி.

வாசலுக்கே ஓடி வந்து வரவேற்றார்கள் பழைய ஊழியர்கள். காயத்ரி அம்மாவும், ஓடிவந்து பாசத்துடன் கண்ணீர் மல்க அவள் கைகளைப் பிடித்துக் கொண்டார். எல்லாருக்கும் தர்மசங்கடமான ஒரு புன்னகையை பதிலாய்த் தந்து விட்டு, போர்டிகோவின் படியேறிய அவளுடைய கால்கள், ஒரு நிமிடம் அப்படியே உறைந்து வேர்ப்பிடித்து நின்றன.

அவள் எதிரே வாசல் கதவில் சாய்ந்து கை கட்டியபடி, தடுகளில் ஒரு ஏளனமான சுழிப்புடன் நின்றிருந்தான் மனு. ண்கள் எப்போதும் போல், கூர்மையுடன் அவளை டுருவிக் கொண்டு இருந்தன.

முதல் பார்வையிலேயே, ஐந்து வருடங்களுக்கு முன் ள் முன் நின்று தன்னுடன் சேர்ந்து வாழக் கேட்ட அந்த ா, தொலைந்து போயிருப்பது நயனிக்குப் புரிந்தது. னைக்கு இப்போது இன்னும் கம்பீரமாய், அனாவசிய



சதைச் சரிவுகள் இன்றி இறுகிய உடலுடன் முகத்தில் அதிகமான கடுமையுடன் ஒரு கிரேக்கச் சிலை போல நின்றிருந்தான் மனுஷ்நந்தன்.

அவன் பார்வையும் கூர்மையுடன் அவளை அளவிட்டது. பதினேழு வயதின் குழந்தைத்தனம் போய், பொறுப்பு தெரிந்த முகமும், கொடி போன்ற உடலுடன் சிவந்த அதீதமான அழகு முகமும், அந்த அழகை மேலும் அதிகமாக்கிய அவள் சுடிதாரும், தோள் வரை வெட்டப்பட்டு விரிந்து படர்ந்திருந்த கூந்தலும், அவளிடம் தெரிந்த மாற்றத்தை அவனுக்கு அறிவித்தது.

அவள் படியேறி வரும்போது அமர்த்தலான நடையுடன் அவளருகே வந்தான் நந்தா. ''அங்கிள் இன்னும், ஹாஸ்பிட்டல்லதான் இருக்கார். நாளைக்கு காலையில எட்டு மணிக்கு ரெடியா இரு போகலாம். குட் நைட்'' என்று கூறிவிட்டு திரும்பிக்கூடப் பார்க்காமல் செல்லும் மனுவை, ஒருவித எதிர்பார்ப்புடன் திரும்பிப் பார்த்தாள் நயனி.

அவள் மனதை, வேக நடையுடன் கூடிய அவனுடைய கம்பீரம் ஆழமாய் தைத்தது. தன்னைப்பற்றி, ஒரு வார்த்தை கூட நலம் விசாரிக்கத் தோன்றவில்லையே என்ற ஏக்க சீறலான பெருமூச்சாய் வெளிவந்தது. காயத்ரி அம்மாவிட அப்பாவைப் பற்றி விசாரித்துக் கொண்டே உள்ளே சென்றா அவள். தன்னுடைய அறைக்குள் சென்றவளுக்கு, பழை நினைவுகள் இன்று தன்னை மிகவும் பலவீனப்படுத் இருப்பது புரிந்தது.

நயனிக்கு அன்றிரவு உறக்கம் வரவே வெகு நேரமாகிய மனம் ஏனோ மனுவையே சுற்றிச்சுற்றி வந்தது. அன்று தா செய்தது சரியா என்ற கேள்வி மனதில் கேள்வியாய்...! தா

இங்கே இருந்திருந்தால் அப்பாவை இன்னும் நன்றாக கவனித்து இருந்திருப்போமோ என்ற குற்ற உணர்ச்சி உள்ளத்தை உறுத்துவதாய், விடியும் போதுதான் உறங்கவே ஆரம்பித்தாள் நயனி.

யாரோ தன்னை எழுப்பி கனவுலகைக் கலைப்பது புரிந்து, மெல்லக் கண்விழித்தாள். இன்னும் கொஞ்சம் ஓய்வு வேண்டும் என்று விழிகள் கெஞ்சியது. காபியுடன், எதிரே காயத்ரி நின்று கொண்டு இருந்தார். சோம்பலுடன் எழுந்த ‍யனிக்கு, காலை எட்டு மணிக்கு வந்து தன்னை அழைத்துச் செல்வதாகக் கூறியது அப்போதுதான் நினைவு வந்தது.

உடனே பதட்டமாக நிமிர்ந்து மணியைப் பார்த்தாள், மணி ட்டேகால் என்றது. காயத்ரி மெதுவாக, ''நந்தா தம்பி ந்திருக்கார்மா... உங்களுக்காக காத்திட்டு இருக்காங்க. ரான உடனே கிளம்பணும்னு சொன்னாங்க'' என்றார்.

யனி பதறி எழுந்து அவசரமாகக் குளித்து விட்டு, ஒரு ார் அணிந்து வேகமாக கீழே இறங்கி வந்தாள். ஹாலில் ர்ந்து பேப்பர் படித்துக் கொண்டு இருந்தான் நந்தா. ளைக் கண்டதும் எழுந்து வாசலுக்குச் சென்றான்.

திமுகமில்லாத ஒருவரைப் பார்ப்பது போன்ற, உணர்ச்சி அவனுடைய பார்வை ஊசியாய் உள்ளிறங்கியது. சாப்பிடவில்லையா என்ற கேள்வியுடன் வந்த ரியிடம், வந்து சாப்பிடுவதாகக் கூறிவிட்டு வேகமாகச் காரில் ஏறி அமர்ந்தாள் நயனி.

ளுக்கு தன்னை அமைதிப்படுத்திக் கொள்ளவே, சிறிது பிடித்தது. ஏனோ மூச்சு வாங்கியது. அவள் ஏறி துமே காரை எடுத்த நந்தா, அவளிடம் எதுவும்



பேசாமல் நேர்ப்பார்வையுடன் காரை ஓட்டிச் சென்றான். நயனி மெதுவாக அவன் புறம் திரும்பி, ''சாரி'' என்றாள் ''எதற்கு?'' என்று திரும்பிய அவன் புருவங்கள் நெரிந்திருந்தன.

''ரொம்ப நேரம் இன்னிக்குத் தூங்கிட்டேன். உங்களை வெயிட்பண்ண வச்சிட்டேன். அதான்'' என்றாள் தர்ம சங்கடத்துடன்.

''ஓ! நானும் என்னவோ, இத்தனை வருஷம் என்னை வெயிட் பண்ண வச்சதுக்குத்தான் சாரி கேக்கறியோன்னு நினைச்சேன்'' என்று குத்தலாகக் கூறிவிட்டு, கார் ஓட்டுவதில் தன் கவனத்தைப் பதித்தான்.

ஒரு வேகமூச்சுடன், மறுத்து எதுவும் கூற இயலாமல் திரும்பி வெளிப்புறம் பார்வையைப் பதித்தாள் நயனி. முகம் சிவந்து தன் தைரியமும் வீம்பும் எங்கு தொலைந்தது என்று புரியாமல் மனம் சலிப்படைந்தது. மருத்துவமனை செல்லும் வரை இருவருமே பேச்சின்றி மவுனமாகவே சென்றனர். மனம் மட்டும் அவரவர் எண்ணங்களில் மூழ்கி, தனித்தனிப் பாதைகளில் சென்றது.

அந்த மருத்துவமனைக்குள் நுழையும் போதே மனதை ஒரு விதமான பயம் சூழ்வதாய்...! பற்றுக்கோடின்றி, மனம் படர இடம் தேடித் தவித்தது. ஒரு நடுக்கம் உடலெங்கும் பரவி, என் அப்பாவுக்கு ஏதும் ஆகிவிடக்கூடாது என்று இறைவனிடம் இறைஞ்சியது. நந்தாவைப் பின் தொடர்ந்து வேகமாகச் சென்றாள் அவள்.

அப்பாவின் அறைக்குள் சென்றதும், அங்கு அவர் இருந்த நிலையும், சுற்றிலும் இருந்த மருத்துவக் கருவிகளும், அந்த சூழ்நிலையும் அவளை மிகவும் பலவீனப்படுத்திப் பய முறுத்தியது.

## 3

நயனியால் எவ்வளவு முயன்றும் தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை. துப்பட்டாவினால் வாயை மூடி, சிறு குழந்தை போல் அழும் அவளை, ஓரக் கண்ணால் கவனித்துக் கொண்டே இருந்தான் நந்தா. ஆனால், நயனியை சமாதானப்படுத்த, அவன் எந்த முயற்சியும் செய்யவில்லை. அழுது முடிந்து மன பாரம் குறையட்டும் என்றோ என்னவோ, மவுனமாகக் காத்திருந்தான்.

சத்தம் கேட்டு விழித்த மருதாசலத்தின் கண்கள், இருவரையும் ஒன்றாகக் கண்டதும் புத்துயிர் பெற்று மின்னியது. கண்கள் பனித்து நீர் சுரந்தது.

நயனி அழுகையுடன் "அப்பா" என்றபடி, அவரிடம் சென்று அமர்ந்து கொண்டாள். அவர் ஆதரவுடன் அவளுடைய கைகளைப் பிடித்துக் கொண்டு, நந்தாவை க்கத்தில் இருந்த நாற்காலியில் அமருமாறு சைகை செய்தார். யனிக்கு மிக அருகிலிருந்த அந்த நாற்காலியில் அமர்ந்த ந்தா, "இப்போ எப்படி இருக்கு அங்கிள்? பரவாயில்லையா... ன்னைப் பார்த்தவுடனே, ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக் டீங்க. நம்ம உடம்பை நாமதான் கவனிச்சிக்கணும். ணர்ச்சிவசப்படாம பேசிட்டு இருங்க. நான் டாக்டரைப் ர்த்துட்டு வரேன்" என்று கூறிவிட்டு எழுந்து வெளியே ன்றான்.

அவன் வேண்டுமென்றே தன்னைத் தவிர்க்கிறானோ என்று ன்றிய மனதை அடக்கி, தந்தையிடம் தன் கவனத்தை ப்பினாள் நயனி. அவருடைய கையை ஆதரவாகப் த்துக் கொண்டவள் கண்ணீரை மறைத்து, "நீங்க



கவலைப்படாதீங்கப்பா! நான் இருக்கேன் உங்களுக்கு.... உங்க பக்கத்துலேயே இருந்து நான் உங்களை கவனிச்சிப் பேன். நீங்க இனிமே, நிம்மதியா ரெஸ்ட் எடுக்கணும் சரியா?" என்றாள் கனிவுடன். மருதாசலம் அவள் தலையை வருடி மெலிதாய்ப் புன்னகைத்தார்.

சிறிது நேரம் சென்று, நந்தாவுடன் பேசிக் கொண்டே அந்த அறைக்குள் வந்த டாக்டரிடம் தன் ஆக்சிஜன் மாஸ்க்கை எடுக்கும்படி சைகை செய்தார் மருதாசலம். திரும்பி அவளைப்பார்த்து. "நயனிம்மா இனிமே இதுதான் உன்னோட இடம். நீ என்னையும் நந்தாவையும் விட்டுட்டு எங்கேயும் போகக்கூடாது. ஆமாம்" என்றார் மூச்சுத்திணறலோடு.

"சரிப்பா! நான் இனிமே எங்கேயும் போகலை. இங்கேயே உங்களோட இருக்கேன். நீங்க ரெஸ்ட் எடுங்க. பேசாமப் படுத்திருங்க" என்று கூறிவிட்டு அவருடைய கைகளை ஆதரவாகப் பிடித்துக் கொண்டாள்.

டாக்டர், அவரைப் பரிசோதித்து விட்டு நர்சிடம் சில மருந்துகளை எழுதிக் கொடுத்து விட்டு நந்தாவுடன் வெளியே சென்றார். அப்போது நயனியுடைய செல்போன் ஒலிக்கவே, பேசுவதற்கு வெளியே வந்தாள் நயனி.

மாதவன் பேசினான். "ஹலோ! நான்தான் பேசறேன். அப்பாவுக்கு பரவாயில்லை. ஆனா இன்னும் ஐசியுவிலேதான் இருக்கார். அவரைப் பார்த்தா ரொம்ப கஷ்டமா இருக்கு மாதவன். நான் உடனே வர முடியாது. ஒரு பதினைஞ்சு நா நான் இல்லாம நீ மேனேஜ் பண்ணிப்பியா? அங்க பிசின எப்படிப் போயிட்டு இருக்கு? பார்த்துப்பியா? ஒண்ணு கஷ்டம் இல்லையே" என்றாள்.

''நான் பார்த்துக்கறேன் நயனி. நீ அங்க முதல்ல உன் அப்பாவைக் கவனி. ஏதாவது தேவைன்னா சொல்லு. நான் ஹெல்ப் பண்றேன். இங்கே எல்லாம் நான் பார்த்துக்கறேன்'' என்று கூறினான் மாதவன். மற்ற விஷயங்கள் அலுவலகத்தைப் பற்றி பேசிவிட்டு செல்லை நிறுத்தினாள். பின்புறமிருந்து நந்தாவின் குரல் சீற்றத்துடன் வெளிப்பட்டது.

''அதுதானே பார்த்தேன். அங்கிள் கேட்டவுடனே, நான் இங்கேயே இருக்கேன்னு சொன்னப்பவே சந்தேகப்பட்டேன். அவ்வளவும் பொய். சுயநலம் இல்லை? இன்னும் நீ மாறலை. தனக்குத்தான் எல்லாம் தெரியும்கிற திமிர்! தன்னோட விருப்பத்துக்காக, வீம்பா எது வேணாலும் செய்றவளாச்சே நீ... அதை ஒரு நிமிஷம் மறந்துட்டேன்...'' என்றான் னத்துடன்.

வேகமாகத் திரும்பிய நயனி. ''என்ன? ஒட்டுக் கட்டீங்களா? நான் யாரோட பேசறேன், என்ன பேசறேன்னு! ன் எங்கப்பாக்கிட்ட என்ன வேணும்னாலும் பேசுவேன். து என் இஷ்டம். அதைக் கேக்கறதுக்கு நீங்க யார்?'' றாள். கோபத்தில் வார்த்தைகள் அர்த்தமின்றி ளிவந்தது.

'நான் யாரா? அப்படியே அறைஞ்சேன்னா... சின்னப் ண்ணாச்சேன்னு பார்த்தா, ரொம்பத்தான் பேசறே. ஒரு ன்னை, அதுவும் மனைவியை அடிக்கிற அளவுக்கு நான் தரமானவன் இல்லை. தெரிஞ்சுக்க! என் உரிமையோட வு தெரியனும்னா, நீ இன்னும் போட்டுட்டு இருக்கியே அதைக் கேளு! நான் யார்னு சொல்லும்'' கடித்த ரிடையே சீறி விட்டு, கோபமாகத் திரும்பி வெளியே விட்டான் நந்தா.



அவனுடைய கோபமும் பேச்சில் இருந்த உண்மையும், உள்ளூர உறுத்த முகத்தை சீர்படுத்திக் கொண்டு உள்ளே சென்றாள் நயனி. தந்தையின் அருகிலேயே, ஓய்ந்து போய் வெகு நேரம் அமர்ந்திருந்தாள். பசியே மரத்துப் போய் விட்டது. சிறிது நேரம் கழித்து அறைக்குள் வந்த நந்தாவின் கைகளில் ஒரு பார்சல் இருந்தது. அதை டேபிளில் வைத்தவன், ''காலையில இருந்து நீ ஒண்ணும் சாப்பிடலைன்னு இப்பத்தான் காயத்ரி அம்மா போன்ல சொன்னாங்க. டிபன் இங்க இருக்கு'' என்று அவளிடம் கூறிவிட்டு, மருதாசலத்திடம் சென்றான்.

அவனுடைய கைகளைப் பிடித்துக் கொண்ட மருதாசலம், மெதுவாக மகளின் புறம் திரும்பி, அவளுக்காகக் கையை நீட்டினார். வேகமாக அருகில் வந்தவளின் கையைப் பிடித்து, நந்தாவின் கையுடன் இணைத்தவர், கண்களில் கண்ணீருடன் புன்னகைத்தார். நீண்ட நாட்களுக்குப் பிறகு தன்னைத் தீண்டிய நந்தாவின் விரல்களின் ஸ்பரிசம், நயனியை ஏதோ செய்தது. வலிமையான அவன் கைகளுக்கிடையில், சிறு புறாவைப் போல் தன் கை அடங்கி இருந்தது கண்களில் பட்டது.

நயனிக்கு, தான் அவனைப் பிரிந்து வந்த அன்று, தன்னை அவன் முதன் முதலாக முத்தமிட்டது இன்று நடந்தது போல் நினைவில் படருவதாய்...! அவன் தொடுகைக்கு இவ்வளவு சக்தி இருக்கிறதா என்ற கேள்வியும் பலவீனமாய் துடித்த தன் மனதை அடக்க முடியாமல் போன தன்னை எண்ணி வேதனையும் ஒருங்கே எழுந்தது.

நயனி மெதுவாகத் தன் கைகளை விடுவித்துக் கொண் டாள். அவனிடம், ''நான் அப்பாவைப் பார்த்துக்கறேன் வேலை இருந்தா நீங்க கிளம்புங்க'' என்றாள் மெதுவா

அவன் பதிலேதும் கூறவில்லை. இருந்த இடத்தை விட்டு அசையவும் இல்லை.

மருதாசலமும் தன்னையே கவனித்துக் கொண்டு இருந்த
நந்தாவிடம், கிளம்பும்படி சைகையில் கூறினார். மெதுவாக
எழுந்து அவரிடம் இருந்து விடைபெற்ற அவன் பார்வை,
ஊடுருவுவது போல் அவள் முகத்திலும் படிந்து விலகிச்
சென்றது. அந்தக் கண்கள், தன்னைக் கூர்மையாய் குத்திக்
கிழிப்பதாய்.... அவன் சென்றதும் டிபனை எடுத்து சாப்பிடத்
தொடங்கினாள்.

அன்று முழுவதும் தந்தையுடன் இருந்து விட்டு இரவுதான்,
யனி வீட்டுக்கு வந்தாள். அன்றிரவு நயனிக்கு உறக்கம்
சப்படவில்லை. ஒரு உல்லன் சால்வையை எடுத்து இரவு
டையுடன் போர்த்திக் கொண்டு தோட்டத்திற்கு வந்தாள்
வள். மர பெஞ்சில் சென்று அமர்ந்த போது வேறு
ருமில்லாமல் அந்த இடமே ஏகாந்தமாக இருந்தது.
்களை மூடி சுவாசத்தை வேகமாக உள் இழுத்து. பலவகை
்களின் நறுமணத்தை நெஞ்சினுள் நிரப்பிக் கொண்டாள்.

னம் பலவிதமான குழப்பங்களில் மூழ்கித் தவித்தது. ஒரு
. தாமரை இலை மேல் அமர்ந்த நீர்த்துளி போல்
ளுடைய மனம் மனுவுடன் ஒட்டாமல் தனித்தும்,
ளம் அவன் நினைவுகளை மறக்க முடியாமல் தவித்தும்,
கொள்ளாது தவித்தது. தந்தையைப் பற்றிய நினைவும்,
் ஆட்கொள்ள, காலையில் அவரைக் கண்டபோது,
வடுகள் அவரின் முகத்தில் வயதின் வரிகளை
்தி இருந்தது நினைவில் படர்வதாய்... தான் அவருக்கு
துன்பங்களைக் கொடுத்து விட்டோமோ என்ற
மே, கண்களைப் பனிக்கச் செய்வதாய்....



இங்கு வந்தாலே, தான் பலவீனப்பட்டு விடுவோமோ என்ற பயம்தான். இத்தனை வருடங்களாக அவளை இங்கு வரவிடவில்லை. இத்தனை நடந்தபிறகு, எதையும் மனம் மறக்கவில்லை என்பது புரிந்தது. சோகச் சிலையாய் வெகுநேரம் அமர்ந்திருந்தவள். பிறகு தன் அறைக்குச் சென்று உறங்கிவிட்டாள். கனவுகளிலும் மனுவின் நினைவே ஆட்சி செய்தது.

காலையில் எழுந்து தயாராகி தன் காரிலேயே தந்தையைப் பார்க்கச் சென்றாள். அவளுக்கு முன்பே அங்கு வந்து பேசிக் கொண்டு இருந்தான் நந்தா. தந்தையின் தேவைகளை கவனித்துக் கொண்டு அங்கேயே இருந்தாள் நயனி. அன்று அறைக்கு அவரை மாற்றி இருந்தார்கள். அந்த வாரம் முழுவதும் அப்படியே நாட்கள் கழிந்தன. காலை, மாலை இரு வேளைகளிலும் தினமும் நந்தா வந்து அவரைப் பார்த்துச் செல்வான்.

அன்று மருதாசலத்தை வீட்டுக்கு அனுப்பும் நாள். அன்று காலையில், நந்தாவே வந்து அவரை அழைத்துச் சென்றான். நந்தாவாகவே ஏதாவது பேசுவான் என்று எதிர்பார்த்துக் காத்திருந்ததால், நயனிக்கும் அவனுக்கும் இடையே ஒரு வாரமாக கனத்த மவுனமே நிலவியது.

அன்று மருதாசலம் உடல்நலம் தேறி நன்றாக இருந்தார். முகத்தில் சோர்வு மட்டும் இல்லையென்றால் அவரை ஒரு நோயாளி என்றே அறிய முடியாதபடி தேறி இருந்தார். மகளும், மருமகனும் சேர்ந்து வந்ததைக் கண்டபோது. முகம் மலர்ந்து பளபளத்தது. அவர் முகத்தில் இருந்த இந்த சந்தோஷத்தை, தன்னால் நிலைக்கச் செய்ய முடியுமா என்ற பயம், நயனிக்குள் வந்தது. அவரிடம் சென்று அமர்ந்து அவர் கைகளை ஆதரவாகப் பிடித்துக் கொண்டாள்.

''நயனி, நேத்துதான் மாப்பிள்ளை எல்லாம் சொன்னார். உங்க ரெண்டு பேருக்கும் நடுவுல எல்லாம் சரியாயிடுச்சின்னும், இனிமே நீ இங்கேதான் இருப்பேன்னும் அவர் சொன்னவுடனே, துள்ளிக் குதிக்கிற அளவுக்கு எனக்குத் தெம்பு வந்திருக்குன்னா பாத்துக்கோயேன். ஐயாம் சோ ஹேப்பிடா... இதைவிட எனக்கு வேற என்ன டானிக் வேணும் சொல்லு!'' என்று அகமகிழ்ந்து சிரித்தார்.

ஒன்றும் புரியாமல் யோசனையுடன் தலை குனிந்த அவளைக் கண்டதும், மருதாசலம் நந்தாவிடம் திரும்பி, ''நந்தா என் பெண்ணுக்கு வெக்கத்தைப் பாரேன். இன்னிக்குத்தான், முதன் முதலா என் பொண்ணு வெக்கத்துல தலைகுனியறதைப் பாக்கறேன். ரொம்ப நாளாச்சி! இனிமே எமனே வந்து கூப்பிட்டாலும், நான் போகமாட்டேன்'' என்றார், முகம் நிறைந்த மகிழ்ச்சியுடன்.

மெல்ல நிமிர்ந்த நயனி, யோசனையுடன், ஓரக்கண்ணால் நந்தாவை நோக்கியபோது அவனும் அவளிடமே பார்வையைப் பதித்திருந்தான். உடனே பார்வையை விலக்கிக் கொண்டாள் நயனி. மருதாசலம் வீட்டிற்கு வரும்போதே இயல்பாகி விட்டார். உள்ளே வரும்போதே, வேலைக்காரர்களிடம் எப்போதும் போல் உற்சாகத்துடன் பேசிக் கொண்டே வந்தார். அனைவரும் வியப்புடன் அவரைப் பார்த்தனர்.

''அம்மா! இத்தனை வருஷமா நீங்க இல்லாதப்ப, ஐயா ஏதோ யோசனையாவே இருந்தாங்க. இப்ப நீங்க வந்ததுமே, பழைய சிரிப்பும் சேர்ந்து வந்திருச்சிம்மா. ஐயாவ விட்டுட்டு எங்கேயும் போகாதீங்கம்மா. அவரு முகத்தில் சிரிப்பைப் பாருங்களேன்'' என்றனர் நயனியிடம். ஐந்து வருடங்கள் பின்பு, கலகலவென்று இருக்கும் தந்தையின் நினைவு வந்தது.



அவருடைய சுபாவம், அவள் சென்னைக்கு சென்றபின் மாறி இருக்கும் என்றால், அதை அவளால் நம்ப முடியவில்லை.

அப்பாவை அவருடைய அறையில் படுக்க வைத்து, எல்லா உதவிகளும் செய்து விட்டு, நயனி வெளியே வந்தபோது ஹாலில் அவளுக்காகக் காத்திருந்தான் நந்தா. நந்தாவை அவள் பார்த்த பார்வையில் ஒரு கேள்வி இருந்தது. ஹாலில் அமர்ந்திருந்த நந்தா அவளைக் கண்டதும், முகத்தில் யோசனையுடன் எழுந்து வந்தான்.

அதற்குள் நயனியே வேகமாக அவனருகில் சென்று, ''நான் உங்களோட கொஞ்சம் பேசணும். உங்க மனசுல நீங்க என்ன நினைச்சிட்டிருக்கீங்க? உங்க இஷ்டத்துக்கு அப்பாகிட்ட என்னவெல்லாமோ சொல்லி வச்சிருக்கீங்க... ஏன் அப்பாகிட்ட பொய் சொன்னீங்க? நம்ப ரெண்டு பேருக்குள்ளே எல்லாம் சரியாயிடுச்சி... நான் இங்கேயே இருக்கப் போறேன்னு ஏன் சொன்னீங்க?'' என்று கேள்விகளை அடுக்கினாள்.

''ஷ்..... அங்கிளோட ஆபீஸ் ரூமுக்குப் போகலாம் வா'' என்றவனைப் பின் தொடர்ந்தாள்.

## 4

மருதாசலத்தின் அலுவலக அறைக்குள், இருவரும் நுழைந்தவுடன் கதவைச் சாத்திய நந்தா, அவளிடம் கோபத்துடன் திரும்பினான்.

''உனக்குப் பொறுமை மட்டும் தான் இல்லைன்னு நினைச்சேன். ஆனா அறிவும் இல்லைன்னு இப்பத்தான் தெரியுது'' என்றான் குத்தலாக.

''எனக்கு அறிவிருக்கிறது இருக்கட்டும்... நீங்க ஏன் அப்பாகிட்ட பொய் சொன்னீங்க? அதைச் சொல்லுங்க முதல்லே...'' என்றாள் கோபமாக.

''அவர் ஒரு ஹார்ட் பேஷண்ட். இப்ப அவருக்கு நிம்மதிதான் தேவைன்னு, டாக்டர் என்கிட்ட சொன்னார். அது எனக்குப் புரிஞ்சுது. அவருக்கு எது நிம்மதியையும், சந்தோஷத்தையும் தருமோ அதைச் சொன்னேன். இது பொய்தான்! ஆனா, எனக்கு அங்கிள் மேலே இருந்த அக்கறையிலே ஒரு பர்சன்ட் கூட உனக்கு இல்லைன்னு இப்பத்தான் தெரியுது'' என்றான் கேலியாக.

பற்களால் உதடுகளைக் கடித்து தன் தவறை உணர்ந்தவள். ''ஆனாலும் நடக்காத ஒண்ணை, அவரை நம்ப வச்சு ஏமாத்தறது தப்பில்லையா?'' என்றாள் மெலிந்த குரலில் நயனி. தன் பேண்ட் பாக்கெட்டில் இரு கைகளையும் விட்டுக் கொண்டு, அவளையே உணர்ச்சி இல்லாத விழிகளால் அளந்தவன், ''ஓகே! இப்பவே நீ போய் அதெல்லாம் பொய்னு சொல்லலாம். ஆனா, அப்புறம் உங்க அப்பாவோட ஹெல்த் எப்படி இருக்கும்னு எனக்குத் தெரியாது. வேணும்னா ட்ரை பண்ணு'' என்று கூறி, உதடுகளைப் பிதுக்கி தோளைக் குலுக்கினான் அவன்.

நயனி கோபத்துடன் ''என்னை என்ன நினைச்சீங்க? நான் ப்படி அப்பாகிட்ட போய்...?'' என்பதற்குள், அவன் கை யர்ந்து இடைமறித்தது. ''புரியதுல்ல இப்ப, அங்கிள் ம்மைப்பற்றி கேட்டப்ப நானும் அப்படி ஒரு பொய் ான்னேன். இன்னும் கொஞ்ச நாள்... அப்புறம், அவரோட றல்த் சரியான உடனே நீ எங்க வேணா போ! அப்புறம் க்கு இந்தக் கத்தல், ரசாபாசங்கள் இதெல்லாம் பிடிக்காது



புரியுதா?'' என்று ஆழ்ந்த குரலில் கூறிவிட்டு, செல்லும் அவனையே கோபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள் நயனி.

அவன் அறைக்கதவைத் திறக்கும் முன், ''ஒரு நிமிஷம்! எனக்கும் சண்டை போடறது, கத்தறது இதெல்லாம் பிடிக்காது'' என்றாள் நயனி வீம்பாக. கதவைத் திறந்து விட்டு திரும்பியவன் ''தேங்க் காட்!'' என்று அழுத்தமாக கூறிவிட்டு வெளியே சென்று, கதவை அழுந்த சாத்தினான். அந்த அறைக்கதவைப் போல் அவனுடைய இதயக் கதவும் அழுத்தமாக மூடப்பட்டு விட்டதோ என்று நயனிக்குத் தோன்றியது.

காரணமில்லாமல் ஒரு சோகம் நெஞ்சில் குடி புகுந்து ரணமாய் வலிக்கச் செய்தது. தன் மனதில் நுழைந்த காதல் மட்டும், அவன் இதயத்தில் நுழையாதது புரியாத புதிராக இருந்தது. தான் இத்தனை வருடங்களாக அவனை மறந்து விட்டோம், வெறுத்து விட்டோம் என்று தன் மனதினுள் அவள் எண்ணியிருந்ததெல்லாம் வெறும் மாயை என்று இப்போது புரிந்தது. அவனைக் கண்ட மறுகணமே தன் உணர்வுகள் புதுப்பிக்கப்பட்டதும், அவனின்றி தன் மனம் தனிமை எனும் வெட்டவெளியில் இதுவரை வாடி இருந்ததும் புரிந்தது.

ஆனால் புரிந்த விஷயம்தான், மனதில் கலக்கத்தைப் படர செய்வதாய்... ஏனோ மிகவும் ஆயாசமாக இருந்தது. மனம் பழைய நினைவுகளையே திரும்பத் திரும்ப அ போடுவதாய்... சோர்ந்து போய் அமர்ந்திருந்தாள் நயனி.

அன்றிலிருந்து தான் மட்டுமே உணர்ந்த எதிர்காலமில்லா தன் காதலை, அவனிடமிருந்து மறைக்க முற்பட்டாள் நய அவன் வந்தாலே தன் அறைக்குள் சென்று விடுபவ அவனுடைய கார் கிளம்பிச் சென்ற பிறகே வெளி

வருவாள். இந்தக் கண்ணாமூச்சி ஆட்டம், மூன்று நாட்கள் வரை தொடர்ந்தது.

நான்காம் நாள், நந்தா வந்த சிறிது நேரத்திற்கெல்லாம் காயத்ரி வந்து, அப்பா அவளை அழைப்பதாகக் கூறினார். அவருடைய அறைக்குள் நுழைந்தபோது இருவரும் இயல்பாக ஏதோ பேசி சிரித்தபடி இருந்தனர். அதைக் கண்ட நயனியின் விழிகள் பொறாமையில் சுருங்கியது. தான் மட்டும் தனித்து விடப்பட்டாற்போல் தோன்றியது. நந்தாவின் முகம், அவளைக் கண்டதும் சுருங்கி இறுகியது.

அப்பா மட்டும் கைகளை விரித்து, ''வாடா நயனி, நந்தா வரும் போது நீயும் கூட வரக்கூடாது? தனியாத்தான், நந்தாவோட பேசவியா? என் எதிர்லே பேசமாட்டியா? அப்படி என்னடா வெட்கம் உனக்கு?'' என்றார் முகத்தில் மலர்ச்சி யுடன்.

அவர் கேள்விக்குப் பதிலொன்றும் கூறாமல், அவர் அருகே சென்று அமர்ந்து, அவர் மேல் ஆதரவாக சாய்ந்து கொண்டாள் நயனி. அவள் தலையைப் பாசத்துடன் வருடிய மருதாசலம், ''நயனி! இனிமே அதுதான் உன் இடம்... அங்கதான் நீ சாஞ்சுக்கணும்'' என்றார் நந்தாவின் பரந்து விரிந்த தோள்களைக் காட்டியபடி.

நந்தா உடனே பேச்சை மாற்றும் விதமாக, ''அங்கிள் நான் ளம்பறேன். ஆனிவர்சரி பங்ஷனுக்கு எல்லா ஏற்பாடும் ண்ணனும்'' என்றபடி எழுந்து அவளை நோக்கி ''பை நயன்'' றான் மெல்லிய குரலில். அவளுக்கு தன் பெயர் அவன் வில் இனிதாய் சாமரம் வீசுவது போல் காதுகளில் டியது. ஆனால் உடனே இறுகிய அவனுடைய முகம், அது தந்தைக்காக என்பதை அவளுக்குத் தெளிவாய் ர்த்துவதாய்!



அவன் கிளம்பியதுமே அவளை எழுப்பி அனுப்பினார் மருதாசலம். ''போய் கூட இருந்து மாப்பிள்ளையை அனுப்பி வச்சிட்டு வாம்மா'' என்றார் கரிசனத்துடன். அப்பாவிற்காக எழுந்து அவன் பின்னால் சென்ற நயனி, அறையை விட்டு வெளியே வந்ததும் வேகமாக தன் அறைக்கு செல்லத் திரும்பினாள். ''ஒரு நிமிஷம்'' என்று அவளைத் தடுத்தான்.

கோபத்துடன் நிமிர்ந்தவள், ''எனக்குத் தெரியும்! இதெல்லாம் அப்பாவுக்காகத்தான்... அப்படின்னுதானே சொல்லப்போறீங்க. நான் ஒண்ணும் உங்க அன்புக்காக ஏங்கித் தவிக்கலை! எனக்கு என் அப்பா மட்டும் போதும்'' என்றாள் நயனி.

''நான் அதுக்காக உன்னைக் கூப்பிடலை. ஆனா, நீ புரிஞ்சிக்கிட்டா சரிதான். ஆனா எனக்கு ஒண்ணுதான் புரியலை. ஏன் இந்தக் கோபம்? இயல்பா இருக்க வேண்டியது தானே? ஒரு வேளை நீ சொல்றதெல்லாம் பொய்யா?'' என்றான் சிரிப்பை அடக்கியபடி.

''பின்னே வேற எதுக்குக் கூப்பிட்டீங்க? நான் போகணும்'' என்றாள் திரும்பி நின்றபடி நயனி. அவனும், ''இந்த வீக் என்ட் நம்ம டீ பேக்டரியோட ஆனிவர்சரி பங்ஷன் வருது! அதுல என் மனைவிங்கற பெயரிலே நீதான் என்னோட நிக்கணும்!'' என்றான் ஆணையிடும் குரலில்!

உடனே, ''ஓஹோ! இதுக்கு மட்டும் மனைவியா நான் வேணும் இல்லை?'' என்றாள் நயனி கிண்டலாக. நந்தா, பொருள் நிறைந்த ஒரு பார்வையுடன், ''ம்... மத்ததுக்கும் வேணும்தான்! ஆனா நீ ரெடின்னா நானும் ரெடிதான் அதுக்கெல்லாம்!'' என்றான் கண்ணோரம் மெலிதாக சுருக்கத்துடன்.

அவள் முகம் கோபத்திலும், வெட்கத்திலும் குழம்பிச் சிவந்தது. வேகமாய்த் திரும்பி, அவசரமாய் தன் அறைக்குள் வந்ததும், ஏனோ மூச்சு வாங்கியது நயனிக்கு. அவனை விரும்பவில்லை என்றால், தான் ஏன் இன்னும் மறுமணம் செய்து கொள்ளாமல், காத்திருக்கிறோம் என்பது உள்ளத்தை உருக்குவதாய்!

எஸ்டேட் விழாவிற்கு, இரண்டு நாட்கள் இருந்தது. நயனி தன் தந்தையுடன் பேசிக்கொண்டு இருந்தபோது, உள்ளே வந்தான் நந்தா. அவன் கையில் இரண்டு பார்சல்கள் இருந்தன. ஒன்றை மருதாசலத்திடமும், மற்றொன்றை அவளிடமும் கொடுத்தான் அவன். என்னவென்று புரியாமலே, தந்தையின் எதிரில் அவனை எதிர்க்க மனமின்றி வாங்கிக் கொண்டாள் அவள்.

நந்தா மருதாசலத்திடம், "அங்கிள் பங்ஷனுக்கா இதெல்லாம் நான் வாங்கினேன். அன்னிக்கு எங்க லைஃபை புதுசா ஸ்டார்ட் பண்ணலாம்னு! உனக்குப் பிடிச்சிருக்கா பாரு டியர்!" என்றான், அவள் புறம் திரும்பி. பற்களைக் கடித்துக் கொண்டே, கோபத்துடன் பிரித்துப் பார்த்தவளுக்கு கண்களை அந்தப் புடவையை விட்டு அகற்றவே மனமில்லை.

இளம் பிஸ்தா வண்ணத்தில், உடல் முழுவதும் வெள்ளி
ரிகையில் நடனப் பெண்களின் உருவம் மின்ன, அழகுற
ய்யப்பட்டிருந்தது அந்த அழகிய பனாரஸ் புடவை.
தினுள், அவனைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.
ாட்டவும் மனமின்றி, பேசாமல் இருந்தாள் நயனி.

டவையை வாங்கிப் பார்த்த மருதாசலம், "நல்ல
க்ஷன் நந்தா. ரொம்ப அழகா இருக்கு" என்றார்



பாராட்டும் விதமாக, கண்களில் வராது, இதழ்களில் மட்டும் வந்த சிறு புன்னகையுடன் எழுந்த நந்தா, "நான் கிளம்பறேன் அங்கிள்" என்றபடி திரும்பி, அவளைப் பார்த்து தன்னுடன் வரும்படி சைகை செய்து விட்டுச் சென்றான்.

'இவன் கை சொடுக்கி கூப்பிட்ட உடனே, பின்னாடியே செல்வதற்கு நான் என்ன இவன் வீட்டுப் பூனைக் குட்டியா?' என்று மனம் புகைந்த போதும், மெல்ல எழுந்து அவன் பின்னால் சென்றாள் நயனி. அறையை விட்டு விட்டு வெளியே வந்தவுடனே அவளிடம் திரும்பி, "நான் அங்கிளோட மனத்திருப்திக்காக இது மாதிரி சிலதெல்லாம் செய்ய வேண்டியிருக்கு. அதை நீ பொறுத்துக்கிட்டுதான் ஆகணும். அப்புறம் இன்னொரு விஷயம்! இந்தப்புடவை பிடிக்கலைன்னாலும் உன் அப்பாவுக்காக நீ கட்டித்தான் ஆகணும்... புரியுதா?" என்று கூறிவிட்டுத் திரும்பிப் பாராமல் செல்லும் அவனைப் பார்த்து கோபமாக வந்தது நயனிக்கு.

நான் ஏன் இப்படி மாறிவிட்டேன்? அப்பாவுக்காகவே என்றாலும் இவன் சாவி கொடுத்தால் ஆடுகிற பொம்மை மாதிரி ஆகிவிட்டேனே என்ற எண்ணம், ஒருவித இயலாமையை மனதில் ஏற்படுத்த, அப்படியே சுவரில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டாள். தன் இதழ்களில் ஒரு வெற்றிப் புன்னகையுடன் வேகமாகக் காரை ஓட்டிக் கொண்டு தன் எஸ்டேட் அலுவலகத்திற்கு சென்றான் நந்தா.

நயனி திரும்பி வந்து, தந்தையுடன் சிறிது நேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டுப் பிறகு அந்தப் புடவையுடன் தன் அறைக்கு வந்தாள். மனம் மட்டும் அந்த விழாவைத் தான் எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்பதிலேயே இருந்தது. நந்தாவின் அருகில் நின்று, செயற்கையான புன்னகையுடன்

ஒன்றிப் பொருந்தாமல், தான் பங்கேற்கப் போகும் இந்த விழாவை நினைத்தால், மனம் விதிர்த்துப் போனது. பேசாமல் சென்னைக்கு ஓடிவிடலாம் என்றிருந்தது.

அந்த ஞாயிறும் வந்தது. அன்று மாலை நயனி மிதமான ஒப்பனையுடன், அழகிய தலையலங்காரத்துடன், புதுப் புடவை அணிந்து, பொருத்தமான நகை அலங்காரத்தில் தயாராகி, கண்ணாடியில் பார்த்த போது அவளால் தன் கண்களையே நம்ப முடியவில்லை.

அப்போதுதான் திருமணம் முடிந்த புதுமணப்பெண் போல் தெரிந்தது. எதிரே கண்ணாடியில் பிரதிபலித்த அவளின் பிம்பம். ஜீன்சிலும், சுரிதாரிலும் இன்று வரை, தன் பெண்மையே எங்கோ தொலைந்து போயிருந்ததோ என்ற பிரமை மனதிற்குள் எழுந்தது.

ஐந்து மணிக்கு வந்து அழைத்துச் செல்வதாக, நந்தா கூறியதால் அவசரமாகத் தயாராகி தந்தையைப் பார்க்கச் சென்றாள். மருதாசலம் அவளைக் கண்டதுமே இரு கைகளையும் விரித்து, ''வாவ்... இன்னிக்கு நந்தா கிளீன் போல்டுதான்'' என்றார் பிரமிப்புடன். ஒரு செல்லச் சிணுங்கலுடன் நயனி, ''போங்கப்பா! உங்களுக்கு எப்பவுமே கிண்டல்தான்'' என்றாள் சலுகையாக. வெளியே கார் வந்து நிற்கும் சப்தம் கேட்டது.

## 5

மருதாசலமும் நயனியும் வெளியே வந்தபோது, தன் இயல்பான வேக நடையுடன் எதிரே வந்த நந்தாவைப் பார்த்தபோது, ஒரு கணம் மூச்சடைத்தது, நயனிக்கு! கோட்,



சூட்டில் கம்பீரமாக இருந்தான் நந்தா. அவர்களுடைய கல்யாணத்தன்று பார்த்த மாதிரியே இன்றும் இருந்தான். முகத்தின் முதிர்ச்சி மட்டும், புதிதாக இருந்தது.

நயனியை நிமிர்ந்து நோக்கிய அவனுடைய முகத்தில் பெரிதும் மாற்றமின்றி, கண்ணோரம் ஒருவித சுருக்கம் வந்து, பின் இயல்பானது. ஒரு கணம் அதிகமாக அவள் மீது பதிந்த பார்வையை விலக்கியவன், மருதாசலத்திடம் வந்தான். ''இந்த ட்ரெஸ் உங்களுக்கு ரொம்ப நல்லாருக்கு அங்கிள்! உங்களுக்குப் பிடிச்சிருக்கா?'' என்று கேட்டான்.

''ரொம்ப... ஆனா இந்தக் கேள்வியை, நீ உன் பெட்டர்ஹாஃப் கிட்ட கேட்டிருக்கணும்'' என்றார் கேலியுடன். சிறுபுன்னகையுடன் அவளிடம் திரும்பியவன், மெலிதான குறும்புடன் கண்சிமிட்டி, ''எப்படி என் செலக்ஷன்?'' என்றான் குறும்பாக. மனதை யாரோ புரட்டிப் போட்டது போல் இருந்தது நயனிக்கு. எதுவும் கூறாமல், தலையை மட்டும் அசைத்தாள். எப்படி இவனால், நினைத்தவுடன் தன்னை மாற்றிக் கொள்ள முடிகிறதென்று மனது ஆயாசமானது.

அவர்கள் மூவரும் எஸ்டேட் அலுவலகத்திற்கு சென்றபோது ஊழியர்களின் வரவேற்பு உற்சாகமாக இருந்தது. அவளைக் கண்டதும், பழகிய பழைய ஊழியர்கள் முகம் மலர்ந்து விசாரித்தனர். விழாவிற்கான ஏற்பாடு நடந்து கொண்டு இருந்ததால், மருதாசலத்தை மேடையில் அமர வைத்துவிட்டு, அவளுடன் வாசலில் வரவேற்பதற்கு வந்து நின்று கொண்டான் நந்தா.

பக்கத்து எஸ்டேட்களில் இருந்து வரும் நண்பர்களையும், எஸ்டேட் தொழிலாளர்களையும் வாசலிலேயே இருவரும் இணைந்து நின்று வரவேற்றனர். நந்தாவுடன் இணைந்து நின்ற

அந்தக் கணம், ஏனோ உடல் சிலிர்த்தது நயனிக்கு! எல்லோரையும் வரவேற்கும் விதமாக, இதழ்களில் தேக்கி வைத்து இருந்த புன்னகை இயல்பாகி, நிரந்தரமாயிற்று.

புன்னகையுடன் நந்தாவும், அவளுடன் இணைந்து நின்று அனைவரையும் வரவேற்றான். அன்று விழா முடியும் வரை, நந்தாவின் அருகாமை, ஒரு வித இனிமையான சுகமாகவே நயனிக்குத் தோன்றியது. விழா முடிந்து, திரும்பி வரும்போது மருதாசலம் களைத்திருந்தார். பயணம் முழுவதும் புரியாத மவுனத்தில் கடந்தது. வீட்டிற்கு வந்து அவரை ஓய்வெடுக்கச் செய்து விட்டு நயனி வெளியே வந்போது அவளுக்காகவே காத்திருந்தான் நந்தா.

அவளைக் கண்டதும் அருகில் வந்தவன், "தேங்ஸ் நீ எப்படி நடந்துக்கப் போறியோன்னு பயந்திட்டு இருந்தேன். உன்னோட நடிப்பு, ரொம்ப இயற்கையாக இருந்தது. மனசு ஒன்றிப் போன மனைவி மாதிரி நீ என்னோட நின்னு போஸ் கொடுத்ததுக்கு தேங்க்ஸ்... குட்நைட்!' என்ற முணுமுணுப் புடன் வெளியே சென்று விட்டான்.

நயனிக்கோ, "இல்லை.... நான் நடிக்கலை. உண்மையா, இயல்பாதான் இருந்தேன்..." என்று அவனிடம் கூறவேண்டும் போல்... தலைவலிக்க ஆரம்பித்தது. இவன் தன்னைப் புரிந்து கொள்ளவே மாட்டானா என்ற தவிப்பு மனதை வேதனைப் டுத்துவதாய்! தோட்டத்தில் இறங்கி நடந்தால், மனதின் வலி றையுமோ என்று மெதுவாகச் சென்று, தோட்டத்து பெஞ்சில் மர்ந்தாள்.

அன்று நிலவின் வருகையின்றி இரவு ஓய்வெடுத்துக் ாண்டு இருந்தது. இரவின் தனிமையில் அந்தச் சிறு புறா டும் துணையின்றி தத்தித் தவித்து கண்களில் ஏக்கம்



சுமந்தது. அதன் மனம் காதலில், நிலை கொள்ளாமல் தவித்தது. ஊரே உறங்கினாலும் அன்று அவளால் மட்டும் உறங்க முடியவில்லை. அக்கினிப்பூவாய் தகித்த மஞ்சத்தில், தோகை எனத் துவண்டாள் நயனி.

மறுநாள் காலையிலேயே, மாதவனிடம் இருந்து போன் வந்தது. அன்று மாலை கிளம்பி, அவள் தந்தையைப் பார்க்க வருவதாகக் கூறினான் மாதவன். செல்லில் மாதவனின் எண்ணைக் கண்டதும் எடுத்தவள், "ஹலோ.... மாதவன் எப்படி இருக்கே... வொர்க் எல்லாம் எப்படிப் போகுது? டெய்லி நைட் ஷ்யாமாகிட்ட பேசிடறேன். எல்லாம் ஸ்மூத்தா போறதா அவ சொன்னா!" என்றாள் நயனி.

"எல்லாம் நார்மலா இருக்கு... புது ஆர்டர் கூட ஷ்யாமாவே நல்லா பாத்துகிறாங்க... டோண்ட் ஒர்ரி நயனி! அங்கிளுக்கு இப்ப எப்படி இருக்கு? ஹெல்த் இம்ப்ரூவ் ஆகி இருக்கா?"

"ம்! இப்ப நல்லா இருக்கார் மாதவன்... ஜெனரல் வீக்நெஸ் கொஞ்சம் இருக்கு. மத்தபடி ஓகே! என்னை ரொம்ப மிஸ் பண்ணி இருந்திருக்கார் பாவம்... எனக்கு ரொம்ப கில்டியா இருக்கு" என்றாள் சோர்வுடன்.

"பீ சியர்ஃபுல் நயனி! எல்லாம் சரியாயிடும். நீ எப்பவுமே கலகலன்னு சிரிச்சிட்டிருக்கற, அந்தப் பழைய நயனியாவே இருக்கணும். நான் இன்னிக்கே, ஈவினிங் கிளம்பி அங்கே வரேன்" என்றான் உற்சாகமான குரலில்.

"வா மாதவன்... எனக்கும் என்னவோ மனசு கஷ்டமாகவே இருக்கு. ஒரு சேஞ்ச் வேணும் போல இருக்கு. இரண்டு நாள் தங்கற மாதிரித் தானே வரே?"

"ஆமாம்! இங்க எல்லாரும் உன்னை ரொம்ப மிஸ் பண்றோம். நைட் பார்க்கலாம்... என்ன?" என்று கூறி

வைத்தான். அப்பாவிடம் பேசிக் கொண்டு இருந்த போது, மாதவன் இன்று வருவதைப் பற்றிக் கூறினாள் நயனி. அவரும் உற்சாகத்துடன், ''வரட்டும்! தங்கற மாதிரி வரச் சொன்னி யாம்மா?'' என்று விசாரித்தார். தன்னைப் பார்க்க வந்த நந்தாவிடமும் மாதவனின் வருகையைப் பற்றிக் கூறினாள். அவன் முகம் சுருங்கியதை, நயனி கவனித்து விட்டாள்.

இரவு, மாதவன் வரும் போதே மணி பத்தைத் தாண்டி இருந்தது. அவனுக்கு என்று ஒதுக்கப்பட்டிருந்த அறையில், அவன் உடைமைகளை வைத்து விட்டு வேலையாள் வெளியேறினான். ''ரெஸ்ட் எடுத்துக்க மாதவன். அப்பா தூங்கிட்டார். காலையில் பார்க்கலாம்... குட் நைட்!'' என்று கூறிவிட்டு தன் அறைக்கு வந்து படுத்தாள் நயனி.

மறுநாள் காலை எழுந்தவுடன் குளித்துத் தயாராகி, மாதவனைப் பார்க்கச் சென்றால், அவன் குளித்துக் கொண்டு இருந்தான். சமையலறைக்கு சென்று, இரண்டு காபி கப்பை வாங்கிக் கொண்டு தந்தையிடம் சென்றாள் நயனி. மருதாசலம் புன்னகையுடன். ''எங்கேம்மா உன் ஃப்ரண்ட் மாதவன்? நைட் ...த்தனை மணிக்கு வந்தார்? லேட்டாயிடுச்சா? என்று ...கள்விகளை அடுக்கினார்.

''அப்பா... மெதுவாப் பேசுங்க! ஒவ்வொரு கேள்வியாக் ...ளுங்க. மாதவன் நைட்டே வந்தாச்சு. குளிச்சி ரெடியான ...டனே, உங்களைப் பார்க்கவருவார். அவர் வரும்போது ...க தூங்கிட்டிருந்தீங்க. அதனால உங்களை டிஸ்டர்ப் ...ணலை, போதுமா?'' சிரித்தபடி கூறினாள் நயனி.

...யாசனையுடன் நிமிர்ந்தவர், ''நந்தா எங்கேம்மா இன்னும் ...ல'' என்றார். ''தெரியலைப்பா! வருவார். நான் போய் ...ன் ரெடியான்னு பார்த்து அழைச்சிட்டு வரேன்'' என்று



கூறித் திரும்பிய நயனி, அப்போது தான் உள்ளே வந்த நந்தாவைக் கவனிக்காமல், அவன் மீது மோதிக் கொண்டாள். தடுமாறிய அவளை, லாவகமாக ஒற்றைக் கையால் தாங்கி நிறுத்திய நந்தாவுக்கு, ஒரு பூங்கொத்து வந்து தன் முகத்தில் மோதியது போலிருந்தது.

அவன் இதமாய்த் தாங்கியதால், நயனியின் சுவாசம் வேகம் ஆனது. நெஞ்சக்குள்ளே ஆயிரம் தும்பியின் சிறகடிப்புகள்! பூங்காற்றுக்கும் தாங்க முடியாத லயமாய், இதயம் படபடத்தது. அவனிடமிருந்து பதறி விலகி 'சாரி' என்றாள் அவள்.

மருதாசலம் பின்புறமிருந்து, ''கணவன் மனைவிக்குள்ளே ஊடல், மோதலுக்கெல்லாம் எதுக்கும்மா சாரி சொல்றே'' என்றார் கிண்டலாக. தன்னை நிலைப்படுத்தியவள், சிவந்த முகத்துடன் ஒன்றும் கூறாமல் வேகமாக வெளியே சென்றாள்.

சிவந்திருந்த அவள் முகத்தையே, ஒரு வித ஆராய்ச்சி யுடன் கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்த நந்தா மருதாசலத்துடன் சென்று அமர்ந்து பேச ஆரம்பித்தான். நயனி திரும்பி வந்து மாதவனை அறிமுகப்படுத்தினாள்.

உள்ளே வந்த மாதவன் மருதாசலத்தின் அருகில் சென்று, ''சார், ஐயம் மாதவன்! நீங்க ஹாஸ்பிட்டல்ல இருந்தப்ப, என்னால உடனே வந்து உங்களைப் பார்க்க முடியலை. சாரி! இப்ப ஹெல்த் எப்படி இருக்கு? பரவாயில்லையா? நல்லா ரெஸ்ட் எடுத்துக்குங்க'' என்று விசாரித்தான்.

நயனி, மருதாசலத்திடம் ''அப்பா! இதான் மாதவன். என் ப்ரெண்ட் வெல்விஷர், பிசினஸ் பார்ட்னர்... ரொம்ப நல்லவன்'' வாஞ்சையுடன் கூறினாள் நயனி. அவர்க...

இருவரையுமே. உற்று நோக்கிக் கொண்டிருந்த நந்தாவின் விழிகள் சிவந்து பளபளத்தன.

மாதவனின் கையைப் பிடித்துக் கொண்ட மருதாசலம், ''ரொம்பத் தேங்ஸ்பா! இத்தனை நாளா, என் பொண்ணைப் பத்திரமா பாத்துக் கிட்டதுக்கு! உன்னைப்பத்தி நயனி நிறைய சொன்னா. இனிமே அவ இங்கதான் இருக்கப்போறா. அப்புறம் ஒரு வி.ஐ.பி.ய, உங்கிட்ட அறிமுகப்படுத்தனுமே...'' என்றபடியே நந்தாவிடம் திரும்பினாள்.

''இவர்தான் என்னோட மாப்பிள்ளை நந்தா. நயனியுடைய ஹஸ்பெண்ட். தங்கமானவர். ரொம்ப நல்லவர். இன்னும் சொல்லப்போனால் எனக்கு ஒரு மகன்னே சொல்லனும் எனக்கு கிடைச்ச அருமையான நண்பன்னும் சொல்லலாம்,'' என்றார் பெருமையாக.

''அப்பா... அவனை ஏம்பா போரடிக்கிறீங்க? உங்க மாப்பிள்ளை புராணத்தை விடவே மாட்டீங்களா?'' என்றாள் யனி சலிப்புடன். நந்தாவிடம் திரும்பிய மாதவன், ''ஹலோ ார்! எப்படி இருக்கீங்க? நானே உங்களைப் பார்த்துப்பேச, ங்க வீட்டுக்கு வரணும்னு நினைச்சிக்கிட்டு இருந்தேன்'' ன்றான் நட்புடன் கை குலுக்கியபடி. அதற்குள் மருதாசலம் துவும் நந்தாவோட வீடுதான் மாதவன்'' என்றார்.

அவன் கைகளைப் பிடித்துக் குலுக்கிய நந்தாவும், ''பைன்! ா நல்லா இருக்கேன். அதுவும் இப்ப என் ஒய்ஃப் கூட க்கும்போது இன்னும் சந்தோஷமா இருக்கேன்!'' என்று க் திரும்பி நயனியைப் பார்த்து கண் சிமிட்டிப் ைகைத்தான். நயனிக்குத்தான் தர்மசங்கடமானது.

வனையே கவனித்த நந்தா, வெற்றி கொண்ட புன்னகை ற சிந்திவிட்டு, மாதவனிடம் ''எஸ்டேட்டை சுற்றிக்



காட்டறேன். என் கூட வாங்களேன் சுத்திப்பார்த்துட்டு வரலாம்'' என்று இயல்பாக அழைத்தான். மாதவனும் உற்சாகத்துடன் கிளம்பிச் சென்றான்.

## 6

நந்தாவுடன் கிளம்பிக் காரில் சென்ற போது. மாதவனுக்கு முதலில் என்ன பேசுவதென்றே தெரியவில்லை. நந்தாவே அவனிடம் பேசினான். ''உங்க பிசினஸ் எல்லாம் எப்படி போயிட்டுருக்கு மாதவன்? நயனி இல்லாமல் மேனேஜ் பண்ணிப்பீங்களா? சிட்டி லைப் தனிதான்'' என்றான்.

''பிசினஸ் பத்தி எந்தப் பிராப்ளமும் இல்லை. நல்லாப் போகுது. ஆனா நயனி இல்லாததுதான் கொஞ்சம் கஷ்டம்... பட் மேனேஜ் பண்ணிடுவேன்'' என்றான். யோசனையுடன் திரும்பிய நந்தாவின் பார்வை, அவனைக் கூர்மையுடன் ஆராய்ந்தது. தன் எஸ்டேட்டை சுற்றிக் காட்டினான் நந்தா. பரந்து விரிந்த தேயிலைத் தோட்டத்தின் நடுவே ஆங்காங்கே நடப்பட்டிருந்த ஊசியிலை மரங்களும், சரிவில் இறங்கி யிருந்த ஓக் மரங்களும், ப்ளம் தோட்டங்களும், ஏலக்காய்த் தோட்டங்களும் பிரமிப்பை ஏற்படுத்தியது. அவனுடைய எஸ்டேட்டைக் கண்டபோது, இவ்வளவு பெரிய எஸ்டேட்டின் உரிமையாளரா இவர் என்ற மதிப்பும் மரியாதையும் மாதவனுக்கு எற்பட்டது.

இதே அளவுக்கு சொத்தும், வசதிகளும் உள்ள நயனி இதை எல்லாம் ஒதுக்கிவிட்டு, சென்னைக்கு வந்து பந்தாவே இல்லாமல், இயல்பாகத் தன்னிடம் பழகியது பெருமையாக இருந்தது... மடத்தனமாகவும் பட்டது. நயனியிடம் பேச

வேண்டும் என்று நினைத்துக் கொண்டான் மாதவன். மனதில் பிரமிப்புடன் வீடு வந்து சேர்ந்தான் மாதவன்.

அவனுக்காக காத்திருந்த நயனியின் அருகில் வந்தவன், "நீ இந்த எஸ்டேட்டை விட்டுட்டு வந்தது தப்பு நயனி. நீ இங்கேயே இருக்கறதுதான் நல்லது. நந்தாவும் பாவம் இல்லையா? அதான் உன் முடிவை மாத்திக்கிட்டியா?" என்று கேட்டான்.

"யார் நந்தா சொன்னாரா அப்படி? நீ வேற மாதவன். நானே எப்படா சென்னைக்குக் கிளம்பலாம்னு, துடிச்சிக்கிட்டு இருக்கேன். நீ என்னடான்னா, நான் இங்கேயே இருக்கப் போறேன்னு சொல்றே! ப்ச்.." என்றாள் சலிப்புடன்.

"இல்லை நயனி! அவர் சொல்லலை. காலையில உங்க அப்பாதான் சொன்னார். நீ கவனிக்கலையா?" என்று கேட்டான் மாதவன்.

"சரி வா! டிபன் சாப்பிடலாம். உனக்காகத்தான் நான் வெயிட்பண்றேன்" என்றபடி அவனை சாப்பிட அழைத்துச் சென்றாள் நயனி. அன்று முழுவதும் இருவரும், தங்கள் றுவனத்தைப் பற்றியும் அதை விரிவுபடுத்துவதைப் பற்றியும் பசிக் கொண்டு இருந்தனர். மாலையில் இருவரும் தாட்டத்தில் நடந்து கொண்டிருந்த போது மாதவன் வளிடம் ஏதோ பேசவேண்டும் என்றான்.

"நயனி நான் உன்கிட்ட ஒரு விஷயம் பேசணும். என்னை நம்பறேன்னு ஒரு பொண்ணு சொல்றா. அதை ஏத்துக்கறதா, லை மறுக்கறதா அப்படின்னு குழம்பிப்போய் இருக்கேன். கிட்டப் பேசினா ஒரு முடிவு கிடைக்குமேன்னு னிச்சி" என்றான் யோசனையுடன்.



முகம் மலர்ந்து திரும்பிய நயனி, "யார் அந்த அதிர்ஷ்டசாலி மாதவன்? அதுவும் எனக்குத் தெரியாம என் நண்பனை விரும்பினவ?" என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

"எல்லாம் ரொம்ப உனக்கு வேண்டியவ... நல்லா தெரிஞ்சவதான்! யாருன்னு சொல்லு பார்ப்போம். அதுவும் நம்ம ஆபீஸ்லேயே ஒர்க் செய்யறா... இப்ப சொல்லு!" என்றான்.

உடனே ஷ்யாமாவின் நினைவு மனதிற்குள் வந்தாலும், அதை மறைத்து "யார் மாதவன்? நம்ம ஆபீஸ்ல கூட்டிப் பெருக்குவாளே... அந்தக் கன்னியம்மாவா?" குறும்புடன் கேட்டாள்.

"ஏய்...!" என்று எழுந்து அவன் துரத்தவும், அவனிடமிருந்து தப்புவதற்காக எழுந்து ஓடியவள், யார் மேலோ மோதி நின்றாள். நிற்க முடியாமல் தடுமாறியவளைப் பிடித்து, விழாமல் அணைத்துக் கொண்டான் நந்தா. அவன் தொடுகை, அவளுக்குள் ஆயிரம் செய்திகளை வாசித்தது. நயனியை விடுவிடுத்து, தன் தோள் வளைவில் அணைத்திருந்த நந்தா மாதவனிடம், "நீங்க எப்ப ஊருக்கு கிளம்பறீங்க மாதவன்?" என்றான் பார்வையில் கூர்மையுடன்.

ஒருகணம் தடுமாறிய மாதவன், "நாளைக்கு கிளம்பலாம்னு இருக்கேன் நந்தா சார்" என்று கூறிவிட்டு உள்ளே சென்றான் நந்தாவின் விரல்கள், தன் தோளில் ஆழப் பதிந்திருந்தை அகற்றவும் முடியாமல், விலகவும் முடியாமல் தவித்தா நயனி. மாதவன் உள்ளே சென்றதும், அவளை விடுவித்தா நந்தா.

அவளை "ஒரு நிமிஷம்" என்று நிறுத்திவிட்டு, ' என்னோட ஒய்ப்! எனக்கு, இந்த நிமிஷம் வரைக்கும், அது

எந்த மாற்றமும் இல்லை. அதுக்கு கொஞ்சம் மரியாதை கொடுக்குற மாதிரி கவுரமாக நடந்துக்க... இங்கே வேலைக்காரங்கள்லாம் இருக்காங்க. இது சென்னை இல்லை! உன் பாய்பிரண்டோட ஓடி ஆடறதுக்கு. இங்க நானும் உங்கப்பாவும் கூட இருக்கோம். அதையும் ஞாபகம் வச்சிக்க'' என்று தாழ்ந்த குரலில், சீற்றத்துடன் கூறிவிட்டு அழுத்தமான காலடிகளுடன் சென்றான் நந்தா.

அவன் பேசியதைக் கேட்டதும், அப்படியே ஓய்ந்து போய், சரிந்து அமர்ந்த நயனிக்கு தொண்டையே வறண்டு போனது. காயம் பட்ட பூஞ்சிறகாய் மனம்! ஏன் இவன் என்னைத் தவறாகவே புரிந்து கொள்கிறான் என்ற படபடப்பு வந்து, மாலினியை நினைவு படுத்தியது.

அவன் மட்டும் மாலினியை விரும்பிவிட்டு, சொத்துக்காக ...ன்னைக் கைப்பிடிக்கலாம். தான் எந்தத் தவறும் செய்யாமல் ...லுவை சுமக்க வேண்டுமா என்ற எண்ணம், மனதில் கோப ...நெருப்பாய் சுழன்று அடிப்பதாய்...! அடுத்த முறை அவனிடம் ...லினியைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று நினைத்துக் ...ண்டாள்.

அன்றிரவு உறக்கம் வராமல் அவன் நினைவுகள் ஆழமாய் ...தக்கப்பட்டு, அவளை இம்சை செய்ய... மனதிற்கு பிடித்த ...வின் வரிகள், சுமையாய் நெஞ்சில் படர்ந்தது. ''அன்பே... **...ா... உன் தனிமை சுகமா... உந்தன் கட்டில் சுகமா... ...ல் என் ஒற்றைத் தலையணை சுகமா.... உன் கன்னம் ...ா.... அதில் என் கடைசி முத்தம் சுகமா?''** என்று பிரிவின் நீங்காமல் நெஞ்சில் நிறைந்தது. அந்தக் கவிஞனின் ...த வரிகள், உருக்கியது. உடனே மனுவைப் பார்க்க ...டும் போல் இருந்தது.



அவன் தன்னைத் தவறாக எண்ணியதை, நயனியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தன்னுடைய பங்களாவில், தனிமையில் படுத்து இருந்த நந்தாவின் மனமும் தன் வசமின்றி அலைபாய்ந்தது. மாலையில் நடந்த நிகழ்வுகளில் மனம் உழன்று, மாதவனும் நயனியும் ஒருவரை ஒருவர் விரும்புகிறார்களோ என்ற நினைவே, திராவகத்தை மனதினுள் வீசுவதாய்... இருதலைக் கொள்ளி எறும்பாய் மனம் தவித்தது.

நயனிக்காகவே காத்திருந்த அவனுடைய உணர்வுகள், மனதை வதைப்பதாய்... அவளை இழந்து விடுவோமோ என்ற பயத்தை உள்ளுக்குள் விதைப்பதாய்.. நயனிக்கோ வேறு ஒரு பெண்ணை நந்தா முன்பு விரும்பியது தெரிந்தும் தன்னால் எப்படி அவனை நேசிக்க முடிகிறது என்ற யோசனை வேரோடியது. காதல், தன் அறிவையும் சேர்த்து எடுத்துக் கொண்டதோ என்று ஐயம் உண்டாயிற்று. தன் மேலேயே கோபம் வந்தது. உறக்கம் மெல்லத் தழுவியது நயனியை. மறுநாள் காலையில், மாதவனுடன் வாக்கிங் செல்லும்போது எதிரே காரில் வந்த நந்தாவை அவள் ஏறெடுத்தும் பார்க்கவில்லை.

புலர்ந்தும் புலராத அந்தப் பொழுதில், வெள்ளை நிற சுரிதாரில் ஒரு தேவதையாய் அவள் நின்றிருந்த கோலம் நந்தாவின் கவனத்தை ஈர்த்தது. மாதவன் மட்டும் சரிவில் இறங்கிச் சென்று நந்தாவிடம் பேசி விட்டு வந்தான். இருவரும் பேசிக் கொண்டே நடந்தனர்.

''நயனி! நேத்து நான் ரொம்ப பயந்துட்டேன். ஒரு பிரெண்ட்லியா உன்னைத் துரத்தவும், நந்தா சார் வரவும், சரியா இருந்துதா? அவர் ஏதும் தப்பா நினைச்சிடப் போறாரோன்னு கவலையா இருந்தது. நல்ல வேளை!'' நிம்மதிப் பெருமூச்சு விட்டான் மாதவன்.

''இப்ப மட்டும், அவர் உன்னைத் தப்பா நினைக்கலைன்னு எப்படித் தெரிஞ்சது? நீ அவர்கிட்ட கேட்டியா?''

''சேச்சே! எப்படிக் கேட்க முடியும்? இப்ப என் கூட, ரொம்ப ப்ரெண்ட்லியா பேசினாரே, அதில இருந்தே தெரிஞ்சுக் கிட்டேன். அவருக்கு என் மேலே கோபம் இல்லைன்னு!''

''அதவிடு மாதவன்! உன் விஷயம் பேசலாம். நீ சொன்னது ஷ்யாமாவைப் பத்திதானே?'' என்றாள் ஆர்வத்துடன்.

''ஆமாம்! ஷ்யாமாவேதான், எப்படிக் கண்டுபிடிச்சே? போன வாரம்தான் அவ என்னை விரும்பறான்னு தெரிஞ்சது. ரொம்பக் குழப்பமா இருந்தது. உன்கிட்டயும் கலந்து பேசி முடிவு எடுக்கலாம்னுதான் கிளம்பி வந்தேன். இங்க வந்ததுக்கப்புறம் தான் தெரிஞ்சது ஒரு உண்மை. அதுவும் நீயும் நந்தா சாரும் ஒருத்தரை ஒருத்தர் ரொம்ப விரும்பறீங்கன்னு பெரிய உண்மை!'' என்றான் குறும்பாக.

''அப்படின்னு யார் சொன்னது உனக்கு?'' என்றாள் நயனி.

மாதவன் ''ம்... யார் சொல்லணும்.. வாய் வார்த்தையா சொன்னாதானா? அவர் உன்னைப் பார்க்கிற பார்வையைப் பார்த்தாலே தெரியுதே! அவர் உன்னை விரும்புறார்னு'' ன்றபோது மனம் தடுமாற சரிவில் ஏறிக் கொண்டிருந்த யனியின் கால்களும் தடுமாறியது. அப்படியே சரிந்து. றுபுறம் உருண்டு விழ ஆரம்பித்தாள். விழுந்த வேகத்தில் னைவுகள் மங்கி, இருட்டு எனும் போர்வைக்குள் டங்கினாள் நயனி.

மாதவன் பதறிப் போய் ஓடி, அங்கு வேலை செய்பவர் ள உதவிக்கு அழைத்தான். தூரத்தில் நந்தாவின் கார் ளவில் திரும்பி வருவது தெரிந்தது. கை ஆட்டியபடியே



ஓடிய மாதவன், காரை நிறுத்தி விவரம் கூறவும், பதட்டமாகி விரைந்து வந்த நந்தா வேகமாக செயல்பட்டான்.

நந்தா, எதைப் பற்றியும் கவலைப்படாமல், சரிவில் சரித்துக் கொண்டு இறங்கி அவளை அடைந்தான். ஒரு பூக்குவியலாய் மயங்கி விழுந்திருந்த நயனியைக் கண்டபோது அவன் மனம் பதறித் துடித்தது. அவள் மயங்கி இருப்பதும் புரிந்தது. அப்படியே அவளைத் தூக்கிக் கொண்டு இறங்கி, வேறு பாதைக்கு அவளைக் கொண்டு சென்றான்.

## 7

மாதவன் வேகமாக ஓடிச் சென்று நந்தாவின் காரை அவர்கள் நின்ற இடத்துக்கு எடுத்து வந்தான். தொழிலாளர்கள் அனைவரும் கூடி விட்டிருந்தனர். பின் சீட்டில் அவளைத் தாங்கி அமர்ந்திருந்த நந்தாவின் இதயம் கலங்கியது. மாதவனுக்கு வழி சொல்லிக் கொண்டே வந்தவன், மருத்துவமனை வந்தவுடன் நயனியைக் கைகளில் ஏந்திக் கொண்டு அவசரமாக உள்ளே சென்றான்.

டாக்டர் அவனுடைய நண்பர் என்பதால், உடனே நயனியை வந்து கவனிக்க ஆரம்பித்தார். நயனிக்கு வெளியே காயங்கள் எதுவும் பெரிதாகத் தெரியவில்லை. நந்தாவும் மாதவனும் தவிப்புடன் காத்திருந்தனர். முதலுதவி அளித்துவிட்டு வெளியே வந்த டாக்டர் ப்ரவீனிடம் வேகமாகச் சென்ற நந்தா, ''அவளுக்கு இப்ப எப்படி இருக்கு ப்ரவீன்?'' என்றான் பதட்டமாக. மாதவனும் அருகி இருந்தான்.

''நந்தா! நத்திங் டு வொரி.. பட் கை மட்டும் லேசா சுளுக் இருக்கு. பேண்டேஜ் போட்டிருக்கேன். கால்ல சின்ன ஸ்கிரா

அதுக்கும் மருந்து போட்டிருக்கோம். நீ வீட்டுக்கு அழைச்சிட்டுப் போகலாம். விழுந்த அதிர்ச்சியில வந்த மயக்கம்தான். அந்த பேண்ட்டேஜைக் கூட ஒரு வாரத்துல ரிமூவ் பண்ணிடலாம். டோண்ட் வொர்ரி..'' என்றான் நந்தாவின் தோளைத் தட்டி!

''நான் போய்ப் பார்க்கலாமா?'' என்ற நந்தாவிடம், ''போய்ப் பாரு. இப்பத்தான் கண் முழிச்சாங்க. ஹார்லிக்ஸ் கொடுக்கச் சொல்லி இருக்கேன். ஓகே! டேக் கேர்!'' என்றான் புன்னகையுடன்.

''தேங்க்யூ ப்ரவீன், ஒரு நிமிஷம் உலகமே இருண்டுபோன மாதிரி இருந்தது. தேங்க் காட்!'' பாரம் இறங்கியது போல் அவன் கூறினான்.

அவன் காதருகில் குனிந்த ப்ரவீன், ''பாவம்டா நீ! ஒய்ப்பை பிரிஞ்சி சேர்ந்த உடனே இப்படி ஆயிடுச்சி... இன்னும் ஒரு வாரம், அவளை நீ டச் பண்ண முடியாது'' என்றான் குறும்பாக.

கண்ணோரம் சின்ன சுருக்கத்துடன் நிமிர்ந்த நந்தா, ''ஏய் நீ டாக்டராச்சேன்னு பார்க்கிறேன். அதுவும் உன்னோட ஹாஸ்பிடல் வேற!'' என்றபடி செல்லமாக எச்சரித்து விட்டுத் திரும்பி நயனி இருந்த அறைக்குச் சென்றான்.

கட்டிலில் சோர்ந்து படுத்திருந்த நயனியைப் பார்த்தபோது நந்தாவுக்கு ஏனோ இதயத்தில் பிசைவது போல் இருந்தது. ஆனால் எதையும் வெளிக்காட்டிக் கொள்ளாமல், அவள் அருகே சென்று நின்றான். ''இப்ப எப்படி இருக்கு? கைவலி பரவாயில்லையா?'' என்றான் மென்மையாக.

வலி, வேதனை எல்லாம் சேர்ந்து நயனியைப் புரட்டிப் போட்டது. ''போதும், நடிக்காதீர்கள். அப்பா கூட இங்க



இல்லை. மாதவனை வரச் சொல்லுங்க. அவன் என்னைப் பாத்துப்பான்'' என்று கூறி விட்டு திரும்பி கண்களை மூடிக் கொண்டாள். எங்கிருந்துதான் அவ்வளவு கோபம் வந்ததோ நயனிக்கு.

முகம் உடனே சுருங்கி இறுகியது நந்தாவுக்கு. ஒரு கணம் கண்களை இறுக மூடித் திறந்தவன், ''டேக் கேர்'' என்று கூறி விட்டு வெளியே வந்தான். அங்கிருந்த மாதவனைப் பார்த்து, ''உங்களைக் கூப்பிடறா. கொஞ்சம் பார்த்துக்கங்க. நான் ஆபீஸ் போயிட்டு காரை அனுப்பறேன்'' என்று கூறிவிட்டு வேகமாக வெளியே சென்று விட்டான்.

மாதவன் உள்ளே சென்று, அவள் எதிரே அமரவும், கண் விழித்தாள் நயனி. ''மாதவன் நீ எங்க போனே? அவர் வந்து ஏன் என்னைப் பார்க்கணும், பிடிக்காத பொண்டாட்டின் னாலும் பார்மாலிட்டிக்கு ஒண்ணும் குறைச்சல் இல்லை'' என்றாள் கோபத்துடன்.

மாதவனும், ''நயனி! என்ன பேசறே நீ, திஸ் இஸ் டூ ம நந்தாதான் சரிவுல இறங்கி உன்னைக் காப்பாத்தி இங்கே அழைச்சிட்டு வந்து அட்மிட் பண்ணினது. இத்தனை நேர பதறிப் போய் நின்னவரைப் போய்... சாரி நயனி நா உன்கிட்டே இதை எதிர்பார்க்கலை..'' என்றான் குற்ற சாட்டும் குரலில்.

''மாதவன் கை ரொம்ப வலிக்குது. டயர்டா இருக் எனக்கு என்ன பண்றதுன்னே தெரியலை'' என்றாள் சோர்வ

''நீ ரெஸ்ட் எடு. நான் போய் உங்க அப்பாவுக்குப் பே பண்ணி, விஷயத்தைச் சொல்லிட்டு வரேன்'' எ எழுந்தபோது அவனுடைய செல் ஒலித்தது. மருதாசலம்

படபடத்துடன் பேசினார். நயனியைப் பற்றி இப்போதுதான் நந்தா கூறியதாகக் கூறிவிட்டு, பத்திரமாக அவளை அழைத்து வரும்படியும் சொன்னார்.

சிறிது நேரத்தில், நந்தாவின் காருடன் டிரைவர் ராமு வந்து விட்டான். "நந்தா சாருக்கு திடீர்னு ஏதோ வேலையாம். என்னை அனுப்பினாங்க. அம்மாவை வீட்டிலே கொண்டு போய் விடச் சொன்னாங்க" என்றான்.

மாதவனுக்கு அவர்கள் இருவருக்கும் நடுவே நடந்திருப்பது புரிந்தது. டாக்டரிடம் சென்று பேசிவிட்டு, டிரைவருடன் அவளை வீட்டுக்கு அழைத்துச் சென்றான் மாதவன்.

வீட்டுக்குக் கிளம்பலாம் என்று மாதவன் கூறிய உடனே, நயனியின் விழிகள் ஆவலுடன் ஒரு கணம் வாசலை நோக்கியது. மனுவைத் தேடிய விழிகள் அலைந்து தவித்தது. டிரைவரைக் கண்டதும், முகம் சுருங்கி அமைதியானாள் அவள். எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த ாதவனின் பார்வையில், யோசனை வந்தது.

வாசலிலேயே காத்திருந்தார் மருதாசலம். அவளைக் ண்டதும் கண்ணீர் மல்க அன்புடன் அணைத்தபடி உள்ளே ழைத்துச் சென்று ஓய்வெடுக்கச் செய்தார். முகம் சிவந்து, ர்த்து, வலியால் களைத்துப் போய் இருந்தாள் நயனி. தாசலம் அவள் உறங்கும் வரை அவள் அருகிலேயே ந்தார்.

வரிடம் வெளியில் சென்று வருவதாகக் கூறிவிட்டு வந்த வன், நேரே டிரைவருடன் நந்தாவின் அலுவலகத்துக்குச் ான். அவனுடைய அறைக்கே சென்ற மாதவன்,



நேரிடையாகவே, "உங்களோட கொஞ்சம் பேசணும் சார்.. பேசலாமா?" என்றான்.

நந்தாவும், "ம்.. உக்காருங்க.. என்ன பேசணும்?" என்றான் கேள்வியாக.

"கொஞ்சம் பர்சனல்தான். தப்பா எடுத்துக்கக் கூடாது. நயனியும், நீங்களும் இன்னும் ஒருத்தரை ஒருத்தர் ஆழமாக விரும்பறீங்கன்னு எனக்குப் புரியுது. ஆனா ஏனோ ரெண்டு பேருமே, அதை ஒத்துக்கறதுக்கு மறுக்கிறீங்க. எனக்கு அஞ்சு வருஷமா நயனியை நல்லாத் தெரியும். அவ எந்த ஆணையும் இதுவரைக்கும் மனசளவுல கூட தன்னை நெருங்க விட்டதில்லை. உங்களைப் பார்த்தாலும், அப்படித்தான் தோணுது" என்றபோது ஒரு சீறலான வேக மூச்சுடன் எழுந்த நந்தா ஜன்னலின் அருகே சென்று நின்று வெளியே பார்க்கத் தொடங்கினான்.

மாதவன் தொடர்ந்தான். "நயனி இன்னும் உங்களையே தான் நினைச்சுக்கிட்டு இருக்கான்னு நான் நினைக்கிறேன். எந்த ஆணையுமே, அவ விரும்பினதில்லை. உங்க ரெண்டு பேருக்கும் நடுவுல என்ன ப்ராப்ளம்னு எனக்குத் தெரியாது. ஆனா நீங்க ரெண்டு பேரும் மனசு விட்டுப் பேசி புரிஞ்சிக்கிட்டீங்கன்னா நான் ரொம்பச் சந்தோஷப்படுவேன்" என்று கூறிவிட்டு நிமிர்ந்து நந்தாவையே அளவிட்டான்.

நந்தாவின் முகத்தில் எந்தவித உணர்ச்சியும் இன்றி, உதடுகளில் ஒரு கசந்த முறுவல் தெரிந்தது. ஒரு பெருமூச்சுடன் எழுந்த மாதவன், அவனருகில் சென்று, "நான் இன்னைக்கு கிளம்பறேன் நந்தா சார். அடுத்த தடவை நான் இங்க வரும்போது, உங்க ரெண்டு பேரையும் ஒண்ணா சேத்துப் பார்க்கணும். இது ஒரு நண்பனோட கோரிக்கைன்னே வச்சிக்குங்களேன்" என்றான் புன்னகையுடன்.

வேகமாகத் திரும்பிய நந்தா, அவன் கைகளை இறுகப் பற்றி "தேங்க்யூ மாதவன்!" என்றான் உணர்ச்சிகள் நிரம்பிய குரலில். அவனுடைய கையைப் பற்றி ஆதரவாக அழுத்திய மாதவன், "அங்கே உங்க ஒய்ப் உங்களைப் பார்வையாலேயே தேடிக்கிட்டு இருக்காங்க... பாக்க வரலையா நந்தா சார்.." என்றான் குறும்பு கொப்பளிக்கும் குரலில்.

"ம்... ஈவ்னிங் வரேன். நீங்க எப்ப கிளம்பறீங்க? அப்புறம்... என்னை நந்தான்னே கூப்பிடலாம்" என்றான் சிறு புன்னகையுடன்.

"நான் ஈவ்னிங் நாலு மணிக்குக் கிளம்பலாம்னு இருக்கேன். டிரைவரை மதியானம் வரச் சொல்லி இருக்கேன். வந்துடுவார்" என்றான் மாதவன். நந்தாவும் "நான் நீங்க கிளம்பறதுக்குள்ளே வரேன். சீ யூ மாதவன்" என்று விடை கொடுத்து அனுப்பினான். மாதவனுக்கு அவர்கள் இருவரும் சீக்கிரம் இணைய வேண்டும் என்ற ஆவல் மனதில் எழுந்தது.

வீட்டிற்கு வந்தபோது வெளிறிப் போய் ஓய்ந்து தெரிந்தாள் நயனி. அவனைக் கண்டதும், "எங்கே போயிட்டே, மாதவன்? ஆளையே காணோம்!" என்றாள்.

"நான் போனது இருக்கட்டும். நீ ஏன் இப்ப டல்லா இருக்கே? நந்தா உன்னைப் பார்க்க ஈவ்னிங் வருவார். ரெஷ்ஷா இரு. அப்புறம் பர்சனலா நான் உன்கிட்டேயும் பேசணும். நான் சொன்னா கேப்பியா? நீங்க ரெண்டு பேருமே, ருத்தர் மேல ஒருத்தர் உயிரையே வச்சிக்கிட்டு, ஏன் இப்படி வறுக்கற மாதிரி நடிக்கறீங்க? ரெண்டு பேரும் முதல்ல ங்காந்து மனசை விட்டுப் பேசி, எல்லாம் சரி பண்ணுங்க. ங்கே நான் எல்லாத்தையும் பாத்துக்கறேன். பாவம் நந்தா ; புரிஞ்சிக்க நயனி" என்றான் மாதவன்.



"எதைப் புரிஞ்சுக்கச் சொல்றே? அவர் என்னை விரும்பலைங்கறதையா?" என்றாள் நயனி கோபத்துடன்.

"நயனி.. ஏன் இப்படிப் பேசறே? நல்ல வாழ்க்கைங்கறது, ஒரு தடவைதான் அமையும். அதை நாம ஏத்துக்கற விதத்துல தான் இருக்கு.. அது சந்தோஷமா இருக்கறதும், இல்லாததும், எல்லாமே நம்ம மனசுல இருக்கு. உங்க ரெண்டு பேருக்கும் நடுவுல இருக்கறது ஈகோவா என்னன்னு எனக்குப் புரியலை. ஆனா, எனக்கு சொல்லணும்னு தோணிச்சு சொல்லிட்டேன். அப்புறம் உன் இஷ்டம்" என்று கூறிவிட்டு வெளியே சென்று விட்டான் மாதவன்.

## 8

நயனியின் மனதில் யோசனை தீர்க்க மாய்.. மாதவனின் வார்த்தைகளையே, மனம் திரும்பத் திரும்ப அசை போடுவதாய்! அவர்கள் இருவருக்குமிடையில் இடைவெளி ஏற்படுத்திக் கொண்டு இருக்கும் பிரச்சினை, தூர நின்று பார்க்கும் போது வெடிகுண்டாய்... நெருங்கிப் பார்க்கும்போது வெறும் காற்று அடைத்த பந்தாய்! சாளமான பேச்சே, அதை உடைக்கும் குண்டூசியாகவும் தோன்றியது.

அன்று அவனுடன் வாழ்ந்த ஒரு வாரமும், தன் வாழ்வில் மனப்பகிர்தலின்றியே சென்றதும், இன்றும் இருவருக்கிடையில் தடையாய், தயக்கம் எனும் பனித்திரை தடுப்பதையும் எண்ணி, மனம் கசிந்து போனது நயனிக்கு. சோர்ந்து போய் உறங்கி விட்டாள் அவள்.

நந்தா வேலைகளை முடித்துக் கொண்டு வரும்போது, மூன்று மணியாகி விட்டது. நயனியின் வீட்டுக்கு வந்தவன்,

நேரே மருதாசலத்தின் அறைக்குச் சென்றான். அவர் உறங்கிக் கொண்டு இருந்ததால், மாதவனிடம் வந்தவன், ''என்ன மாதவன்? ரெடியாகிட்டீங்க போல இருக்கு. அப்புறம் திரும்பி எப்ப வருவீங்க?'' என்றான் நந்தா.

''என் கல்யாணம் முடிஞ்சி, ஹனிமூனுக்கு இங்கதான் வரலாம்னு இருக்கேன். அதுக்கும் முன்னாடி நீங்க ரெண்டு பேரும் ஏதாவது குட் நியூஸ் சொன்னா உடனே ஓடி வந்துடுவேன்'' குறும்புடன் கூறினான்.

நந்தாவின் முகம், ஒரு நொடி இறுகி, பின் இயல்பானது. ''என்கிட்ட நீங்க சொல்லவே இல்லை. எப்ப கல்யாணம்? பெண் பார்த்து முடிவாயிடுச்சா..'' என்றான்.

''என்னுது லவ் - கம் - அரேஞ்சுடு மேரேஜ்! ஷ்யாமா என்னை விரும்பறா, அவ நயனியோட அசிஸ்டெண்ட். அவதான் இப்ப நயனிக்குப் பதிலா நம்ம கம்பெனியில எல்லாம் பாத்துக்கறா. இப்பத்தான், நானும் ஒரு முடிவுக்கு வந்தேன். கூடிய சீக்கிரம், நீங்க எங்க மேரேஜிக்கு வர்ற மாதிரி இருக்கும்!'' என்றான்.

''கங்கிராட்ஸ் மாதவன்! நீங்க ரொம்ப லக்கி... நம்மை விரும்பற பெண் கிடைக்கறது, பெரிய அதிர்ஷ்டம் இல்லையா?''

''ம்... தேங்க்யூ! ஆனா உங்களை விரும்பற பெண்ணை, ங்க போய்ப் பாத்தீங்களா? நயனியைத்தான் சொல்றேன்'' ன்றான் மாதவன்.

''இல்லை. அப்புறம் பாக்கறேன். நீங்க ஊருக்குக் ளம்பறீங்க. உங்ககிட்டே முதல்லே பேசிட்டு இருக்கலாம்னு ந்தேன்.''



மாதவன் யோசனையுடன் தயக்கமாக, ''நந்தா, நான் சொன்னதை, ப்ளீஸ் நீங்களாவது கன்சிடர் பண்ணுங்க'' என்றான்.

ஒரு பெருமூச்சுடன், ''ஓகே! நான் போய்ப் பார்த்துட்டு வரேன்'' என்று எழுந்த நந்தாவைப் பார்த்து, ''என்ன நந்தா! என்னவோ, புலியை பார்க்கப் போற மாதிரி, பெரிய யோசனையோட கிளம்பறீங்க? அங்கே இருக்கிறது உங்களோட பெட்டர் ஹாப்... ஞாபகம் இருக்கட்டும்'' என்றான் மாதவன்.

ஒரு வார்த்தை மாறினாலும் அர்த்தம், பிட்டர் ஹாப் என்று மாறி விடும் என்று தோன்ற, ஒரு கசந்த முறுவலுடன் நயனியைப் பார்க்கச் சென்றான். அவளுடைய அறைக் கதவைத் தட்டி விட்டு நுழைந்தபோது, மருதாசலம், மகளிடம் பேசிக் கொண்டிருந்தார். அவனைக் கண்டதும் மலர்ந்தார்.

''நீ பேசிட்டிருப்பா நந்தா! நான் அப்புறம் வரேன்'' என்றபடி எழுந்தார்.

நந்தா, அவருடைய தோளில் கை வைத்து, அவரை அமர வைத்தான். பிறகு அவரின் அருகிலேயே அமர்ந்து கொண்டவன், நயனியை நோக்கி, ''இப்ப கைவலி பரவாயில்லையா? எப்படி இருக்கு?'' என்றான்.

''ம்.. பரவாயில்லை'' என்ற நயனியின் மனம்தான், அந்தக் கேள்வியின் விலகல் தன்மையறிந்து வலித்தது. வேறு என்ன பேசுவதென்றே புரியவில்லை.

நந்தா, மருதாசலத்திடம் திரும்பி எஸ்டேட் விஷயமாக, தாழ்ந்த குரலில் எதுவோ பேசுவதையே அளவிட்டன, நயனியின் விழிகள்! எடுப்பான கூரிய மூக்கும், அதன் கீழ்

பெரிதாய் அடர்ந்திருந்த மீசையும், ஊடுருவும் கண்களும், சற்றே பிளவுபட்ட முகவாயும், செதுக்கினாற் போன்ற முக அமைப்பும், அவள் இதயத்தைத் தடம் புரளச் செய்தது. தன் பார்வையை, வேறுபுறம் திருப்பிக் கொண்டாள் நயனி.

மருதாசலத்துடன் பேசி முடித்துவிட்டு நிமிர்ந்த நந்தாவும், அவளுடைய பார்வை விட்டத்தில் பதிந்து இருப்பதை உணர்ந்து உடனே எழுந்தான்.

''நான் கிளம்பறேன் அங்கிள்! வரேன்'' என்று கூறிவிட்டு, அவள் புறம் திரும்பாமலே வெளியே வந்தான் நந்தா. அன்று, இருவரிடையேயும் படர்ந்திருந்த மெல்லிய பனித்திரை, இறுகி இரும்புத் திரை ஆனது.

**மா**தவனை வழியனுப்பி விட்டுக் கிளம்பி விட்டான் நந்தா. மாதவன் சென்ற பிறகும், தினமும் நயனியின் வீட்டிற்கு சென்றாலும், நந்தா அவளைத் தொந்தரவு செய்வதில்லை. மருதாசலத்திடம் மட்டும் பேசி விட்டு வந்து விடுவான். அவன் மனம் கசந்து போயிருந்தது. இருவருமே, மற்ற வருடைய உணர்வுகளைப் புரிந்து கொள்ளவில்லை.

அந்த வாரம் முழுவதும், அப்படியே சென்றது. அன்று நயனிக்கு கையில் போட்டிருந்த பேண்டேஜைப் பிரித்து அழைத்து வர, நந்தா அவளை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றான்.

பரிசோதனை முடிந்து, கட்டு பிரித்து அவர்கள் இருவரும் வெளியே வரும்போது, இடையிட்டது ப்ரவீனின் குரல். ந்தா! இன்னிக்கு வெளிச்சமாயிடுச்சா உன்னோட உலகம்? னம்மா மந்திரம் போட்டே? சுலபத்துல அசர மாட்டான். ன்னிக்கு நீ விழுந்தவுடனே தன் உலகமே இருண்டு போன



மாதிரி இருக்குன்னு சொல்றான்'' என்றான் கிண்டலான குரலில்.

ஒரு பொறுமை இழந்த மூச்சுடன், ''நாங்க வரோம் ப்ரவீன்'' என்று கூறிவிட்டு அவளிடம் திரும்பி ''போகலாமா?'' என்றான், குரலில் எந்த உணர்ச்சியுமின்றி!

பதிலாக ஒன்றும் கூறாமல், வேகமாகச் சென்று காரில் ஏறி அமர்ந்து கொண்டாள் நயனி. நந்தா வந்து அமர்ந்து காரை எடுத்தபோது, கோபம் மனதில் ஊற்றாய்ப் பெருகியது நயனிக்கு.

''ஏன் டாக்டர்கிட்ட கூட பொய் சொல்றீங்க? என் மேல அக்கறை இருக்கற மாதிரி, அப்பா முன்னாடி மட்டும் நடிச்சா போதும், ஏன்னா, அவர் ஒரு பேஷண்ட்! மத்தவங்க எதிரே எல்லாம், நார்மலா என்னைப் பிடிக்காத ஹஸ்பெண்டாவே இருக்கலாம்'' என்றாள் சினத்துடன்.

கார், 'கிறீச்' சென்ற சப்தத்துடன், குலுங்கி நின்றது. சீற்றத்துடன் திரும்பிய அவன் கண்கள், தீக்கங்குகளாய்த் தோன்றின.

''ஏய்..! நீ என்ன நினைச்சிட்டு இருக்கே உன் மனசுல! எது வேண்டுமானாலும் பேசுவியா? என்னைக் கண்ட்ரோல் பண்றதுக்கு உனக்கு ரைட்ஸ் இல்லை. நான் எப்படி வேணா நடந்துப்பேன். அதப்பத்தி நீ ஒண்ணும் பேச வேணாம்... புரியுதா?'' என்றான் ரௌத்ரமாக.

''நான் பேசுவேன்! ஏன்னா, நான் உங்க ஒய்ஃப்... எனக்கும் உரிமை இருக்கு.''

''மனைவின்னா, அதுக்குத் தகுந்த மாதிரி நடந்துக்கறவ தான் ஒய்ஃப்! உனக்கு என்ன உரிமை இருக்கு... சொல்லு?'' கண்களில் கடும் சீற்றத்துடன் சீறினான் அவன்.

''ம்... என்ன உரிமையா? இன்னும் நீங்க எனக்கு டைவர்ஸ் கொடுக்கலைங்கற உரிமை.. போதுமா..''

''அப்ப அந்த உரிமை எனக்கும் உண்டு இல்லையா? அதை நான் எடுத்துக்கலாமா?'' என்று கேட்ட நந்தா, அவளைத் தன்னருகில் வேகமாக இழுத்து, காற்றுப் புகவும் இடமின்றி இறுக அணைத்து, அவளுடைய இதழ்களைத் தன் வசம் சிறை செய்தான். நயனியின் தேகமெங்கும் மின்சாரம் விரவிப் பரவியது. அவளின் நரம்புகள் பயத்தாளமிட்டன. உணர்வுகள், சுழற் காற்றாய் சுழன்று, அஹிம்சையாய் இம்சை செய்தது.

அவளை இழுத்தணைத்த அதே வேகத்தில், அவளை விடுவித்தவனின் முகம் கோபத்தில் கருங்க, காரை ஸ்டார்ட் செய்தான் அவன். அந்தக் கணமே, தன்னை நிதானப்படுத்திக் கொண்ட நயனி, காரை விட்டுப் பதட்டத்துடன் இறங்க முயன்றாள்.

கண்களில் சீற்றத்துடன் திரும்பிய நந்தா, ''திரும்பவும்
ழுந்து, அடிபடணும்னு ஆசையா இருக்கா? இந்தத் தப்பு
னிமேல் நடக்காது. என் விரல் நுனி கூட, இனிமே உன் மேல
து... போதுமா?'' என்று கூறிவிட்டு நேர்ப் பார்வையுடன்
ர வேகமாக ஓட்டினான்.

ிருக்கையின் பின்னால், ஓய்ந்து போய் சரிந்த அவள்
களிலிருந்து, கண்ணீர் சரம் கோர்த்து இறங்கி ஒற்றைத்
ாய் அவள் மார்பினில் வீழ்ந்தது. அவசரமாக
ப்புறம் திரும்பி, தன் கண்களைத் துடைத்துக்
டாள் நயனி.

ள் கண்ணீரை, ஓரக் கண்ணால் கண்டவுடன்,
க்குத் தன் மீதே ஏனோ வெறுப்பு வந்தது. வீட்டு



வாசலில் அவளை இறக்கி விட்டுவிட்டு, காரை வேகமாக செலுத்திக் கொண்டு சென்று விட்டான்.

வீட்டின் உள்ளே வந்த நயனியைப் பார்த்த காயத்ரி கரிசனத்துடன், ''என்னம்மா! முகம் ஒரு மாதிரியா இருக்கு. கை ரொம்ப வலிக்குதா? குடிக்க ஏதாவது எடுத்துட்டு வரேன். நீங்க முதல்ல உள்ள போய்ப் படுங்க!'' என்றபடி உள்ளே சென்றார். ஆனால் நயனியின் இதயம்தான் விண்டு விடும்போல் வலித்தது.

நயனி, விரல்களால் மெதுவாய் தன் உதடுகளைத் தடவிப் பார்த்தபோது, இமைகள் அமர்ந்த கவடு கண்களில் தெரியாதது போல், அவனுடைய முரட்டு உதடுகள் பதிந்த கவடு இதழ்களில் தெரியவில்லை. இதயத்தில் தெரிந்தது! அரும்பாக இருந்த மனம், இன்று அவன் ஸ்பரிசத்தால் மலர்ந்தது. மனம் கசிந்து உருகும் ரசவாதம், கை வந்தது.

காயத்ரி கொண்டு வந்த பாலைப் பருகி விட்டு, தன்னை யாரும் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று கூறிவிட்டு அப்படியே சோர்ந்து போய் சுருண்டு படுத்துக் கொண்டாள் நயனி. காதல் கொண்ட நெஞ்சம் களவு போனது.

எஸ்டேட் அலுவலகத்திற்குள் நுழைந்த நந்தாவுக்கு, ஏனோ வேலைகளில் மனம் ஈடுபடவில்லை. ஐந்து வருடங்களுக்கு முன்பு, தன்னைத் தீண்டிப் போன தென்றலின் தொடுகையே, இன்னும் அவனுக்குள்ளே ஆழமாய் வேரூன்றி... அதன் தேய்மானமே இத்தனை வருடங்களாய், அதிகமாய் மனதைப் பாதிப்பதாய் இருந்தது.

இன்று அவளைத் தீண்டியபின், அவன் உணர்வுகள் விசுவரூபமெடுத்து, அவனை வதைத்தது. அவளால் மட்டும்

எழுப்ப முடிந்த உணர்வுகள், மனதில் பேயாட்டம் போட்டது. அலைபாய்ந்த மனதை அடக்க வேண்டி இருந்தது. தன் மனதினுள் ஆயிரம் சலனங்களை ஏற்படுத்தி விட்டு தன்னை விட்டு அவள் விலகிப் போனதும், பெண் எனும் மாயை தன்னை பேதலிக்கச் செய்வதும் புரிந்து, உள்ளம் உறைந்து இறுகியது. அவளிடம் சென்று பேச, சுயகவுரவம் தடை விதித்தது.

**மா**லையில், ஊரிலிருந்து மாமாவும், மாமியும், குலதெய்வம் கோவில் பூஜைக்காக அழைக்க வந்திருந்தனர். அவனைக் கண்டதும் முன்னால் வந்த மாமா அவனிடம், 'எப்படிப்பா நந்தா இருக்கே? நல்லா இருக்கியா? உன் பொண்டாட்டி கூட இங்கேயே வந்திட்டதா கேள்விப் ட்டோம். ரொம்ப சந்தோஷம் நந்தா. இந்த வருஷமாவது, ஜைக்கு நீங்க ரெண்டு பேரும் கட்டாயம் வரணும். துக்காகத்தான் நாங்க ரெண்டு பேருமே நேர்ல வந்தோம்'' ன்றார்.

''உக்காருங்க மாமா! உங்களுக்கு உடம்பு எப்படி இருக்கு? னி வந்திருக்கா. அவங்க வீட்டில இருக்கா. மாமாவுக்கு ர்ட் அட்டாக் வந்து, இப்ப பரவாயில்லை. அவளுக்கு ஒரு ன ஆக்சிடண்ட். கை ஸ்ப்ரெயின் ஆயிடுச்சு. இன்னிக்கு கட்டு பிரிச்சாங்க. அதனால அங்கே இருக்கா. நான் இந்த ரும் பூஜைக்கு வர முடியுமான்னு தெரியலை. வேலை ரு மாமா'' என்றவன் திரும்பி மாமியை விசாரித்தான்.

மியும், ''கல்யாணம் முடிஞ்சி குல தெய்வம் லுக்கு, நீங்க ரெண்டு பேரும் வரவே இல்லை. ன் சேர்ந்து இருக்கீங்களே? கட்டாயம் ரெண்டு பேரும் பா'' என்றார்.



''பார்க்கறேன் மாமி... ட்ரை பண்றேன். திருவிழா எப்ப வருது?''

''இன்னும் பதினைஞ்சு நாள்ல வருதுப்பா. நாங்க உங்களை அவசியம் எதிர்பார்ப்போம். நீங்க வரணும்'' என்றார் மாமி. அவர்களை ஓய்வெடுக்கச் சொன்னதற்கு, இருவரும் உடனே கிளம்ப வேண்டும் என்றனர். டிபன் எடுத்து வரச் சொல்லிவிட்டு, நயனியின் வீட்டுக்குக் கிளம்பினான் நந்தா.

மாமாவும், மாமியும் அவளைப் பார்க்க வருவதாகக் கூறி உடன் வந்தனர். நயனி, அவர்களுடைய அழைப்பை எப்படி ஏற்றுக் கொள்வாளோ என்ற எண்ணம் நந்தாவினுள் படர்ந்தது.

மாமாவின் வீடு, அவர்களுடைய சொந்த ஊரில் இருந்தது. அங்கு தான் அவர்களுடைய குல தெய்வம் குடி கொண்டிருந்த கோவில் இருந்தது. அப்பா, அம்மாவுடன், கல்யாணப் பத்திரிகை வைக்கச் சென்றது, பிறகு போனதில்லை.

## 9

**ந**யனி, தன் அறையில் படுத்து, ஓய்வெடுத்துக் கொண்டிருந்தாள். காயத்ரி வந்து, நந்தாவின் உறவினர்கள் வந்திருப்பதாகக் கூறிவிட்டுச் சென்றார். யாராக இருக்கும் என்ற யோசனையுடன், முகம் கழுவி தயாராகி ஹாலுக்குச் சென்றபோது, மாலினியின் அப்பாவும், அம்மாவும் அங்கு அமர்ந்திருந்தனர். மாலினியின் நினைவில், மனதினுள் கோபம் வந்தாலும் மறைத்து, அவர்களை புன்சிரிப்புடன் வரவேற்றாள்.

இருவரும் அவளுடைய உடல் நிலையைப் பற்றி விசாரித்தனர். ''நந்தா சொன்னான்மா, நீ உடம்பு சரியில்லாம

இருக்கேன்னு. நல்லா இருக்கியா? அப்பா எப்படி இருக்காங்க'' எனும் போதே, நந்தாவுடன் மருதாசலமும் வந்து விட்டார். நந்தா உடனே சொல்லிக் கொண்டு கிளம்பி விட்டான்.

''வாங்க! சுகமா இருக்கீங்களா? பாத்து ரொம்ப நாளாச்சு'' என்றபடி வந்து அமர்ந்தார்.

''நாங்கதான் உங்களை விசாரிக்கணும் சம்மந்தி. இப்ப உடம்புக்கு பரவாயில்லையா? நல்லா ரெஸ்ட் எடுத்துக்கங்க.. குலதெய்வம் கோவில் பூஜை. பதினைஞ்சு நாள் கழிச்சி வருது. எல்லாரையும் அழைச்சிட்டுப் போகலாம்னு வந்தோம்'' என்று கூறிவிட்டு, திருவிழாப் பத்திரிகையை அவரிடம் அளித்தார் நந்தாவின் மாமா கணேசன்.

பிறகு, சிறிது நேரம் பேசிக் கொண்டு இருந்துவிட்டு, இருவரும் கிளம்பிச் சென்றனர். அவர்கள் கிளம்பிய உடன், மருதாசலம் மகளிடம் திரும்பினார். ''இந்த வருஷம் திருவிழாவுக்கு, மாப்பிள்ளையோட நீ கட்டாயம் போகணும் நயனி. கல்யாணம் முடிஞ்ச உடன், போயிருக்கணும். போகலை. இனிமேயாவது, ரெண்டு பேரும் பிரியாம ந்தோஷமா நல்லா இருக்கணும். அதுக்காகவாவது, பாயிட்டு வாங்க'' என்று கூறிவிட்டு, தன் அறைக்கு சென்று ிட்டார்.

நயனி, தனக்குள்ளேயே நீண்ட யோசனையுடன் ாட்டத்திற்கு சென்று அமர்ந்து கடந்த காலத்தை அசைபோட ம்பித்தாள். இப்போது வந்து சென்றவர்களின் பெண் தான் பினி! அவளுக்குத் திருமணமாகி விட்டதா என்று, ர்களிடையே விசாரித்திருக்கலாமோ என்று தோன்றியது. ப் பூஜை பற்றி அப்பா கூறியதும், அதற்கு செல்வதா, ண்டாமா என்று குழப்பமும் மேவிட்டது.



பிறகு வந்த நாட்களிலும் இருவருமே, ஓட்டுக்குள் சுருங்கும் நத்தையாய் ஒதுங்கி இருந்தனர். மாதவன், அடிக்கடி இருவருக்கும் ஃபோன் செய்து பேசிக் கொண்டிருந்தான். அன்று ஃபோன் செய்து, தனது நிச்சயதார்த்தத்தை அந்த வார ஞாயிறன்று நடத்த வேண்டும் என்று அவர்களுடைய வீட்டினர் முடிவெடுத்திருப்பதாகக் கூறினான் மாதவன். நயனியின் மனம் துள்ளியது.

அவள், நேரே தன் தந்தையிடம் சென்று, ''அப்பா! மாதவனுக்கும் என்னோட அசிஸ்டெண்ட் ஷ்யாமாவுக்கும் இந்த வீக் எண்ட் சென்னையில் எங்கேஜ்மெண்ட் நடக்கப் போகுது. நான் கட்டாயம் போகணும்'' என்றாள்.

''அதென்னம்மா... நான் போகணும்னு சொல்றே? நாங்க போறோம்னு சொல்லு. உங்க ரெண்டு பேருக்கும் நடுவுல, இனிமே பிரிவு அப்படிங்கறதே கூடாது. அப்புறம், நீ ஊருக்குப் போய்ட்டு வந்த உடனே, நீ நந்தாவோட வீட்டுக்குப் போய், அங்கதான் இருக்கணும். அதுதான் சரி. எனக்கு உடம்பு நல்லாயிடுச்சி... நீங்க ரெண்டு பேரும், தினமும் வந்து என்னைப் பாத்துட்டுப் போனா போதும். சரியா?'' என்றார் ஒரு தீர்மானமான முடிவுடன்.

''அப்பா..!'' என்று சலுகையுடன் சிணுங்கியவள், அப்போது உள்ளே நுழைந்த நந்தாவைப் பார்த்ததும் அமைதியானாள்.

''என்ன அங்கிள்! அப்பாவுக்கும் பொண்ணுக்கும் நடுவே, நான் வந்துட்டேனா? சாரி..'' என்றான் நந்தா.

''நான்தானப்பா உனக்கு சாரி சொல்லணும் நந்தா. உங்க ரெண்டு பேரையும், சேர விடாம நான்தான் இத்தனை நாளா

உடம்பு சரியில்லாம இருந்தேன். இனிமேலாவது நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வாழணும். மாதவனுக்கு, எங்கேஜ்மெண்டாம்.. நீ நயனியை அழைச்சிட்டு போ நந்தா'' என்றார்.

''இப்பதான், மாதவன் செல்லிலே பேசினார். ஆனா, வேலை இருக்கே அங்கிள்'' என்றான் அவளை ஓரக்கண்ணால் நோக்கியபடி. நயனி உடனே வீம்பாக எழுந்து ''அப்பா! நான் நாளைக்குச் சென்னைக்குக் கிளம்பறேன்'' என்றாள்.

''இரும்மா! நந்தா.. நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து அங்க போயிட்டு வந்தா நான் ரொம்பச் சந்தோஷப்படுவேன். வேலை எல்லாம் வந்து பாத்துக்கலாம். நீயும், ரெஸ்ட் எடுக்கறதே இல்லை. போய்ட்டு வாங்க'' என்றார்.

''அப்படின்னா, சனிக்கிழமை கிளம்பலாம். சண்டேதானே ஃபங்ஷன். முதல் நாள் கிளம்பினா பரவாயில்லையா? நான், மண்டே திரும்பி இங்கே வரணும். அப்படின்னா தான் என்னால முடியும் அங்கிள்'' என்றான் நந்தா.

''அதை ஏம்பா என்கிட்டே சொல்றே? உன் ஒய்ஃப் கிட்டே சொல்லு. என்ன நயனி சரிதானே? நந்தா சொல்ற மாதிரி ரெடி ஆயிடு'' என்று கூறிவிட்டு எழுந்து, உள்ளே சென்றார் ருதாசலம். தனித்து விடப்பட்ட இருவரும் சிறிது நேரம் வுனத்திலேயே இருந்தனர். பிறகு எழுந்த நந்தா, தான் ளம்புவதாக எங்கோ பார்த்தபடி கூறிவிட்டுக் கிளம்பினான்.

''ஒரு நிமிஷம்!'' என்ற நயனி, ''மாலினிக்குக் கல்யாணம் பிடுச்சா?'' என்றாள். இதென்ன திடீர் கேள்வி என்பது ால் அவளை நோக்கிய நந்தா, சுவாரஸ்யமின்றி ''ம்.. டுச்சி'' என்றான். அடுத்து வந்த கேள்வி அவனைத் தூக்கி ப் போடச் செய்தது.



''நான் பிரிஞ்சி போன பிறகு, நீங்க ஏன் அவளைக் கல்யாணம் பண்ணிக்கலை? நான் டைவர்ஸ் தரேன்னு எழுதி இருந்தேனே?'' என்றாள் கேள்வியாக.

அவன் முகம் கோபம், வருத்தம், அருவெறுப்பு எல்லாம் கலந்த பாவத்துக்கு மாறியது. அவளிடம் திரும்பி, ''ஏன்னா, இந்தக் கல்யாணத்தை நான் மதிக்கிறேன். வருஷத்துக்கு ஒரு கல்யாணம் பண்ற டைப் நான் இல்லை. உனக்கு வேணும்னா, அது ஈசியா தோணலாம். ஆனா, நான் அந்த மாதிரிக் கிடையாது'' என்று கோபத்துடன் கூறி விட்டு வெளியே சென்றான்.

'நந்தா ஏன் கோபப்படுகிறான்? நான் என்ன தவறாகக் கேட்டேன்? அவன் விரும்பிய பெண்ணையே அவன் திருமணம் செய்து கொள்ளலாம் என்றுதானே விவாகரத்துக்குக் கூட சம்மதம் சொன்னேன்' என்ற விடை தெரியாக் கேள்விகள், அவளுக்குள் விசுவரூபமெடுத்தது.

சனிக்கிழமை அன்று மதியம், இருவரும் காரில் கிளம்பி சென்னைக்குச் சென்றனர். டிரைவர் காரை ஓட்ட, இருவரும் பின்புறம் அமர்ந்திருந்தாலும், அவர்களின் மனம் போலவே இருவருக்கும் இடையே, பெரிய இடைவெளி இருந்தது.

மலையிலிருந்து இறங்கும் போது, ஆர்வத்துடன் வெளிப்புறம் பார்வையைப் பதித்திருந்த நயனியையே, ஒரு கணம் இமைக்காமல் நோக்கினான் நந்தா, இயற்கைக் காட்சிகளில் மனம் ஒன்றி, முகம் கனிந்து சிறு பெண் போல், அவள் மகிழ்வது அவனுக்குப் புரிந்தது.

எதிர்க்காற்றின் வேகத்தில், நெற்றியின் முன் பறந்த சிறு முடிகளும், காதுக்கருகில் செல்லமாய் சிலுமிஷம் செய்த கூந்தலும், அவள் அழகை அதிகமாக்கியது.

அன்று அவன் மனம், ஏகாந்தமாய் இருந்தது. ஏனோ, அவள் உறவை நாடி வேகமாய்ப் பறந்தது. அவளைப் பார்த்த போது, சில நேரம் மார்கழிப் பனியாகவும், பல நேரம் மாபெரும் தீயாகவும் நந்தாவுக்குத் தோன்றியது.

சட்டெனத் திரும்பிய நயனி, நந்தாவின் விழிகள் முதன் முறையாகத் தன்னைக் காதலுடன் சிறைப்படுத்துவதைக் கண்டு, உள்ளுக்குள் வியந்தாள். மேலுதட்டில், வியர்வைத் துளிகள் சன்னமாய் அரும்பின.

நயனி, தன் வீட்டிற்கு நேற்றே போன் செய்து, மரகதத்திடம் சொல்லி இருந்ததால், விருந்தினர் அறை அவனுக்காக தயார் செய்யப்பட்டு இருந்தது.

சென்னைக்கு சென்று, அவள் வீட்டிற்கு சென்ற போது, நந்தா அவளை இறக்கி விட்டு விட்டு, உடனே கிளம்பினான். கண்களில் கேள்வியுடன் அவனை நோக்கிய நயனி, 'உங்களுக்கும் இங்கேயே ரூம் ரெடி பண்ணச் சொல்லி இருக்கேன். கெஸ்ட் ரூம் இருக்கு'' என்றாள்.

அவனுடைய பார்வை அவளை ஊடுருவியது. ''இல்லை ான் எப்பவுமே சென்னைக்கு வந்தா, தாஜிலே தான் தங்கறது ழக்கம். சீயூ'' என்று கூறி விட்டுக் கிளம்பினான். ஏக்கத்துடன் வள் விழிகள் அவன் சென்ற திசையையே நோக்கியது.

தான் இறங்கி வந்தால், அவன் முறுக்கிக் கொள்வதும், வன் தழைந்து வந்தால், தான் திரும்பிக் கொள்வதுமாய், ன வாழ்க்கை இது என்று சலிப்பாக இருந்தது நயனிக்கு!

ஞாயிறு அன்று மாலை, ஐந்தரை மணிக்கு வந்து அவளை ழத்து செல்வதாக, காலையில் நந்தா போன் செய்திருந் . மதியம் ஒய்வெடுத்து விட்டு, சீக்கிரமே தயாராகி, னுக்காகக் காத்திருந்தாள் நயனி.



வாசலில் அழைப்பு மணி ஒலித்தது. எழுந்து சென்று கதவைத் திறந்தால், நந்தா அங்கு நின்றிருந்தான். அழகிய சாம்பல் நிறத்தில் சபாரி சூட்டில், கம்பீரத்துடன் ஆண்மை மிளிர நின்றான் அவன். நயனியின் மனதில், தன் கணவர் எவ்வளவு கம்பீரமானவர் என்ற பெருமிதம் வந்தது. முதன் முதலில், அவன் தன் வீட்டுக்கு வருகிறான் என்பதை மனம் குறித்துக் கொண்டது.

''உள்ளே வாங்க!'' என்றாள் நயனி. சிறு புன்னகை கலந்த யோசனையோடு அவளை அளவிட்ட நந்தா, உள்ளே வந்து அமர்ந்தான். அழகான தங்க நிற டிஷ்யூவில், தங்க மணிகளும் முத்தும் வைத்துத் தைக்கப்பட்ட டிசைனர் புடவையில் ஒளியப் பாவை போல் இருந்தாள் அவள்.

தங்கச் சிறகு விரித்த, சித்தன்ன வாசல் சிற்பம் போல் தோன்றியது நந்தாவுக்கு, நயனியைப் பார்த்த போது! அவசரமாகத் தன் பார்வையைத் தழைத்துக் கொண்டான் நந்தா. அவனை ஆவலுடன் கண்டு, தன் இதயத்துள் ஆழப் பதித்த நயனி, தன்னைப் பார்க்க அவனுக்கு பிடிக்க வில்லையோ என்று மவுனமாய் மறுகினாள்.

உள்ளே சென்று காபியுடன் வந்தவள், அவனுக்கும் ஒரு கப் கொடுத்து விட்டுத் தானும் பருகினாள். சிறிது நேரம் தர்மசங்கடத்துடன் அமர்ந்திருந்தாள் நயனி. நந்தா எழுந்து ''கிளம்பலாமா?'' என்றவுடன், கிளம்பி இருவரும் ஜோடி யாகக் காரில் செல்வதை ஆசையுடன் பார்த்துக் கொண்டு இருந்தார் மரகதம். செல்லும் வழியில், முன்பே ஆர்டர் செய்திருந்த ஒரு பெரிய மலர்க் கொத்தை வாங்கிக் கொண்டாள் நயனி.

ஹோட்டலுக்குள் விழா நடைபெறும் ஹாலுக்கு சென்ற போது, அவளுடைய கம்பெனி ஊழியர்கள் அனைவரும்

மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். எல்லோரிடமும் சிரித்தபடி பேசிவிட்டு நந்தாவை அறிமுகம் செய்தாள் நயனி.

அனைவரின் பார்வையும், அருமையான ஜோடிப் பொருத்தம் என பிரமித்து வியந்தது. மேடையின் எதிரே கீழே, மாதவன் அமர்ந்து இருந்தான். அவர்களிருவரையும் கண்டதும், புன்னகையுடன் வேகமாக எழுந்து வந்து வரவேற்று, நந்தாவை அணைத்துக் கொண்டான். தன் அருகிலேயே அவனை அமர்த்திக் கொண்டு பேசிக் கொண்டிருந்தான்.

மாதவன், ''ரொம்பத் தேங்க்ஸ் நந்தா! உங்க பிசியான எஸ்டேட் வேலைங்களுக்கு நடுவுல, எனக்காகக் கிளம்பி வந்ததுக்கு! ஆமாம்... என் ப்ரெண்ட் என்ன சொல்றாங்க? இன்னும் அதே பிடிவாதம் தானா? இல்லை மாறி இருக்காங்களா?'' என்றான் காதோரம் குனிந்து.

''ம்... அதை அவங்க கிட்டதான் கேக்கணும். என்னைக் கேட்டா இன்னும் ஒரு பர்சண்ட் கூட மாறலைன்னு தான் சொல்லுவேன். ஆனா, உங்ககிட்ட என்ன சொல்லுவாங்களோ, நீங்க தான் கேட்டுச் சொல்லணும்'' என்றான் நந்தா ஒரு விதமான குரலில். மாதவனின் முகம் யோசனையானது.

## 10

நயனி, ஷ்யாமாவை மணமேடைக்கு அழைத்து வந்து உட்கார வைத்தாள். அவள் காதருகில் குனிந்து, ஏதோ கிண்டல் செய்து சிரித்துக் கொண்டு இருந்தாள். அவளையே, யோசனையோடு கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தான் நந்தா.



மேடையில் ஒரே கேலியும், கிண்டலுமாகப் பொழுது போய்க் கொண்டு இருந்தது. கீழே இறங்கி மாதவனிடம் வந்த நயனி, ''என்ன மாதவன், இப்பவே சரண்டர் ஆயிருப்பேன்னு பார்த்தா, என்னவோ ஷ்யாமா புலம்பறா! என்ன சார் விஷயம்?'' கிண்டலாகக் கேட்டாள்.

''ஆமாம் ஆரம்பத்திலேயே கண்ட்ரோல் பண்ணினா தான், அப்புறம் நாம நிம்மதியா இருக்கலாம். இப்பவே விட்டுட்டா அப்புறம் அவ்வளவு தான்'' என்று கூறிவிட்டுச் சிரித்தவன், ''சும்மா சொன்னேன்... இப்பவே எத்தனை தோப்புக் கரணம் போடணும்னு ஷ்யாமாவை சொல்லச் சொல்லு உடனே போடுவேன்'' என்றான் கண் சிமிட்டியபடி.

''ஷ்யாமா குடுத்து வச்சவ'' என்றாள் நயனி ஏக்கத்துடன். உடனே மாதவன், ''சொல்லுவீங்க... உங்களுக்கு அடங்கி நடந்தா நாங்க நல்லவங்க... இல்லைன்னா நாங்க கெட்டவங்களா? இதனால்தான் இத்தனை நாளா மாட்டிக்காம இருந்தேன். இப்ப நல்லா வசமா மாட்டிக் கிட்டேன்'' என்று பெருமூச்சு விட்டான்.

அவர்கள் பேசிக் கொண்டு இருக்கும்போது, நந்தாவின் பார்வை நயனியையே வட்டமிட்டது. மேடைக்கு மாதவனை யும் அழைத்துச் சென்று நலங்கு வைத்தனர். பொழு ரம்யமாக ஓடியது.

நயனி, நலங்கு முடிந்ததும், டிரைவரைக் கண் அசைவி அழைத்தவள், அவர் கொண்டு வந்த மலர்க்கொத்தை நந்தாவிடம் கொடுத்து மாதவனிடம் கொடுக்கச் சொன்னா இன்னொரு பாக்கெட்டிலிருந்து ஒரு டப்பாவை எடுத்து இ மோதிரங்களை எடுத்தவள் இருவரிடமும் கொடுத்து மாற் கொள்ளச் சொன்னாள்.

இரு மோதிரங்களும் சிறு இதய வடிவில், நடுவில் பெயரின் முதல் எழுத்து எனாமலில் செதுக்கப்பட்டு அழகாக இருந்தது. இருவரும் வெட்கத்துடன் மோதிரம் மாற்றிக் கொண்டனர்.

ஷ்யாமாவின் காதோடு வாழ்த்தி நிமிர்ந்த நயனியின் விழிகளில் தெரிந்த ஏக்கத்தையும், ஆவலையும் கண்டபோது, நந்தாவிற்கு ஏதோ தடம் புரண்டது. அவளுக்காவது, வாழ்க்கையில் மகிழ்ச்சி நிலைத்திருக்கட்டும் என்று நயனிக்குத் தோன்றியது. மகிழ்ச்சி என்பது, அவரவர் மனதிலும், வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளும் விதத்திலும் தான் இருக்கிறது என்று அவளுக்குப் புரியவில்லை.

சாப்பிட்டு முடித்து நான்கு பேரும் அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தபோது, ஷ்யாமா அவளிடம் ''மேடம்! நீங்க ிராம்பக் குடுத்து வச்சவங்க. உங்க ஊரைப் பத்தியும், ஸ்டேட்டைப் பத்தியும் தான், வந்ததிலிருந்து மாதவன் பசிட்டே இருந்தார். உங்க ரெண்டு பேருக்கும் ஜோடிப் பொருத்தம் ரொம்பப் பிரமாதம் மேடம்'' என்றாள்.

ஒரு கசந்த முறுவலுடன், எல்லாவற்றையும் கேட்டுக் ாண்டு இருந்த நயனிக்கு, தங்களுக்கு மனப் பொருத்தம் ் சரியில்லை என்று எண்ணத் தோன்றியது. நேரமாகி வே, நந்தா 'கிளம்பலாமா?' என்று எழுந்து அவளைப் த்தான். உடனே நயனியும் எழவும், மாதவன் திடீரென ைய மூடிக் கொண்டு நமட்டுச் சிரிப்பு சிரித்தான்.

ிந்து கொண்ட நயனி, ''மாதவன்'' என்று சுட்டு விரலைக் எச்சரிக்கை செய்து விட்டு, ''ஷ்யாமா! உன்னோட ்க்காரரைப் பத்திரமாப் பாத்துக்க... அப்புறம் இது மாதிரி



ஏதாவது செஞ்சி என்கிட்ட அடி வாங்கினா, அப்புறம் கோச்சுக்காதே'' என்றாள். அனைவரும் நகைத்தனர்.

**வி**ழா முடிந்து காரில் இருவரும் திரும்பி வரும் போது, இருவர் மனதிலும் ஒரு வித மவுன லயமே நிறைந்திருந்தது. தங்களுடைய திருமணம், நிச்சயம் என்று பழைய நினைவுகள், இருவரையும் இனிதாய் அலைக்கழித்தது. அவளை, வீட்டுவாசலில் இறக்கி விட்ட நந்தா, ஒரு எதிர்பார்ப்புடன், நிமிர்ந்து அவளை நோக்கினான். கண்களில் புரியாத ஒரு மவுனச் செய்தி தெரிந்தது.

உடனே பார்வையைத் தழைத்த நயனி, ''குட்நைட்! நீங்க நாளைக்கு எத்தனை மணிக்கு கிளம்பறீங்க?'' என்றாள்..

அவனுடைய இரு புருவங்களும் நெரிந்தன. கண்கள் கோபத்துடன் சுருங்கி இடுங்கியது. ''அப்படின்னா, நாளைக்கு நீ என் கூட வரலையா?'' என்றான் ஆழ்ந்த குரலில்.

''இல்லை. எனக்கு ஆபீசில் கொஞ்சம் வேலை இருக்கு. நான் அப்புறம் வரேன்.'' என்றாள், விழிகளைத் தன் விரல்களில் பதித்து.

சீற்றத்துடன் திரும்பியவன், ''நான் காலையில் ஒன்பது மணிக்கு கிளம்பிடுவேன்'' என்று கூறிவிட்டு டிரைவரிடம் திரும்பி, ''போகலாம்'' என்றபடி பின்புறம் சாய்ந்து கொண்டான். தன் இதயமே, தன்னை விட்டு நீங்கிச் செல்வது போலிருந்தது அவளுக்கு.

**ம**றுநாள் நயனி விழித்தெழும் போதே, மணி எட்டரை ஆகி இருந்தது. பதறி எழுந்தவள், உடனே நந்தாவுடைய செல் போனில் அழைத்தாள்.

உடனே எடுத்த அவனுடைய குரல் கம்பீரமாக அவள் காதுக்கு அருகில் கேட்டது. ''ஹலோ! நான் நயனி பேசறேன். ஊருக்குக் கிளம்ப ரெடியாயிட்டீங்களா?'' என்றாள் நயனி.

''ம்! அல்மோஸ்ட் ரெடி. இன்னும் கொஞ்சநேரத்துல எப்படியும் கிளம்பிடுவேன்'' என்றான் யாரிடமோ பேசுவது போல்!

''அப்பாகிட்ட, நான் அப்புறம் வர்றதா சொல்லுங்க. வேலை எல்லாம் முடிச்சிட்டு வரேன்னு சொல்லுங்க'' என்றவுடன், ''ம்'' என்ற ஒற்றைச் சொல்லுடன் செல்லை அணைத்தான் நந்தா.

அன்று முழுவதும், ஏதோ சொல்லில் புரியாத உணர்வு நயனியை அலைக்கழிப்பதாய்...! மனம் மிகவும் பாரமாய் இருந்தது. அன்று மாலையே, அவளுக்கு போன் செய்தார் மருதாசலம். எஸ்டிடி அழைப்பு வந்தவுடன், போனை வேகமாக எடுத்தாள் நயனி.

''ஹலோ! நான் அப்பா பேசறேன். ஏம்மா... நீ உன்னையும் ஏமாத்திட்டு, கூடவே எங்களையும் ஏமாத்தறே? பாவம் நந்தா! நீயும் அவரை விரும்பற மாதிரி தெரிஞ்சதுனால தான், நான் இந்தக் கல்யாணத்தை முடிச்சேன். பின்ன ஏன் இப்படிப் பண்றே? நீ வேற யாரையும் விரும்பலை... உன் கணவனையும் விரும்பலை. அப்புறம் உன் வாழ்க்கையில், நீ எதைத் தான் விரும்புறே? எனக்கு புரியலை!'' என்றார் அவர் கோபமாக.

சிறிது நேரம் அமைதியாக இருந்த நயனி மெதுவாக ''அப்பா! நான் மட்டும் விரும்பினா பத்தாது. அவரும் விரும்பணும்'' என்றாள் நயனி பற்களைக் கடித்தபடி!



''நந்தா உன்னை விரும்பித்தாம்மா கல்யாணம் செஞ்சிக்கிட்டாரு. என் மாப்பிள்ளைன்னு பெருமைக்குச் சொல்லலை. வேற யாராவதா இருந்திருந்தா, இவ்வளவு பொறுமையா உனக்காகக் காத்திருப்பாங்களா...? சொல்லு!'' என்றார்.

''எனக்காக ஒண்ணும் இல்லைப்பா... நம்ம சொத்துக்காக!'' என்று அவள் முடிக்கும் முன்பே, கோபத்துடன் அவர் குரல் இடையிட்டது.

''சே.... தகுதி இல்லாத ஒருத்திய மணந்ததுக்காக நந்தாவும், பெத்ததுக்காக நானும் கடைசி வரைக்கும் நிம்மதி இல்லாமத் தான் இருக்கணும் போல இருக்கு. இதோ பார் நயனி! இந்த வாரக் கடைசியில வெள்ளிக்கிழமை நந்தாவோட குலதெய்வம் கோவில்ல பூஜை இருக்கு. நீ புதன் கிழமை இங்க வந்து, அடுத்த நாள் அவரோட அந்த ஊருக்குப் போறே! அவ்வளவு தான் சொல்வேன்!'' என்று கோபத்துடன் போனை வைத்தார் மருதாசலம்.

அன்றிரவு, கண்ணீரிலேயே கரைந்தது நயனிக்கு...! மறுநாள் முழுவதும், கம்பெனி வேலைகளிலேயே பொழுதைக் கழித்தவள், அவள் அங்கு இல்லாமலேயே, வேலைகள் நன்கு நடைபெறுவதை உணர்ந்து கொண்டாள்.

இங்கும், தான் வேண்டாதவளாகி விட்டோமோ என்ற விரக்தி, தீயாய் மனதை தகிக்கச் செய்வதாய்...! அன்று, மாதவனும் அவளிடம் வெகு நேரம் பேசினான். அவள் மனம் குழம்பிய குளமானது.

மறுநாள், புதன்கிழமை அன்று மாலையில் கிளம்பி ஏலகிரிக்குச் சென்றாள் நயனி. வீட்டினுள் சென்று நுழைந்த

போது. ஹாலில் அமர்ந்திருந்த மருதாசலம் அவளைப் பார்த்து விட்டு கோபமாகக் குனிந்து கொண்டார். அவரருகில் சென்று அமர்ந்து, அவர் மீது ஆதரவுடன் சாய்ந்து கொண்டாள் அவள்.

மெதுவாக அவளுடைய தலையை வருடியவர், அவளை நோக்கி, "புரிஞ்சிக்கடா... நாங்க ரெண்டு பேரும், உன் மேல உயிரையே வச்சி இருக்கோம். நீ தான், புரியாம விலகிப் போறே... உன் தேடல் என்னன்னு எனக்கு புரியலை. அடம் புடிச்சிப் படிச்சே.. சரி, தொழில் தொடங்கி வெற்றிகரமா நடத்தணும்னு ஆசைப்பட்டே... அதுவும் நடக்குது. இனிமேயாவது, நந்தாவுக்கு நல்ல துணையா இருந்து, எனக்கு விளையாடப் பேரப் பசங்களைப் பெத்துத் தரக் கூடாதா?" என்றார் சோர்ந்த குரலில்.

அந்த நொடி, ஏனோ அழுகையாக வந்தது நயனிக்கு. தன் மனம் மிகவும் பலவீனமாக இருப்பது புரிந்தது. அமைதியாக சிறிது நேரம் அமர்ந்திருந்தாள். அவளை நிமிர்த்திய மருதாசலம், "நாளைக்குக் கோவிலுக்குப் போறீங்க. உங்க ரெண்டு பேருக்கும் நடுவுல என்ன பிரச்சினைன்னு, இன்னும் எனக்குப் புரியலை. கடவுள் மேல பாரத்தைப் போட்டுட்டு, ரெண்டு பேரும் மனசு விட்டுப் பேசி ஒரு நல்ல முடிவுக்கு வரணும்... சரியா?" என்றார் மனதில் வேதனையுடன்.

"ம்.. சரிப்பா!" என்றாள் நயனி. மறுநாள் காலையில் நந்தாவுடன் கிளம்ப வேண்டும் என்பதால், சீக்கிரமே படுத்து உறங்கிவிட்டாள். மறுநாள் காலையில் எழுந்து, தனக்கு வேண்டிய உடைகளை அடுக்கி வைத்து விட்டுக் கிளம்பினாள் நயனி. தலை குளித்து அழகாகத் தலையை வாரித்து விட்டு, கரும்பச்சை நிற காட்டன் புடவையில் அழகாக இருந்தாள் நயனி.



மருதாசலம், மகளை ரசித்து விட்டுப் பாராட்டினார். "உனக்குப் புடவைதான்டா அழகு! என்ன இருந்தாலும் புடவைக்கு இருக்கற அழகு, வேற எந்த உடைக்கும் இல்லை. கோவில் சிலையாட்டம் இருக்கு, உன்னைப் பார்த்தா!" என்றார்.

நந்தா உள்ளே வந்த போது, அவனுடைய இரு புருவங்களும் உயர்ந்து மேலெழும்பின. ஒரு கணம், தலை முதல் கால் வரை அவளை ஆராய்ந்தவன், மருதாசலத்திடம் திரும்பி, "நாங்க கிளம்பறோம் அங்கிள்" என்றான்.

மருதாசலம், "எப்படியும் பூஜை முடிய, நாளைக்கு மதியானம் ஆயிடும் இல்லையா? தங்கிட்டு, மெதுவா வாங்க. ஒண்ணும் அவசரமில்லை" என்றார் ஏதோ உள் அர்த்தத்துடன்.

இருவரும் கிளம்பி, அவனுடைய ஊருக்குச் சென்றார்கள். டிரைவர் காரை ஓட்டியதால், இருவருமே பின்புறம் அமர்ந்திருந்தனர். வழியில், ஜலகாம்பாறை நீர் வீழ்ச்சி அருகில் காரை நிறுத்தச் சொல்லி இருந்தான் நந்தா. கார் நின்றவுடன் இறங்கியவன், அவளிடம் திரும்பி "நீ வரியா?" என்று கேட்டான்.

நயனிக்கு மறுத்துக் கூற ஏதுமில்லாததால், பேசாமல் இறங்கி அவன் பின்னே சென்று அருவியை ரசிக்க ஆரம்பித்தாள். பால் போன்ற வெண்மையுடன் நுரையாய் பொங்கிப் பரவி, சிதறி வழிந்த அருவியைக் கண்டு மனம் குதூகலமானது. அவள் தன்னைச் சுற்றி எழுப்பி கொண்டிருந்த மாயவேலி விடுபட்டுச் சென்று, இயல்பா வெகுளித்தனம் வெளிப்பட்டு, அவளை மெய்மறக்க செய்தது. இரு கைகளையும், கன்னங்களில் பதித்துக் கொண் கண்கள் மின்ன, "வாவ்! என்ன அழகு... இயற்கை தா

எவ்வளவு அழகு... இல்லை மனு'' என்று தன்னை அறியாமல் கூறிவிட்டவள் சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

அவள் ''மனு'' என்றவுடன், ஆச்சர்யத்துடன் திரும்பிய நந்தா, உடனே மாறிவிட்ட அவள் முகத்தைக் கண்டவுடன், இரு கைகளையும் இறுக மூடித் திறந்தான். கண்கள், எங்கோ தூரப்பார்வை பார்த்தன. நயனியால், தன் மனதில் என்றுமே எண்ண அலைகள் ஓயப் போவது இல்லையோ என்று நந்தாவுக்குத் தோன்றியது. பிறகு இருவரும், மவுனமாகவே காரில் சென்று அமர்ந்து பயணத்தைத் தொடர்ந்தனர்.

## 11

நந்தாவுடைய சொந்த ஊருக்குச் சென்று அடைந்த போது,

அந்த கிராமமே திருவிழாக் கோலம் பூண்டிருந்தது. அவர்களின் கார் ஊருக்குள் சென்று, ஒரு பழைய வீட்டின் முன்பு சென்று நின்றது. அவர்களை நந்தாவின் மாமாவும், மாமியும், உறவினர்களும் உற்சாகத்துடன் வரவேற்றனர்.

அந்தப் பழங்கால வீட்டின் அமைப்பு நயனிக்கு மிகவும் பிடித்திருந்தது. வீட்டின் நடுவே முற்றமும், சுற்றிலும் தூண்களும், சுற்றிலும் தாழ்வாரங்களுடன் விஸ்தாரமாக பழைய வீடாக இருந்தது, நந்தாவின் மாமா வீடு. வீட்டைச் ற்றிலும் பார்வையைச் சுழல விட்டவள், பாராட்டும் விதமாக வீடு ரொம்ப அழகா இருக்கு'' என்றாள் நந்தாவின் ாமியிடம்.

அவரும் சிரித்துக் கொண்டே, ''உங்களுக்கு ஒரு ரூம் ரெடி ண்ணி இருக்கேம்மா. உங்க வீடு மாதிரி இங்க வசதி க்காது. ரெண்டு பேரும் பொறுத்துக்கணும்'' என்றார்.



''எனக்கு இந்த இடமே ரொம்பப் பிடிச்சிருக்கு'' என்றாள் நயனி புன்னகையுடன் பாயில் அமர்ந்தபடி.

''என்னைப் பெரியம்மான்னு கூப்பிடு நயனி. அவர் உனக்கு பெரியப்பா முறை ஆகணும்'' என்று கூறிவிட்டு நந்தாவிடம் திரும்பினார்.

''நான் கூட, நயனி பெரிய பணக்காரப் பெண்ணாச்சே, எப்படிப் பழகுவாளோன்னு பயந்தேனப்பா நந்தா! ரொம்ப இயல்பா பழகறா. எனக்கு ரொம்ப சந்தோஷம்பா'' என்றார்.

நந்தாவின் மாமா அவளிடம், ''அப்பாவை அழைச்சிட்டு வந்திருக்கலாமே! அவரையும் வரச் சொல்லி அழைச்சிட்டுத் தானே வந்தோம்'' என்றார்.

''அப்பாவுக்கு இன்னும் உடம்பு முழுக்க குணமாகலை. அதான் ரெஸ்ட் எடுக்கட்டும்னு அழைச்சிட்டு வரலை'' என்றாள் நயனி.

அன்று மதியம், நந்தாவுடன் இணைந்து அமர்ந்து, தலை வாழை இலையில் சாப்பிட்ட போதும், மதியம் தரையில் பாய் போட்டு உறங்கிய போதும், பொழுது இனிதாகச் சென்றது.

மாலையில் மாலினி தன் குடும்பத்துடன் வந்த போது தான், அவளின் கனவுக் கூடு கலைந்து, சந்தோஷம் விலகியது. அவளைக் கண்டதும், முன்பே எதிர்பார்த்திராததால், மாலினியும் திடுக்கிட்டு விழித்தாள். இருவரிடமும் ஒருவித விலகல் தெரிந்தது. பக்கத்து ஊரிலேயே கணவருடன் வசிப்பதால் குடும்பத்துடன் மாலினி திருவிழாவுக்கு வந்திருந்தாள். அவளுடைய குழந்தையுடன் இயல்பாக விளையாடினாள் நயனி.

மாலையில், சுவாமி திருவீதி உலாவும், பூஜையும் நடக்க இருந்ததால், அனைவரும் கோவிலுக்குச் சென்றனர். நந்தாவின் அருகில் நின்று கடவுளை வணங்கிய போதும், மனமொன்றிய கணவன், மனைவி போல் இருவரும் நின்ற போதும், எதுவுமே வேண்டிக் கொள்ளத் தோன்றவில்லை அவளுக்கு! ஏதோ ஒரு மவுன லயத்தில் திளைத்திருந்தாள் நயனி.

அன்றிரவு, அவர்களுக்கு என்று தரப்பட்டிருந்த அறையின் உள்ளே சென்று தரையில் பாயை விரித்துப் படுத்து வெகு நேரம் ஆகியும், நயனிக்கு உறக்கம் வரவில்லை. கட்டிலில் படுத்துக் கொண்டு இருந்த நந்தாவின் பார்வையும், வெகு நேரம் விட்டத்தில் பதிந்திருந்தது.

ஒரே அறையில், தனிமையிலும் இரு உள்ளங்களும், தவிப்புடன் தனித்திருந்தன. அவனுடைய சுவாசத்தைத் தனியே இனம் காண, அவள் மனம் ஏங்கித் தவித்தது. உறக்கம் ...ந்து, மெல்ல இமைகளைத் தழுவியது.

மறுநாள் காலை, கோவிலில் பொங்கல் வைத்து பூஜை ...செய்ய ஏற்பாடு செய்திருந்தனர். கோவிலுக்குச் சென்று கல் ...வைத்து அடுப்பு மூட்டி பொங்கல் வைப்பதற்குக் கூடவே ...ந்து எல்லா உதவிகளும் செய்தார் நந்தாவின் மாமி ...வதி. நயனியும், மாலினியும் பக்கத்திலேயே ஒருவர் ...கில் மற்றவர் அமர்ந்து பொங்கல் வைத்த போதும், ...வரிடமும் ஒரு வித ஒதுக்கம் தெரிந்தது.

...மி தான் அவளிடம் பேசிக் கொண்டு இருந்தார். பேச்சின் ...யே அவர் நயனியிடம், "என் பொண்ணு மாலினி கூட, ...வைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு ஆசைப்பட்டா. ... கடவுள் உனக்கும் நந்தாவுக்கும் தான்னு முடிச்சுப்



போட்டு இருக்கும்போது, நாம் யார் அதை மாத்தறதுக்கு? நந்தாவுக்கு இதிலே இஷ்டமில்லை. மாலினியை, அந்த மாதிரி நினைச்சி நான் பழகலைன்னு சொல்லிட்டான். அப்புறம் தான் வேற மாப்பிள்ளை பாத்தோம்" என்று முடித்தார்.

நயனிக்கு அதைக் கேட்டதும், உடலெங்கும் வேதனை தகிப்பாய் பரவியது. கண்கள் சிவந்து பளிச்சிட, கோபத்துடன் திரும்பி மாலினியைப் பார்த்தாள். நயனியின் கூர்மையான தகிக்கும் பார்வையில், குற்ற உணர்வுடன் தலைகுனிந்து கொண்டாள் அவள். மாமியின் மறைமுகச் செய்தியால் நயனியின் இதயம் படபடப்பதாய்... உடலே உணர்வின்றி மரத்துப் போய் வலிப்பதாய்... நந்தாவிடம் தவறு இல்லையோ என்று முதன் முதலில் தோன்ற ஆரம்பித்தது அவளுக்கு!

தான் மிகவும் அவசரப் பட்டு விட்டோமோ... அவன் பக்கத்து நியாயத்தைச் சொல்வதற்கு கூட, அவனுக்கு அவகாசம் தரவில்லையோ என்ற பயம் மனமெங்கும் பரவி, உடலை விதிர்க்கச் செய்தது. குற்ற உணர்ச்சியில் கண்கள் கலங்கிக் கண்ணீர் வந்தது.

பூஜை முடியும் வரை, அவள் மனம் அவள் வசமில்லை. ஆண்கள் எல்லோரும் பெரிய மண்டபத்தில் அமர்ந்து பேசிக் கொண்டு இருந்தனர். நந்தாவை அவளால் சரியாகக் கூட பார்க்க முடியாமல், கண்ணீர் மறைத்தது.

பூஜை முடிந்து மதியம் வீட்டிற்குச் சென்ற போது, மனதில் ஒரு முடிவுடன் மாலினியிடம் வந்தாள் நயனி. அவளிடம் தான் தனியே பேச வேண்டும் என்று தெரிவித்ததும், மாலினியும் அவளைத் தொடர்ந்து பின்புறம் தோட்டத்திற்கு வந்தாள்.

சிறிது நேரம் தர்மசங்கடத்துடன் அமைதியாக இருந்த மாலினி, "நயனி! சாரி!... என்னை மன்னிச்சிட்டேன்னு நீங்க சொன்னாத் தான் நான் நிம்மதியா ஊருக்குப் போவேன். நான் நடந்த எல்லாத்தையும் உங்ககிட்ட சொல்றேன். நீங்க என்னை தண்டனை தந்தாலும் நான் ஏத்துக்கறேன்." என்று நிறுத்தினாள்.

ஒரு பெருமூச்சுடன், "நான் நந்தா அத்தானை விரும்பினது மட்டும் தான் உண்மை! அவர் என்னை விரும்பலை. அதுவே எனக்கு ஒரு அடியா இருந்தது. அப்பதான், உன்னைக் கல்யாணம் பண்ணிக்க அத்தான் சரின்னு சொன்னார். அத்தைக்கும் இது பிடிக்கலை. ஆனா, தடுக்க முடியலை. அத்தான், மாமா, ரெண்டு பேரும் விரும்பினபடி, உங்களோட கல்யாணம் நடந்தது" என்று நிறுத்தியவள், கண்களிலிருந்து வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொண்டு தொடர்ந்தாள்.

"அன்னிக்கு நீங்க ரெண்டு பேரும், ரொம்ப சந்தோஷமா கோவிலுக்கு போயிட்டு வந்தப்போ எனக்கு மனசு ரொம்ப கஷ்டமா இருந்தது. உங்களை நோகடிக்கணும்னு, ஏனோ தோணிச்சி. அதான், அப்படி ஒரு பொய் சொன்னேன். அன்னிக்கே, ஊருக்கும் கிளம்பி வந்து விட்டேன். நீங்க ரெண்டு பேரும் பிரிஞ்சதே, அத்தை மாமா இறந்த அன்னிக்குத்தான் தெரியும்.

"இது பெரிய தப்பு தான். எங்க அம்மா, அப்பாவுக்கு இதெல்லாம் தெரியாது. உங்ககிட்ட சொல்லலாம்னு வந்தா, நீங்க ஊருக்குப் போயிட்டீங்க... எனக்கு இதை வெளியே சொல்ல பயமா இருந்தது.

"இத்தனை வருஷமா, என் மனசுல அரிச்சிட்டு இருந்த ந்த விஷயத்தை, இப்ப உங்ககிட்ட சொன்னப்புறம் தான்



நிம்மதி ஆச்சு. நீங்க ரெண்டு பேரும் ஏன் பிரிஞ்சீங்கன்னு எனக்குத் தெரியாது. ஆனா, நீங்க படிக்கணும், பெரிய ஆளா வரணும், அப்படின்னு தான் நந்தா அத்தானைப் பிரிஞ்சி போனதா அப்பா சொன்னாங்க"

"நயனி! நான் தெரியாம, ஏதோ தப்பு பண்ணிட்டேன். அன்னிக்கு என் மனநிலைமை அப்படி! எல்லாரும் என்னை ஏமாத்திட்ட மாதிரி தோணிச்சி. ஆனா, இப்ப நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து, சந்தோஷமா இருக்கறதைப் பாத்தப்புறம் தான், எனக்கு நிம்மதியே வந்தது. என்னை மன்னிச்சிடுங்க நயனி" என்றாள் கண்ணீருடன் அவள் கைகளைப் பிடித்து கொண்டு!

வானமே இடிந்து தன் மேல் விழுந்தது போலிருந்தது நயனிக்கு... நந்தாவுக்கு, எவ்வளவு பெரிய அநியாயத்தை செய்து இருக்கிறோம் என்று புரிந்தது. அவனைப் புரிந்து கொள்ளாமல், அவன் பக்கத்து நியாயத்தையும் கேட்காமல், அவன் விளக்கத்தைக் கூடக் கேட்காமல், அவனுக்கு தான் இழைத்த தவறு, இன்று மலையளவுக்குக் கண் முன்னே விரிந்து தெரிந்தது.

நயனி, மனமும் உடலும் ஓய்ந்து போய்த் திரும்பி "நீங் உள்ளே போங்க மாலினி. குழந்தை முழிச்சிட்டுத் தேட போறான்" என்றாள்.

"என்னைத் தப்பா நினைக்கலை, மன்னிச்சிட்டேன் சொன்னா, நான் நிம்மதியாப் போவேன் நயனி" என்றா கண்ணீருடன்.

"நீங்க போங்க மாலினி. நான் எதையும், பெரி நினைக்கலை. எனக்கு கொஞ்ச நேரம், தனியா இருக்கனு போல இருக்கு. நான் அப்புறமா வரேன்" என்று எவ்வ

தான் இயல்பாகக் கூறினாலும், அவள் செய்த மாபெரும் தவறு, சூழிக்காற்றாய் மனதை அலைக்கழிப்பதாய்... கடலுக்கடியில் நிகழ்ந்த நில அதிர்வு போல், உள்ளம் அதிர்ந்து வெளியில் தெரியாமல் உள்ளே கொந்தளித்தது.

கண்கள் கண்ணீர் அருவியை உற்பத்தி செய்தது... நந்தாவிடம் சென்று, இப்போது எப்படிப் பேசுவது என்று பயமாக இருந்தது.

என்ன பேசுவது, பேசினாலும் எப்படி எடுத்துக் கொள்வானோ என்று இதயம் பலவீனமாய் துடித்தது.

வெகு நேரம் அங்கேயே அமர்ந்திருந்த நயனி, மாமி வந்து அழைக்கவும், உள்ளே சென்றாள். முன் தாழ்வாரத்தில் அமர்ந்து, மாலினியின் கணவர் சங்கருடன் பேசிக் கொண்டிருந்த நந்தாவின் ஆழந்த குரல் மயிலிறகாய் செவிகளை வருடி, வீணையாய் மனதை மீட்டியது. ஏனோ, உள்ளம் பரவசமாய் துடிதுடித்தது. கோடி முறை அவன் பெயரை உச்சரித்தது. தன் உயிரே மனுவுக்காகத் தவம் செய்வது போலிருந்தது.

தன் மனதை, அவனுக்கு எப்படிப் புரிய வைப்பது என்ற கவலை இதயத்தைப் பிழிவதாய்... எப்போதோ படித்த பைபிளின் வரிகள் உடனே நினைவுக்கு வந்தது. ''உங்களுக்கு பிறர் என்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அதையே நீங்கள் அவர்களுக்குச் செய்யுங்கள்'' என்ற வரிகள் அட்சரம் பிசகாமல் நினைவில் கோர்த்தது.

அவன் நம் மேல் அன்பு செலுத்தாவிட்டால் என்ன? நாமே அவனை அன்பெனும் மழையால் நனையச் செய்வோம், என்றாவது அவனுக்குத் தன் காதல் புரிந்து, தன் மீது அன்பு



வருகிறதா என்று பார்க்கலாம் என்ற எண்ணம் மனதில் விதையாய் விழ, தனிமையை எதிர் நோக்கிக் காத்திருந்தாள் நயனி.

## 12

மாலையில் இருவரும் ஊருக்குத் திரும்பி வரும்போது, உறவுகளின் கூட்டமின்றி நயனிக்கு ஏகாந்தமாக இருந்தது. அமைதியாக, மனுவுடன் எப்படிப் பேசலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தாள் நயனி. அவளுடைய வீட்டுக்குச் செல்லும் பாதையில் கார் திரும்பும் முன், நந்தாவிடம் திரும்பினாள் அவள். ''நான் உங்களோட தனியா கொஞ்சம் பேசணும். நம்ம வீட்டுக்குப் போகலாமா? நான் அங்கே இருந்தே, அப்பாவுக்கு போன் பண்ணி சொல்லிடுறேன்'' என்றாள் முயன்று வரவழைத்த துணிவுடன்.

வேகமாய்த் திரும்பிய நந்தாவின் பார்வை, கூர்மையாய் அவள் மேல் பதிந்தது. புருவங்கள் நெரிந்து உயர்ந்தன. அவன் விழிகள் கூர் உளிகளாயின. அவள் மனதை சிற்பமாய் செதுக்கியது அவன் பார்வை. படபடப்புடன் தலைகுனிந்து கொண்டாள் நயனி.

அவனுடைய பங்களாவிற்குச் சென்று கார் நின்றதும், இறங்கியவளுக்கு கால்கள் அசைய முடியாமல் தடைப்பட்டன. பொருட்களை உள்ளே எடுத்து வருமாறு, டிரைவரிடம் கூறிவிட்டு அவளையே திரும்பி கூர்மையான பார்வையால் அளவிட்டான் நந்தா. தன் மீது நிலைத்திருந்த அவனுடைய பார்வையை உணர்ந்த நயனி, வேகமாகக் காரிலிருந்து கீழே இறங்கினாள். குழப்பமும், குற்ற உணர்வும் அவள் கால்களைப் பின்னச் செய்தது.

மெல்ல நந்தாவைப் பின் தொடர்ந்தாள் அவள். நந்தா, நேரே தன் அறைக்குச் செல்லவும், அங்கும் அவனைத் தொடர்ந்தவள், இருவரும் உள்ளே சென்று கதவை மூடியதும் தான், தன் உள்ளத்தின் போராட்டத்தை உணர்ந்தாள். மதில் மேல் பூனையாய் மனம்! மனதின் உள்ளே பயப்பந்து எழுவதும், அமிழ்வதுமாய் அவளைப் பலமிழக்கச் செய்வதாய்...!

நந்தா அவள் புறம் திரும்பிய போது, ஒரு பிரளயம் சுழன்று, எதிரே கண்முன் நிற்பது போலிருந்தது.

விழிகளில் யோசனையோடு நயனியையே பார்த்துக் கொண்டிருந்த மனுஷ்நந்தன், ''என்னவோ பேசணும்னு சொன்னியே? பேசு!... இப்பவாவது அதுவும் இத்தனை வருஷம் கழிச்சி, இன்னைக்காவது என்னோட பேசணும்னு தோணிச்சே!'' என்றான் குரலில் விரக்தி கலந்த சீற்றத்துடன்.

எண்ணங்களில் நூறு வினாக்களுடனும், கண்களில் நூறு ...னாக்களுடனும் நிமிர்ந்த நயனி, அவனை நிமிர்ந்து ...ார்க்கவும் தைரியமின்றி சோர்ந்த குரலில், ''சாரி மனு!'' ...ன்றாள் கண்கள் பனிக்க.

வேகமாக நிமிர்ந்த அவன் முகம், கோபத்தில் சிவந் ...ந்தது. ''எதுக்கு? என்னை அவமானப்படுத்தி விட்டு ...ாக்கம் கூடக் கேட்காமல் போனியே அதுக்கா? இல்லை... ...வோட வலி என்னங்கறதை, ரணமா எனக்குப் புரிய ...ியே அதுக்கா?'' குரல் நக்கலாக வந்தது.

...வனுக்கு எப்படித் தன்னைப் புரிய வைக்கப் போகிறோம் ... தவிப்பும், சுய பச்சாதாபமும் மேலிட, முகத்தைக் ...ால் மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள் நயனி.



தன்னை அறியாமல், அவளை சமாதானப் படுத்த எழுந்த மனுஷ்நந்தன், எழுந்த அதே வேகத்திலேயே அமர்ந்தான். அவள் அழுது முடிக்கட்டும் என்று காத்திருக்க ஆரம்பித்தான்.

நிமிடங்கள் யுகங்களாகின. சிறிது நேரம் கழித்து தன்னை சீர்படுத்திக் கொண்டு நிமிர்ந்தாள் நயனி. அவளுடைய அழகிய விழிகள் சிவந்து சொல்லில் புரியாத பல சோகங்களை, அவளுடைய விழிகளின் பாஷை அவனுக்குப் புரிய வைத்தது. அவள் அழுத நீரில் அவளுடைய குற்றங்கள் கரைந்து போனது போல் தோன்றியது நந்தாவுக்கு!

அவன் பார்வை மாறி, கனிந்த விதம் புரிந்து பேச ஆரம்பித்தாள் நயனி. தொண்டையைச் செருமியவள், ''நான் ஆரம்பத்துல இருந்து சொன்னாத் தான், என் மனசு உங்களுக்குப் புரியும்... நான் உங்களை முதன் முதலா பார்த்த அந்த நிமிஷமே... உங்களை என்னை அறியாமலேயே விரும்ப ஆரம்பிச்சேன். என் மனசை, உங்ககிட்ட பறி கொடுத்தேன்'' என்றபோது நந்தாவின் விழிகள் கூர்மையாகி, உள்ளம் பரவசமானது.

பிறகு, தங்கள் கல்யாணம் முடிந்தவுடன், தன்னுடைய எதிர்பார்ப்பும், அவனுடைய அன்புக்காக தான் ஏங்கியதைப் பற்றியும் அவன் தன்னை நெருங்காததையும் அவனுடைய விலகலைப் பற்றியும், தாங்கள் பிரிந்த அன்று நடந்த மாமியார், மாலினி இருவரின் பேச்சும், கடைசியாக, இன்று ஊரில் மாலினி அளித்த உண்மையான விளக்கத்தையும் தணிந்த குரலில், தன் விரல்களைப் பார்த்துக் கொண்டே மெதுவாகச் கூறி முடித்தாள் நயனி.

அதன் பின்பும், சிறிது நேரம் அங்கே மவுனமே நீடித்தது அவள் கூறிய அனைத்தையும், கைகளைக் கட்டிக் கொண்(

ஒரு அலைப்புறுதலுடன் கேட்டுக் கொண்டிருந்த மனு, திடீரென்று திரும்பினான்.

"என்னைப் பத்தி எவ்வளவு கேவலமா நினைச்சிட்டு இருந்திருக்கே!... நீ சின்னப் பொண்ணாச்சேன்னு... என்னை அறியாம காயப்படுத்திடுவேனோன்னு நினைச்சி... உன்னை, தாங்குவியோ, இன்னும் கொஞ்சம் நீ என்னைப் புரிஞ்சிக்கிட்டதுக்கு அப்புறமா உன் மனசையும் அறிஞ்ச பிறகு உன்னோட... சே!" தடைப்பட்டன வார்த்தைகள்.

அவன் வார்த்தைகள், மரண அடியாய் அவள் இதயத்தில் விழுந்தது. ஒரு நீண்ட கோப மூச்சுடன் நிமிர்ந்தவன், அவளைப் பார்த்த பார்வையில் வேதனை மிக, "அப்படின்னா, இப்பவும் உண்மையான அன்பு காரணம் இல்லை?... உனக்கு என்னைப் பத்தித் தெரிஞ்சுக்கறதுக்கு, யாரோ ஒரு பெண்ணோட விளக்கம் தான் தேவையா இருந்திருக்கு... அந்த அளவுக்கு நீ என்னை விரும்பி ருக்கே! இப்பவும் நாம் கை சொடுக்கினா, இவன் வந்து ம காலிலே விழுவான்னு எதிர் பார்க்கறே?... இல்லை!" றான் கோபத்தில் கண்கள் சிவந்து முகம் பளபளக்க.

"இல்லை மனு! சத்தியமா அப்படி இல்லை, நான் உங்களை ரா நேசிக்கிறேன். உங்களைப் பத்தி மாலினி சொன்னதை , தப்பா புரிஞ்சிட்டதாலே தான், என்னோட ஈகோவை ட்டு வந்து, என்னால பேச முடியலை. எத்தனையோ டங்களுக்காக, வெளியே அழுதா வெட்கம்னு, விளக்கை ளச்சிட்டுத் தனிமையிலே நான் அழுதிருக்கேன். ளப் புரிஞ்சுக்கங்க மனு ப்ளீஸ்!" என்ற நயனி ஏதோ வந்தாற்போல் வேகமாக நிமிர்ந்தாள்.



அன்று தான் பார்த்த கவிதைகளை எண்ணி, கண்கள் பனிச்சிட்டன. "அன்னிக்கு, உங்க பீரோ லாக்கர்லே நான் பாத்த அந்த தந்தப் பெட்டியும், அதுல இருந்த கவிதைகளும், நீங்க யாரோ ஒரு பெண்ணை விரும்பறீங்கன்னு, என் மனசுக்குப் புரிய வச்சது" என்றாள் நயனி அழுகையுடன்... "அதுவும் என்னோட முடிவுக்குக் காரணம்னு சொல்லலாம்" என்றாள் சோர்வாக. ஒரு திடுக்கிடலுடன் திரும்பிய அவன் பார்வை, அவளைக் கிழித்துக் கூறு போட்டது. சீறலான மூச்சு வெளிப்பட்டது நந்தாவிடமிருந்து!

"என்ன? என்னை உளவு பாத்தியா?... என்னைப் பற்றி எவ்வளவு கேவலமா நினைச்சிட்டு இருந்திருக்கே? யாரோ ஒரு பெண்ணை நான் விரும்பினேனா? அது யார்னு தெரியுமா?" என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

"உளவு பாக்கலை! மாலினி சொன்னது உண்மையான்னு தெரிஞ்சிக்கத்தான் பார்த்தேன். அதில் தான் பக்கம் பக்கமா வர்ணிச்சு, உங்க மனசுல இருந்த காதலைப் பத்தி எழுதி இருந்தீங்களே... அதனால தான் நான் எங்க வீட்டுக்குப் போனேன்" என்றாள் நயனி பொருமலுடன்.

"எல்லாக் கடிதத்தையும் பாத்தியா?" என்ற அவன் குரலில் இருந்த பாவனை புரியாததாய் இருந்தது.

"எல்லாம் படிக்கலை... அதான் முதல் இரண்டு பக்கத்திலேயே படிச்சேனே! அவ இல்லாம, உங்க வாழ்க்கையே இல்லைன்னு புலம்பி எழுதி இருந்ததை... சே!" என்றாள் நயனி கோபத்துடன்.

"ஏய்" அவன் விரல்கள், அவளைப் பற்றித் திருப்பின. கண்கள் சிவந்து மின்ன பற்களைக் கடித்தவன், அவளின்

மருண்டு விழித்த முகத்தைக் கண்டதும், தன்னையே வெறுத்துத் திரும்பினான்.

வேகமாகத் தன் பீரோவின் அருகில் சென்றவன், இடியாய் அதைத் திறந்து, அந்தப் பெட்டியை எடுத்து வந்து, படுக்கையில் அவள் முன் போட்டான். அவனுடைய பார்வை அவளைக் கொன்றது... தீப்பிழம்பாய் மாறி, அவளைச் சுற்றிலும் காட்டுத் தீயாய் சுழன்றது. அந்த வெப்பம் தாங்க முடியாமல் குனிந்து, அந்தப் பெட்டியிலிருந்த கடிதங்களை வெளியே எடுத்த நயனியின் விழிகள் தெறித்து விடும் போல் விரிந்தன.

கடைசியாக, அடியில் இருந்த ஒரு வண்ணக் காகிதத்தில், "என் ப்ரியமான தேவதைக்கு... என் உயிரில் கலந்த நயனுக்கு... ப்ரியங்களுடன் நந்தா!" என்று எழுதி இருந்தது. அந்த வரிகள் அவள் இதயத்தை சுக்கு நூறாய் உடைத்தது. அவனுடைய பிரியம் புரிந்தது... ஆனால் வெகு நாட்கள் தாமதமாய்!

நந்தா ஜன்னலருகில் சென்று நின்று, வெளியில் தெரிந்த இருட்டை வெறிக்க ஆரம்பித்தான். அவனுடைய மவுனம், அவளை சவுக்காய் சுழற்றியது. அப்படியே தரையில் சரிந்து அமர்ந்து, கைகளில் முகம் புதைத்து அழுதாள் நயனி. ஆற்ற முடியாத சோகத்தை, அவள் மனம் தத்தெடுத்துக் கொண்டது. கண்ணீரில் கரைந்து, விழியின் வழியே உயிரும் உருகி வழிந்தது.

தன்னை, சிறு பெண் என்ற காரணத்துக்காகவே, தொடத் தயங்கிய அவன் காதலின் வலிமை புரிந்து மனமெங்கும் ரணமாய்... அவள் அழ ஆரம்பித்த உடனே திரும்பிய நந்தா, அதுவரை முகத்திலிருந்த இறுக்கம் போய்விட, மின்னலென



அவளருகில் வந்து அவளைப் பற்றி எழுப்பி, தாங்க முடியாமல் அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

அவளுடைய கண்ணீரும், அவனுடைய மனக்காயத்துக்கு இதமான மருந்தானது. கண்ணுக்குத் தெரியாமல், இருவருக்கிடையேயும் எழுப்பப்பட்டிருந்த ஒரு மாயச்சுவர், அந்தக் கணமே பொடிப்பொடியாக உதிர்ந்து சரிந்தது.

இது இதயங்கள் நடத்தும் மவுனப் பரிபாஷை! உடைந்த மனங்கள் இரண்டும் ஒன்று சேர்ந்தது. வெகு நேரம் விசும்பிய நயனியை, ஆதரவாய் அணைத்து, இதமாய் உச்சியில் முத்தமிட்டு, முகம் நீவி, முதுகு தடவி, கன்னம் வருடி, தலைகோதி சமாதானப் படுத்தியவன், அவளைப் படுக்கையில் அமர வைத்து, தானும் அமர்ந்து அவளைத் தன் மேல் சாய்த்துக் கொண்டான்.

அவள் சமாதானமாகி நிமிர்ந்ததும், அவளை இழுத்து அணைத்து முரட்டுத் தனமாக முத்தமிட்டான். பிறகு கலைந்து போய், அவளுடைய முன் நெற்றியில் பறந்த முடிகளில் விரல் சுற்றி அவன் சில்மிஷம் செய்யவும், செல்லமாகச் சிணுங்கிய நயனி அவன் தோளில் முகம் பதித்துக் கொண்டாள்.

அவனை நோக்கி காதலுடன் நிமிர்ந்து, "நீங்க எப்ப என்னை முதன் முதலா விரும்ப ஆரம்பிச்சீங்க?" என்றாள் கொஞ்சலாக.

"முதல் நாளே... உன் பிறந்த நாளன்னிக்கு முதல்லே உன்ன பார்த்த அந்த நிமிஷமே... போதுமா?" என்றான் கேலியாக.

அவன் விரல்கள், அவள் உடலில் கோலமிட்டுக் கொண்டிருந்தன. "அப்புறம்...?" என்ற நயனியின் இதழ்கள் போதும் என்பது போல் மூடப்பட்டன. அவனுடைய தாபம்

மிருந்த கண்களின் பாஷை புரிந்து அவள் உடல் முழுவதும் சிவந்தது.

இத்தனை நாள் காதலெனும் தீயில் வெந்து, தனிமை எனும் தகிப்பால் தவித்திருந்த மனுவுக்கு அவள் அன்று இனிய மருந்தானாள்.

சில நேரம் அவளை விழவைத்தவன், சில நேரம் அவளை அழ வைத்தவன், இன்று அவளை ஆட்சி செய்தான். அந்த இரவு அவர்களின் உறவுக்குப் பஞ்சணை விரித்தது.

அன்றொரு நாள், அவளைத் தீண்டிச் சென்ற தென்றல், இன்ற தெம்மாங்கை ஏந்திவர அவளைத் தனக்குள் ஏந்திக் கொண்டான் மனுஷ்நந்தன். அந்தத் தென்றல் இன்று, சரசமாய் அவன் முகத்தில் மோதி சப்தமின்றி முத்தமிட்டது.

மலையமாருதமாய் அறையினுள் நுழைந்த பனிவாடைக் காற்று வெட்கப்பட்டு திரைச் சீலைகளால் தன் கண்களை மூடிக் கொண்டது. இரவின் புன்னகையாய் நிலவு ஒளிர்ந்து கொண்டிருந்தது.